# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



பாரதிதாசன்

ஊசி 2 குத்து 12

★ செப்டம்பர் 1964 ★

இதனுள் :

சீர்கேட்டின் வித்து

பித்தர்கள் நாடு

செவ்வாய் உலகில் சோதிட

திருப்புகழ் பக்தி நூலா ?

தேசீயத் திருப்பணி

திருவள்ளுவர் சமயம்

கவிக்கோமகன் டென்னிசன்

பண்டைத்தமிழக நாணயங்கள்-II

—இன்னும் ப

50 காசு

# குத்தூசி

[ஆசிரியர் : சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்

## அக்டோபர் முதல்
## 3-ஆம் ஆண்டு துவக்கம்

புதிய பொலிவு ! புதிய சிறப்புகள் !!

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய்.

நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அநுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# தமிழ் நூல் நிலையம்

84, ஷெணய் நகர் : : சென்னை-30

| | | ரூ. காசு |
|---|---|---|
| 1. | பிச்சைக்காரி (சிறு கதைகள்)<br>சா. குருசாமி. | 2·00 |
| 2. | பன்னீர்ச்செல்வம் (நாடகம்)<br>சா. குருசாமி. | 0·40 |

ரூ. 2·40 M. O. அனுப்பினுல் தபாற் செலவு
இல்லாமல் அனுப்பப்படும்.

விற்பனையாளர் :

20 ரூபாய்க்குமேல் முன்பணம் அனுப்பினுல்
25% கழிவுடன் தபாற் செலவின்றி அனுப்பி வைக்கப்படும்.



அக்டோபர் 1964 முதல்

# குத்தூசி

## மூன்ருவது ஆண்டு

★

**விற்பனையாளர் தேவை:—**

| | |
|---|---|
| திருச்சி | கரூர் |
| ஈரோடு | பம்பாய் |
| சிதம்பரம் | திருவண்ணுமலை |
| திண்டுக்கல் | காஞ்சீபுரம் |

★

25 சதவிகிதம் கழிவு

இன்று இப்படி நடந்தால்?



''மெய்ப்பொருள் காண்பது அறிவு !

குத்தூசி

ஊசி 2 செப்டம்பர் 1964 குத்து 12

# சீர்கேட்டின் வித்து

இந்திய சமுதாயம் இன்று பல துறைகளிலும் சீர்கெட்டுப் போயிருக்கிறது. இதற்குக் காரணம் இன்றைய ஆட்சிதான் என்று கூறுவது தவறு. இன்றுள்ள நிலையில் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் லஞ்சமும், பதுக்கலும், பொய்யும், சுரண்டலும், கொள்ளை லாபமும், இன்னும் பலவும் நிகழ்ந்துகொண்டுதானிருக்கும். இவற்றின் விளைவாக விலைவாசியும் ஏறிக்கொண்டுதானிருக்கும்.

''வேறு எந்த நாட்டில்தான் விலைவாசிகள் ஏறவில்லை?''

''லஞ்சத்தை மிகைப்படுத்திக் கூறிக்கொண்டிருப்பது தவறு."

''உணவு உற்பத்தியைப் பெருக்கி, மக்கட் பெருக்கத்தைக் குறைத்தால் இக்குறைகள் நீங்கிவிடும்."

—இம்மாதிரியெல்லாம் ஆளும் கட்சியாரும் பிற பொருளாதார நிபுணர்களும் பேசுவதும்—எழுதுவதும் பயனளிக்காது.

ஆளும் கட்சியார் அரும்பாடு படுகின்றனர்; புதிது புதிதாக சட்ட திட்டங்கள் கொண்டுவருகின்றனர். ஆனாலும் கடுகளவுகூடப் பயன் தரவில்லை.

காரணமென்ன? இந்தியர்களின் இயற்கைப் பண்பே இத்தகைய இழிவானதுதானா? மற்ற நாட்டாரெல்லோரும் பிறவியிலேயே உயர் பண்பு பெற்றவர்களா?

வளர்ப்பும், படிப்பும் ஒரு மனித சமுதாயத்தை உருவாக்குகிறது என்பது உண்மைதான். ஆனால் சமுதாய அமைப்பை உருவாக்கும் பொறுப்பின் பெரும்பகுதி அந்தந்த நாட்டின் அரசாங்கத்தையே சார்ந்ததாகும்.

சோஷலிசப் பாதையில் உலகுக்கே வழிகாட்டிக்கொண்டு வீர நடை போட்டு நடந்துகொண்டிருக்கின்ற ருஷ்யாவில் (தனிப்பட்ட மக்களிடம் சிற்சில குறைபாடுகள் இருந்தாலும்) சமுதாயத்துறையில் மேற்கண்ட குறைபாடுகள் இல்லை. இதை சோஷலிச (ருஷ்ய) எதிரிகள் கூட ஒப்புக்கொள்கின்றனர். அங்கு பிச்சைக்காரர் இல்லை; வேலை கிடைக்காதார் இல்லை; விபசாரம் இல்லை; திருட்டு இல்லை.

உணவு பற்றாக்குறை காரணமாக ருஷ்யாவும் இந்தியாவைப் போலவே, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது. இதில் தவறு அல்லது மானக்கேடு எதுவுமில்லை. பேர்தர்த பொருள்களை இறக்குமதி செய்வது உலகப் பொருளாதாரத்தின் அரிச்சுவடி. இது நிற்க. ஏன் ருஷ்யாவில் மட்டும் இக்குறைகள்—சமுதாயப் பெருங்கேடுகள், இல்லை?

அங்குதான் சோஷலிசத்தின் விதை சரியான இடத்தில், ஊன்றப்பட்டுப் பாதுகாத்துச் செடியாக்கி வளர்த்துவரப்படுகிறது.

"தனி உடைமைப் பற்று இல்லாவிடில் உற்பத்தியில் ஊக்கமிருக்காது; மனித முயற்சி முன்னேறிச் செல்லாது; நாட்டின் செல்வ நிலை வளர்ச்சி அடையாது"—என்றெல்லாம் கூறி வந்தவர்களுக்குச் சரியான அடி கொடுத்து சோஷலிசத்தின் வெற்றிச் சின்னமாக, எல்லாத்துறைகளிலும் முதல் இடம் பிடித்துக்கொண்டு ராக்கெட் வேகத்தில் முன்னேறிச் செல்கிறது, ருஷ்யா!

இந்தியா மக்கள் தொகை பெருகியுள்ள நாடு. பல சாதிகள், பல மதங்கள், பல்வேறு பிரிவுகளைக் கொண்ட நாடு. பல நூற்றாண்டுகளாக வெளி நாட்டார்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நாடு. மதம் காரணமாக அறியாமையிலும், குருட்டு நம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் நாடு. இத்தகைய நாட்டில் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ சமுதாய அமைப்பும் அம்மாதிரியான உயர்ந்த வாழ்க்கைத் தரமும் எல்லா மக்களுக்கும் கிடைக்குமாறு செய்ய முடியாது. ஆதலால்தான் அமெரிக்காவுக்குப் பிடிக்காத சோஷலிச வாழ்க்கை முறையை ஆளும் கட்சி ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆனால் இதன் அடிப்படையை விட்டுவிட்டு வெறும் மணல்மீது சுவர் எழுப்பிக்கொண்டிருக்கிறதே!

துவக்கத்தில் காட்டிய சமுதாயக் கேடுகளின் அடிப்படை என்ன?

தனி உடைமை ஆசைதான். வசதியான வாழ்க்கை, முதுமையில் பாதுகாப்பு, மனைவி-மக்கள் போன்றவர்களின் படிப்பு, இருக்கை, உணவு, உடை, மருத்துவ வசதிகள்—ஆகியவற்றிற்காக மனிதன் அல்லும் பகலும் அலைந்து திரிந்து தேனீயைப் போல் பறந்து பறந்து பொருள் சேர்க்கிறான். இவ்வளவுக்கும் தேவையானதற்கு மேலும்

சேர்க்கிறான். இது ஒரு பெரு நோய்! இதுதான் எல்லாத் தீங்குகளுக்கும் அடிப்படை.

மேற்கண்ட தேவைகளின் பொறுப்பை யெல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமானால், மனிதனுக்குத் தன் நுகர்ச்சி தவிர, மற்றத் தேவைகள் குறைந்துவிடும். தன் நுகர்ச்சிக்காக ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில், பணம் சேகரித்துச் சேமித்து வைக்க வேண்டிய தேவையும் இருக்காது. உல்லாசப் பொழுதுபோக்கையும் (கடற்கரை, பார்க்-போல) எல்லோருக்கும் பொதுவானதாக-கட்டணம் இல்லாததாக, ஆக்கிவிட்டால் பணப் பேராசை மறைந்துவிடும்.

குடும்பத் தேவைகளை யெல்லாம் அரசாங்கம் நிறைவேற்றிவைக்க வேண்டும்; தெருக்கள், சுகாதாரம், குடிதண்ணீர், வெளிச்சம் — முதலியவற்றின் பொறுப்புக்களை நகரசபைகள் ஏற்றுக்கொண்டிருப்பதுபோல.

இதைச் செய்துவிட்டால், தனிப்பட்ட எவரும், வீடு, வாகனம், நகை, பணம் முதலியவற்றைத் தமக்காகத் தேடிக்கொள்வதிலோ, தம் மனைவி–மக்களுக்காகத் தேடி வைப்பதிலோ கருத்துச் செலுத்த மாட்டார். அவரவர் ஆயுளுக்குப் பிறகு, அவர் தேடிய சொத்துக்கள் யாவும் அரசாங்கத்தின் பொது உடைமை யாகிவிடும் என்று சட்டமிருந்தால், உடைமை ஆசை அற்றுப்போய்விடும். அவரவர் மக்களுக்குப் போதிய கல்வியும், அதற்கேற்ற வேலையும் தருவதோடு பெற்றோரின் கடமையும் கவலையும் முடிந்துவிடும். இந்த இரு பொறுப்புக்களைக் கூட (ருஷ்யா மாதிரி) அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், வருமான வரி, மரண வரி–போன்ற வரிகளுக்கும் தேவையிருக்காது.

இவை மட்டுமல்ல. பதுக்கல், லஞ்சம் போன்ற கேடுகளுடன், திருட்டு, கொலை, கொள்ளை, போன்ற சமுதாயக் குற்றங்களும் அகன்றுவிடும்.

இதைச் செய்வதானால், 'உழைக்காதவனுக்கு உணவில்லை' என்ற அடிப்படையிலும், தேவைக்கு மேற்பட்ட சொத்துக்கள் யாரும் அவரவர் ஆயுளுக்குப் பிறகு பறிமுதல் செய்யப்படும் என்ற அடிப்படையிலும், அரசியல் சட்டம் தலைகீழாக மாற்றி அமைக்கப்படவேண்டும்.

எவ்வளவு குற்றங் குறை இருந்தாலும், எல்லாப் பொது உற்பத்திகளையும் பங்கீடுகளையும், பணச்செலாவணித் துறைகளையும், அரசாங்கத்தின் பொது உடைமைகளாக்கிவிட வேண்டும்.

இதைச் செய்தாலொழிய தனி உடைமை ஆசை உள்ளவரையில் அதன் விளைவுகளாகிய மேற்கண்ட தீமைகளை ஒழிக்க முடியவே முடியாது.

சீர்கேட்டின் வித்து எது என்பதை உணராதபடி வெறும் வாய்ப்பந்தல் சோஷலிசம் பயன்தராது. ★

# "பித்தர்க்ள் நாடு"

மலையாளப் பகுதியின் பார்க்காமை (தீண்டாமையின் அண்ணன்!)க் கொடுமையைக் கண்ட சுவாமி விவேகானந்தர், அதை ஒரு "பித்தர்கள் நாடு" (Land of Lunatics) என்றார். இக்கொடுமைதான் அங்கு கிருஸ்து மதமும் இஸ்லாம் மதமும் முளைத்து ஓங்கி வளர்வதற்குக் காரணமாயிருந்தது.

இந்தியாவிலேயே ஆண்–பெண் இருபாலாரும் மிகுதியாகக் கல்வி கற்றுள்ள மாநிலம் கேரளந்தான். விடாமுயற்சியிலும், உழைப்பிலும், சகிப்புத்தன்மையிலும் முன் நிற்கும் மக்களும் கேரள மக்களேயாவர். இந்தியாவின் எப்பகுதியிலும் தமிழ் நாட்டுச் சோம்பேறிகளை (பிச்சைக்காரர்–சாமியார்கள்–சாதுக்கள்)ச் காணலாம். ஆனால் மலையாளத்து சோம்பேறிகளைக் காணமுடியாது.

சந்திர மண்டலத்தில் முதல் இந்தியன் குடியேறுவதாயிருந்தால் அவன் ஒரு மலையாளி அல்லது தஞ்சை மாவட்ட அக்கிரகார வாசியாகத்தான் இருக்க முடியும். அத்தகைய பாராட்டத்தக்க முற்போக்கு! உழைப்பு!! முயற்சி!!!

இந்தக் கேரளம் இதில் மட்டுமல்ல; அரசியல் துறையில்கூட இந்தியாவுக்கு ஒரு படிப்பினையாக,—அபாய அறிவிப்பாக—க் காட்சி தந்துகொண்டிருக்கிறது.

இங்கு காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், முஸ்லிம் லீக், சுதந்தரா—போன்ற பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. என்றாலும் இம்மாநிலத்தின் அரசியல் முழுதும் சாதி–மத அடிப்படையைக் கொண்டதே ஆகும்.

நாயர், ஈழவர், ரோமன் கத்தோலிக்கர், முஸ்லிம்–ஆகிய சாதி–மத அடிப்படையில்தான் இங்கு அரசியல் நடந்து வருகிறது. தேர்தல் பிரசாரமும் இந்த அடிப்படையில்தான்.

∴ப்ரான்ஸ் மாதிரி அடிக்கடி மந்திரிசபை மாறிக்கொண்டிருப்பதும் இம் மாநிலத்தில்தான். இதுவரையில் இரண்டு தடவை இடைப் பொதுத் தேர்தல்கள் நடந்துவிட்டன; அடுத்த இடைப் பொதுத் தேர்தலும் அடுத்த ஆண்டில் வரவிருக்கிறது.

வறுமையும், சாதி-மத வெறியும் மிதமிஞ்சினால் என்ன ஆகும் என்பதற்கு கேரளம் நிலையான அறிவிப்பு (Warning) ஆகும். ஒரே பொதுமொழி இருந்தால்தான் மக்களிடம் ஒற்றுமை நிலவும் என்பதை முழுப் பொய்யாக்கிக்கொண்டிருக்கும் மக்களும் மலையாளிகளேயாவர்.

பொருளாதார விடுதலை உணர்ச்சியின் அடிப்படையில்தான் மக்களை ஒன்றுபடுத்த முடியும் என்ற கொள்கையையும் பொய்யாக்கிக், கொண்டிருப்பது, கேரளந்தான். சோஷலிசக் கொள்கையை ஒப்புக் கொள்கின்ற மக்கள் இங்கு பல லட்சக்கணக்கில் இருக்கின்றனர்; ஏனெனில், இந்தியாவிலேயே மிகக் குறைந்த வாழ்க்கைத்தரம் பெற்றுள்ள மக்கள் கேரள மக்களேயாவர். அப்படி யிருந்தும் இங்கு நிலையான ஆட்சி ஏற்பட முடியவில்லை. கேரள மக்கள் தங்கள் மாநிலத்திலிருப்பதைக் காட்டிலும் மிகுதியாகப் பல மாநிலங்களில் பரவிக்கிடப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இதை யெல்லாம் ஒன்று கூட்டிப் பார்த்தால் ஒரு சிறந்த உண்மை கிடைக்கும். அதுதான், அரசியல்–பொருளாதார விடுதலை பெற்றாலும்கூட சமுதாயத்தில் சாதி–மத வெறியுணர்ச்சிகள் நீடிக்கும் வரையில் மக்களிடையே ஒற்றுமை நிலைக்காது–என்பதாகும்.

இந்தப் படிப்பினையை முன்வைத்து இந்தியாவின் மற்ற மாநிலங்கள்–சிறப்பாக டில்லி அரசு-பொருளாதார அய்ந்தாண்டுத் திட்டத்தைப் போலவே, ஆனால் அதைவிட அவசரமான வேலையாக, சாதி-மத ஒழிப்புக்கான அய்ந்தாண்டுத் திட்டம் ஒன்றை வகுத்து, உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். எந்த உருவத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும், சாதி–மத உணர்ச்சிகள் வீட்டுக்கு வெளியே இடம் பெறக்கூடாது. இந்த இரண்டு கேடுகளையும் ஒழிப்பதற்கான சட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

இதைச் செய்யத் தவறினால், இந்தியாவின் மற்ற மாநிலங்களும் விரைவில் கேரளம் ஆகிவிடும் என்று எச்சரிக்கின்றோம்.

''போனால் போகட்டும்! அதற்காக, சாதி–மத வெறிகொண்ட 100–க்கு 99 விகிதமான வாக்காளர்களை எங்கள் எதிரிகளாக்கிக் கொள்ளமாட்டோம்,'' என்று ஆளும் கட்சி கூறுமேயானால், இந்நாட்டு மக்கள் ஆட்சி முறைக்கு முடிவுகாலம் வரப்போகிறது என்றுதான் கூறுவோம்.

"உனக்கு சக்தியும் உறுதியும் வளர வேண்டுமானல், இந்த உலகில் நீ முக்கியமானவனல்ல என்ற உணர்ச்சி இருக்கவே கூடாது. நீ முக்கியமானவன் என்பதை உணர வேண்டும். உனக்குத் திறமையும் அறிவும் உண்டு என்பதை உணர வேண்டும். பிறருக்குப் பயன் தரும் வகையில் இவற்றை உன்னால் பயன்படுத்த முடியும் என்பதையும் உணரவேண்டும்."

—*டோரா ஆல்பர்ட்*

# மேல்நாடுகளில் உல்லாச வாழ்க்கை

பத்திரிகைகளை படிப்பதிலும் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்வதிலும் ஐரோப்பாவில் முன்னணியில் இருப்பவர்கள் ஜெர்மானியர்களே. சேமிப்பதிலும் ஜெர்மானியர்கள் அதிகம் அக்கறை காட்டுகின்றனர். எதிர்காலத்தைப் பற்றி கவலையே இல்லாமல் உல்லாச வாழ்க்கையை நடத்துபவர்கள் பிரெஞ்சுக்காரர்களும் இதாலியர்களுமே. இத்தகைய புள்ளி விவரங்களை ஜெர்மன் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று சேகரித்து வெளியிட்டுள்ளது.

ஐரோப்பியர்கள் எப்படி வாழ்க்கையை நடத்துகிருர்கள்? ஆயிரக்கணக்கானவர்களிடம் கேள்விகள் கேட்டுப் பதில் பெற்று ஜெர்மன் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று விவரங்களைத் தொகுத்து புத்தகமாக வெளியிட்டிருக்கிறது.

ஐரோப்பாவிலேயே மிகவும் தாராளமாகப் பழகி விருந்தினர்களை உபசரிப்பவர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களே. இவர்கள் மாதம் ஒரு முறையாவது தங்கள் வீட்டில் விருந்து வைக்காமலிருப்பதில்லை. ஜெர்மானியர்களில் 100–க்கு 33 பேர் பத்திரிகைகள் படிக்கும் வழக்கமுள்ளவர். இவர்களுக்கு அடுத்தபடியாக பிரிட்டிஷ்காரர்களைச் சொல்லலாம். நெதர்லாந்தில் 28 சதவிகிதம் பேரும், பிரான்ஸில் 24 சதவிகிதம் பேரும், இதாலியில் 12 சதவிகிதம் பேரும் பத்திரிகைப் பிரியர்கள்.

டெலிவிஷன் பிரிட்டனில்தான் அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. இசையில் மிகுதியாக ஈடுபடுபவர்கள் டச்சுக்காரர்களும் ஜெர்மானியர்களும் ஆவர். இதாலியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் அடிக்கடி சினிமா பார்க்கிருர்கள். ஜெர்மானியர்களில் பெரும்பாலோர் மாடிகளில் உட்கார்ந்து ஜன்னல்கள் மூலம் தெருவில் நடப்பதைப் பார்ப்பதில் தங்கள் ஓய்வு நேரத்தை செலவிடுபவர்கள். இதாலியர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் கூட இந்த ஆவல் இருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் இதில் நாட்டம் செலுத்துவதில்லையாம்; கச்சேரிகளுக்குச் செல்வதிலும் புத்தகங்கள் படிப்பதிலும் இவர்களுக்கு ஆர்வம் அதிகம். ஜெர்மானியர்கள் பிரயாணம் செய்வதில் மிகுந்த விருப்பம் காட்டுகின்றனர்.

சேமிப்பதில் அக்கரை காட்டுபவர்கள் ஜெர்மானியர். பங்கு மார்க்கெட் வியாபாரம், இன்ஷ்யூரன்ஸ் இவைகளில் அதிக அக்கரை காட்டுபவர்கள் ஆங்கிலேயர்கள். ஃபிரெஞ்சுக்காரர்களும் இதாலியர்களும் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாமல் உல்லாசமாகக் காலம் தள்ளுபவர்கள். ஒரே ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுத்துக்கொண்டாலே போதும் என்று கருதுபவர்கள் டச்சுக்காரர்கள்.

பெல்ஜியர்களும் டச்சுக்காரர்களும் தங்கள் அக்கம் பக்கத்தினரைப் பற்றி நன்கு அறிந்து கொண்டவர்கள். இதாலியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர், இவர்களைக் காட்டிலும் வெளிநாட்டுப் பிரயாணங்களை அதிகமாக விரும்பி மேற்கொள்பவர் ஜெர்மானியர்களே. (யூ. பி. எஸ்.)

ந. இராமலிங்கம்

# அறிவியல் பேசிய ஆரணங்கு

இலக்கியம் என்றென்றும் வாழ வேண்டுமாயின் செறிவுடன் மிளிர்தல் வேண்டும். வெறும் கற்பனை மட்டும் அடிப்படையன்று. பொருளற்ற சொல்லுக்கும், வேண்டா அணியழகும், யாண்டும் காணப்பெறாத, காண்டற்கியலாத தொடர்பற்ற நிகழ்ச்சிகளெல்லாம் ஆக்கம் தராது. ஆதலின் செம்மைசான்ற வாழ்வியல் உண்மைகளைக் கருவாகக்கொண்டு மற்றைய நலங்கொழிக்க எழும் இலக்கியங்களே அழியா மரபுடையன. நிறைந்த அன்பும், நெறி திறம்பா ஆற்றலுமகொண்ட இன்ப வாழ்வினைப் புலப்படுத்தும் பொற் பேழைதான் சங்கம் சான்ற அகப்புற இலக்கியங்கள்!

பண்டைக் காலத்தில் ஆண்களோடு பெண்களும் இணையாக விருந்தே இல்லறம் நடத்தினர் என்றே அறிகின்றோம். ஒளவையார், பொன் முடியார், வெள்ளி வீதியார் முதலான பெண்பாற் புலவர்கள் தமிழாய்ந்தனர் என்ற வரலாறுகள் எல்லாராலும் நன்கு உணரப்படும். வீடு விளக்கமுற்றால்தான் நாடு நலம்பெற ஏதுவாகும். வீட்டினைக் கட்டியாளும் இல்லத்தரசிகள் கல்வி, கேள்வி முதலான செம்பொருட் செல்வத்தோடு அமையர்து அறிவியல் துறையிலும் சிறந்தனராயின் அவர் தம் வாழ்க்கையின் மாண்பே மாண்பு!

உடல் நலம் பெறாது போயின் மருத்துவரை நாடாது கோயிற் பூசாரியினைக் கொண்டு திருநீறு பெறுதலும், ஆடு, கோழி போன்ற பலி பொருள் வழங்கி வழிபாடு ஆற்றுதலும், குறி பார்த்தலும், உடுக்கடித்து சாமியை வரவழைத்தலும் முதலான கண்மூடி வழக்காறுகள் நாகரிகம் மலிந்த இற்றை நாட்களிலும் காணபதொன்றும். கல்லாரன்றிக் கற்றோரும் நம்பும் புதுமையே வியத்தற்குரியது. பெருமையும் ஆண்மையும் மேவிய ஒருவனே இவ்வாறெனில் பெண்மையும் மென்மையும் கொண்ட பெண்டிரைக் குறை கூறவேண்டா. மன்னன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்றாற் போல, ஆடவர் சென்றவழி பெண்டிரும் நடவாது என் செய்வர்?

மருந்தொன்று மறியாப் பூசாரி உடல்நலக் குறைவிற்கென நீறு (விபூதி) அன்றி வேறென்ன கொடுக்கவல்லான்? உடுக்கடித்துப்பாடி ஆடுதலன்றி யாதொன்றும் அறியானிடத்து வாழ்க்கையில் தோன்றும் இன்ப துன்பங்கட்கெல்லாம் 'மருந்து' வேண்டுவது கேட்போனின் மடமையையன்றே எடுத்துக் காட்டும்? அதைவிட 'நோய் நீக்குவேன்,' என்னும் பூசாரியின் வானளாவிய பொய்மையும் வெளிப்படும். மளிகைப் பொருள் வாங்குவோன் மளிகையிற்சென்று கேட்காது துணிக்கடையில் சென்று கேட்டால் அவன் திறம் எண்ணி நகைக்க மாட்டோமா? அவ்வாறே, நோயுற்ற ஒருவன்

மருத்துவரை நாடாது பூசாரியை நாடின் அவன் செயல் நகை விளக்கு மென்றே அறிவியல் வாதிகள் கூறுகின்றனர். பழமை விரும்பிகளே பயன் உண்டென்று வாய் கூசாது பொய் மொழி புகல்வர். இன்றைய அறிவியல் வாதிபோன்றே அன்றைய பெண்ணொருத்தியும் எண்ணினாள். அவள்கூறும் நன்மொழிகள் எக்காலும் இன்பந்தருவன.

வரைவு நீட்டித்த வழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தோழி தலைவியை நோக்கி, "உனது மெல்லிய தோள்கள் தலைவன் பொருட்டு நெகிழ்ந்திருக்க, வெறியாடும் பூசாரியோ முருகக் கடவுளால் வந்தது என்று கூறுகிறான். நம் தாயும் உண்மையென நினைக்கிருள். அப்பொழுது நம் வீட்டிலுள்ளாரது பெரிய நகைக்கிடமான செயல்களைக் 'காணும் பொருட்டு விரைந்து வருவானாக," என்னும் கருத்தமைந்த பாடலொன்று குறுந்தொகையில் 111-ஆம் செய்யுளாகக் குறிக்கப் பெற்றுள்ளது :—

''மென்றோ ணெகிழ்த்த
செல்லல் வேலன்
வென்றி நெடுவே
ளென்னு மன்னையும்
அதுவென உணரு
மாயி னுயிடைக்
கூழை யிரும்பிடிக்
கைகரந் தன்ன
கேழிருந் துறுகற்
கெழுமலை நாடன்
வல்லே வருக
தோழிநம்
இல்லோர் பெருநகை
காணிய சிறிதே."

—தீன்மிதி நாகன்

நகைதரும் செயலோ, அன்றி சுவைதரும் விருந்தோ நிகழ்ந்தால் ஒத்த நண்பர்கள் ஒருங்கிருந்து மகிழ்தலே இன்ப உணர்வுகளைப் பன்மடங்காய்ப் பெருக்கிக் காட்டும். அச்சிறப்பு அறிந்த தோழி நற்றுணையாகிய தலைவனும் நகைதரும் நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டுமென இயல்பாக விழைதலும், அவ்வழியால் தலைவன் விரைந்து வரைந்து கொள்ள வேண்டுமென்னும் குறிப்பும் நெஞ்சில் பதியும் நீர்மையன. அறியாத வேலன்தான் 'நெடுவேள்' என்றான். இளையளாயிருந்து மூத்த அன்னையும் பட்டுணர்வு யாதுமின்றி 'ஆம்' என ஒத்தூதினுல் பின்னர் 'பெருநகையே தோன்றும்' என்னும் அறிவியல் கூறிய தோழியின் கூற்று எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும் இன்பம் தருவதாகும்.

மேற்குறித்தவாறே நெடுந்தொகை செய்யுளொன்றும் கூறுகின்றது :

''மணங்கமழ் வியன்மார்
பணங்கிய செல்லல்
இதுவென அறியா
மறுவரற் பொழுதில்
படியோர்த் தேய்த்த
பலபுகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத்
தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர்
அதுவாய் கூறக்
...... ...... ......
...... ...... ......
...... ...... ......
இன்னுயிர் குழைய
முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனே
யானே எய்த்த

நோய்தணி காதலர்
வரவீண்
டேதில் வேலற்
குலத்தமை கண்டே

இப்பாடலின் கருத்து யாதெனின் 'நம்முடைய சுற்றத்தார் யாதும் இயைபில்லாத வேலனுக்கு அழிந்தமைகண்டு யான் உடல் பூரித்துச் சிரித்தேன் அல்லவா?' என்ருள்.

நெஞ்சம் பிணிக் கொண்ட காதல் நோய் நீங்க ஆடு கோழிகளோ பூசாரியின் மந்திர தந்திரங்களோ பயன்படா என்னும் கருத்தினை முத்தொள்ளாயிரம் அரண் செய்யும்.

அன்னையின் சிறுமை கண்டு அழுங்கிய தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. கோதைபால் மாறெதாருத்தி காதல் கொண்டனள். நெஞ்சத்தோடு நினைவையும் இழந்தனள். ஊண் மறந்து, ஊக்கமும் துறந்தனள். மங்கிய மகளின் தோற்றம் கண்டு அன்னை பெரிதும் கவன்றனள். யாது செய்வேன் என அயலாரைக் கேட்ட காலை நோயறியாது, "பேயால் வந்ததை வேலனே நீக்கவல்லான்", என இயம்பினர்.

வேலனும் களன் இழைத்து, உதிரம் தூவி மலர் பல சிந்தி, நீராட்டி, "நோயே! நீங்கு!" என்ருன். எனினும் நோய் அகலாதிருந்தது. இதன் காரணம் என்னவென வினவிய தோழிக்குத் தலைவி கூறுவாள்:—

"வென்று களங் கொண்டான் நெஞ்சிற் களங் கொண்டமையால், வேலன் களன் வீணேயென்க. நெஞ்சறியா அன்னையும் நோயறியா வேலனும் அகத்துள் புகுந்தானை நீராட்டி நீக்குவரோ", என இகழ்ந்துரைத்தனள். நயனும் பயனும் அமைந்த அப்பாடல் வருமாறு:—

"காராட் டுதிரம்தூஉய்
அன்னை களன் இழைத்து
நீராட்டி நீங்கென்ருல்
நீங்குமோ—போராட்டு
வென்று களங்கொண்ட
வெஞ்சினவேற் கோதைக்கென்
நெஞ்சங் களங்கொண்ட
நோய்."

இதுகாறும் கூறியவற்ருல் அறிவது, பண்டை நாட்களில் வெறியாடும் வழக்கம் உண்டென்பதும், அது கேலிக்குரியது என்னும் தோழி, தலைவி, முதலானோர் கூற்ருல் உணரலாகும் என்பதுமாகும். பெண்களும் அறிவியல் வாதிகளாக, எதையும் எண்ணிச் செய்யும் ஆற்றலுடையராய் இருந்தாலன்றி நாடு நலம் பெருது.

"இளைஞர்கள் தவருக நடக்கிருர்களென்ருல் சமுதாயம் அதைவிடத் தவருக முன்னரே நடந்திருக்கிறது என்பதே காரணம். நம் நடத்தைக்குத் தகுதியான போர்களும், அரசியல்வாதிகளும் நம்மக்குக் கிடைப்பது போலத்தான் இளைஞர்களும் கிடைப்பார்கள்".

—ஜே. பி. ப்ரீஸ்ட்லி

# உரைநடைத் துணுக்குகள்

[பாரதி தாசனின் கவிதைகளை மட்டுமே படித்திருப்பவர்கள் பலர். கவிதைகளைப்போலவே அவர்து உரை நடையிலும் கிண்டல் நிறைந்த பகுத்தறிவுப் பிரசாரத்தைப் பரக்கக் காணலாம். அரசாங்க ஊழியத்தில் இருந்தபோது "கிண்டற்காரன்" என்ற புனை பெயரில் பல கட்டுரைகளும், நகைச்சுவைத் துணுக்குகளும் எழுதி வந்தார். இவை, 1930 முதல் 1932 வரை நடந்த 'புதுவை முரசு' என்ற வாரத்தாளில் (இதன் ஆசிரியர் சா. குருசாமி; அச்சிட்டு வெளியிட்டவர் ம. நோயேல்) வெளி வந்துள்ளன. இது இன்று கிடைப்பதில்லையாதலால், இதன் தொகுப்பிலிருந்து சில கட்டுரைகளின் துணுக்குகள் மட்டும் திரட்டி இங்கு தரப்படுகிறது.]

தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதிலோ, தம்மைக் காத்துக் கொள்வதிலோ, எங்கள் பெண்கள், சொந்த முயற்சியும் சொந்த அறிவும் பயனில்லை என்று கருதிக் கடவுள் தலையில் பாரத்தைப் போட்டு விடுவார்கள்.

எங்கள் பெண்கள் கேள்வி ஞானம் மிகவும் உடையவர்கள். சொந்தப் படிப்பு இல்லாவிட்டாலும் யாரையாவது கூப்பிட்டு அல்லி அரசாணி மாலை, புலந்திரன் தூது, பவளக்கொடி மாலை முதலிய அறிவுப் புதையல் நூற்களை வாசிக்கச் சொல்லிக் கிஷ்கிந்தை வாசிகள்போல் கும்பலாய்க் கூடிக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

எங்கள் பெண்கள் நாகரீகமான உடை உடுத்துவார்கள். பட்டுச் சேலையாயிருந்துவிட்டால் 18 முழத்தோடு 36 முழமாக இருந்தாலும் சுமக்கத் தயார். உரலானது வெள்ளியாயிருந்தால் அதையும் கால் காப்பாக மாட்டிக் கொள்ளப் பின்னிடையுமாட்டார்கள். எந்தப் பொருளும் கூடவராதென்றும், பச்சை குத்திக்கொள்வதுதான் செத்த பின் கூட வருகிறதென்றும் எண்ணிக் கை நிறையக் கால் நிறையக்குத்திக் கொள்வதோடு, நெற்றியில் ஜாடியும் அதில் செடியும் இருப்பதுபோல் குத்திக்கொள்வதும் உண்டு. மணமுள்ள பூக்களைப் புல் சுமைக்குப் பதிலாகத் தலையில் சுமந்து கொள்வார்கள். சாகப்போகும் பெண்டிர்களும் திருவிழாவின் பேர் சொன்ன மாத்திரத்தில் தமது அரைடஜன் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு கிளம்புவர்ர்கள்,

கணவனே தெய்வம் என்றும், அவன் வார்த்தைகளே தேவாக்ஞையென்றும் எண்ணிக், கண

வர்களிடம் தங்களை எரு முட்டைகளாக்கித் தம்மையே தியாகம் பண்ணிக் கொள்வார்கள். மற்ருெரு விஷயம்! எங்கள் நாட்டுப் பெண்களிடம் சங்கீதம் பிறந்தது. இங்கிருந்துதான் சங்கீதம் என்பதே வெளிக்குத் தெரிந்தது. நடனமும் இப்படியே! சாவு வீட்டில் எங்கள் பெண் மக்கள் ஒப்பனை (ஒப்பாரி) வைத்து அழுவதையும், அழுது கொண்டே எழுந்து நின்று சுற்றிவந்து மார்பில் அடித்துக் கொள்வதையும் பார்த்தாலே இவ்விஷயம் தெரியும்.

* *

வானலோகம் உண்டு ; நரகலோகம் உண்டு. ஆனால் இப்போது அவை நமது கண்ணுக்குத் தெரியமாட்டா—என்று பாரமார்த்திகர் சொல்லிக் கண்ணுக்குத் தெரியக்கூடிய பணத்தை மக்களிடமிருந்து பிடுங்கிக் கொள்வதுண்டு. இப்பிரபஞ்சத்துக்கு அதீதமான விஷயத்தை ஒருவன் கண்டறிந்தது மாத்திரமில்லாமல் மக்களிடம் செல்வாக்கடைய விரும்பிய மதத் தலைவர்கள் அநேகர் சொல்லியிருக்கிருர்கள். ஒருவர் சொல்லியிருப்பதோடு மற்ருெருவர் சொல்லியிருப்பது முரண்படுவதால், முரண்படுவதாகிய இரு கட்சி விவாதத்தையும் நீக்கிப் பார்த்தால் மீதியிருப்பது லௌகீகம் தான். இருட்டில் தடவும் கைகள் எல்லாம் பாரமார்த்திகர்களின் கைகளேயாகும்."

* *

தாய் :—நிலைக் கண்ணாடியில் வெகு நேரம் உன் உருவத்தைக் கவனிக்கிருயே, காரணம் ?

மகன் :—நான் கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளாத-மதத்தை விட்ட-ஜாதியை விட்ட-மனிதனுகிவிட்டேன். இப்போது என் உருவம் எந்தப் பக்கம் மூளியாகி விட்டது என்று பார்க்கிறேன்.

---

"தூக்கத்திலிருந்து காலையில் எழுந்தவுடனே, உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, செய்ய வேண்டிய ஏதோ ஒரு வேலை இருக்கிறது என்பதை உணர்ந்து திருப்திப்படு. கட்டாயமாக உழைக்க வேண்டியிருப்பதனுல், அதை மிகச் சிறப்பாகவே செய்ய வேண்டியிருக்கும். இதன் பயனுக நிதானமும், தன் அடக்கமும், திறமையும், உள்ள உறுதியும், இன்பமும், மன நிறைவும், இன்னும் பல நற்பண்புகளும் உன்னிடம் உண்டாகும். சோம்பேறிகளுக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது.''

*—சார்லஸ் கிங்ஸ்லி*

# கடவுளைப்பற்றிய கருத்துக்கள்

[தொகுப்பு: இளசை-அருணா]

"மனிதனுடைய சிறந்த ஒரு தொழில்-ஒரு நாணயமான கடவுளைப் படைப்பதுதான்"

— இங்கர்சால்.

"எவனுடைய இதயம் ஏழைகட்காக கண்ணீர் வடிக்கிறதோ அவனையே நான் கடவுள் என்பேன்"

— விவேகானந்தர்.

"தேசத்தில் உலவும் மனிதக்கோயில்கட்குப் பணி செய்யாது, ஒரே இடத்திலுள்ள விக்கிரங்களுக்குப் பணி செய்வது அறியாமையே"

— திரு. வி. க.

"வழிபாட்டின் கதவுகள் மூடிக்கிடந்தாலும், கண்ணீரின் கதவுகள் திறந்திருக்கின்றன"

—ஹீப்ரு பழமொழி.

"மனிதனுடைய மனச்சாட்சியே இறைவனுடைய அசரீரியாகும்"

— பைரன்.

"உலகையும் உயிரினத்தையும் கடவுள் படைத்தார் என்று கூறுகிறபொழுது கடவுள் உண்டான வரலாற்றைப் பற்றியும் நாம் கூறவேண்டியதாகவே இருக்கிறது"

—தீதிமோசன் கோஸ்.

"எங்கெங்கு களங்கமற்ற தூய்மையான அன்பு நிலவுகிறதோ அங்கெல்லாம் ஆண்டவன் உலவுகிறான்"

— காந்தியடிகள்.

"கருணையும் மன்னிக்கும் தன்மையும், சாந்தியும் நிறைந்தவர்களின் இதயமே கடவுள்"

— இராம்தாஸ்.

"கடவுள் இன்றி மனிதன் வாழமுடியுமா என்பதைவிட முக்கியம், மனிதரின்றிக் கடவுள் வாழமுடியுமா என்பதே"

— வேண்ட்-யாம்.

# 11. பசப்புறு பருவரல்

[காதலி தனக்குத்தானே சொல்லிக் கொள்வது இது. தான் காதலனைப் பிரிந்து காம நோயினால் வருந்துவதால் காதலியின் உடல் நிறம் வெளுத்த பசுமையாக மாறுகிறது; இதைக்கண்டு காதலி வருந்துவது இது.]

அன்று என் காதலர் பிரிந்து செல்வதற்கு இணங்கினேன்; அவர் பிரிந்த பிறகு என் உடல் பசலை அடைந்து விட்டது; இதை வேறு யாரிடத்தில் சொல்வேன்? இந்த நிறமாற்றம் (பசலை) என் காதலரால் உண்டானது என்ற பெருமிதத்துடன் என் உடல் மீது ஏறி ஊர்ந்து பரவி என்னை ஆள்கின்றது. காம நோயை (பிரிவாற்றாமைத் துன்பம்)யும் இப்பசலை நிறத்தையும் எனக்குத் தந்துவிட்டு, இதற்கு ஈடாக (கைம்மாறாக) என்னுடைய சாயலையும் நாணத்தையும் என்னிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டு விட்டார்.

எந்நேரமும் அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்; நான் பேசுவதும் அவரைப் பற்றியே; (ஆகவே அவரைப் பிரிந்தவளல்லவே.) ஆயினும் இந்தப் பசலை நிறம் எனக்கு வந்தது சூதாக இருக்கலாமோ? அதோ, அங்கு என் காதலர் பிரிந்து சென்றுள்ளார்; இதோ, என் உடம்பில் பசலை நிறம் வந்து படர்ந்திருக்கிறது!

விளக்கு இல்லாத சமயத்துக்காகக் காத்திருந்து, விளக்கு நீங்கிய உடனே உண்டாகின்ற இருட்டைப் போல் என் காதலர் தழுவாத சமயத்துக்காகக் காத்திருந்து தழுவல் நீங்கியவுடனே வந்து விடுகிறது, இப்பசப்பு (நிறம்). என் காதலரைத் தழுவி அணைத்துக் கொண்டு படுத்திருந்தேன்; பிறகு பக்கத்தில் சிறிது அகன்றேன்; உடனே என் மேனியில் பசலை அள்ளிக் கொள்வதுபோல் வந்து பரவி விட்டதே!

என்னைப் பார்ப்பவர், 'இவள் தலைவன் பிரிவினால் பசலை நிறம் அடைந்தாள்', என்று பழி சுமத்துகிறார்களேயொழிய, 'காதலர் இவளைத் தவிக்க விட்டுப் பிரிந்து விட்டாரே', என்று இரக்கங் காட்டுபவர் எவருமில்லையே! என்னைப் பிரித்திருப்பதனால் எனக்குக் காதல் உண்டாக்கிய காதலர் நல்ல நிலை உடையவர் ஆவார் என்றால், (யார் பரிகசித்தாலும்) என் உடல் மேலும் பசலை நிறம் அடையட்டும்.

பிரிவுக்கு உடன்படுமாறு செய்த என் காதலர் பிரிந்து வருந்துவதைப் பிறர் தூற்றாமலிருந்தால், நான் பசந்து விட்டேன் என்பதில் எனக்குப் பெருமைதான்.

# வருங்கால விந்தை மனிதன்

நெல்லை ஞானமணி, B.SC., B.T., M.D.H.

*[வருங்கால மனிதன் எப்படியெல்லாம் இருப்பான் என்பதைப் பற்றிய யூகக் கட்டுரை, விஞ்ஞானிகளின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. இன்றைய விந்தை மனிதர்களிற் சிலர் வருங்கால மனிதர்களின் முன்னோடிகள் என்கிறார், கட்டுரையாளர்.]*

அமீபா, பரமேசியம் போன்ற ஒரு (cell) செல்லுள்ள உயிர்க் கூட்டங்களின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்பது டார்வினுடைய கருத்து. பாலூட்டிப் பிராணிகளின் முதிர்ந்த வளர்ச்சியே மனிதன். இவனுடைய வளர்ச்சியும் சூழ்நிலை, காலம் இவற்றிற்கு ஏற்ப மாறிக் கொண்டே வருகிறது என்பது உளநூல், தத்துவ, உயிரியல் அறிஞர்களின் கருத்தாகும். 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனுக்கும், அணுயுகத்தில் வாழும் இன்றைய மனிதனுக்கும் உடல் அமைப்பு, அறிவு, ஆற்றல் இவற்றில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. வருங்கால மனிதன் இன்றைய மனிதனின்று எவ்வாறு வேறுபட்டுக் காட்சி அளிப்பான் என்பதைக் காண்போம்.

எதையும் வரையறுப்பது காலமே என்பது காலம் சென்ற அறிவியல் முனைவர் ஐன்ஸ்டீனின் கருத்து. டார்வின் பரிணாமக் கொள்கையும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தானே இயங்குகிறது? மனிதனின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆதி மனிதன் ஒரு நாளில் செய்த வேலையை இன்று ஐந்து விநாடிகளில் செய்ய முடிகிறது. மணிக்கு 20,000 மைல் வேகத்தில் செல்லும் ராக்கெட்டுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. வருங்கால மனிதன் இந்த ராக்கெட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதில்லை. ஒளியின் வேகத்தை எட்டிப் பிடிக்கும் கருவிகளைச் செய்ய அன்று அவன் முயற்சி செய்வான்.

ஆதிமனிதன் நீண்ட ஆயுளை உடையவனாக இருந்தான். அவனுக்கு உறுதியான உடல் இருந்தது. மனிதன் நாளுக்கு நாள் தன் உடல் சக்தியை இழந்து வருகிறான். வருங்கால மனிதன் தன் உடல் சக்தியைப் பெரும்பாலும் இழந்து விடுவான். இருந்த இடத்தில் இருந்து கொண்டே பொத்தான்களை அழுத்துவதன் மூலம் வேலைகளைச் செய்வான். உண்பதற்குக் கூட இயந்திரங்களைப் பயன்படுத்துவான். கட்டி உருவ உணவுப் பொருட்களை அவனுடைய ஜீரண உறுப்புக்கள் ஜீரணம் செய்ய சக்தி அற்றதாகி விடும். நீர் உருவ உணவுப் பொருளையே அவனால் உட்

கொள்ள முடியும். மொத்தத்தில் எல்லா சக்திகளும் அடங்கிய ஒரு பொம்மையாகவே அவன் காட்சி அளிப்பான்.

காலம் செல்லச் செல்ல மனிதனின் ஆயுள் நாட்கள் குறைந்து கொண்டே செல்கிறது. பிற்கால மனிதனின் ஆயுள் நாட்கள் மிகக் குறைந்து விடலாம். எனினும் நம் ஆயுள் காலத்தில் முடிக்கும் வேலையை அவனும் தன் குறுகிய காலத்தில் முடிக்க முடியும். நம்மைவிட அவன் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கும். இதனைக் குறுகிய நாளில் கற்றுக் கொள்வதற்கு ஏற்ப அவன் மின்சார மூளையைப் பெற்று இருப்பான். ஒரு வயது முடிவதற்குள்ளேயே குழந்தை பள்ளி செல்லலாம். ஐந்து மாதத்திற்குள் குழந்தை பேச ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பிறப்பு உறுப்புக்கள் குறுகிய காலத்திற்குள் வளர்ச்சி பெற்று விடும். நீண்ட நேரம் நிற்பதற்குக் கூட மனிதன் சக்தியைப் பெற்று இருப்பதில்லை. மனிதன் தன் ஆண்மை சக்தியைப் பெரும்பாலும் இழந்து விடுவான். என்றும், இதனால் பலமற்ற சந்ததிகளே தோன்றும் என்றும் விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். கை, கால் இவைகளுக்கு அதிக வேலை கொடுக்கப்படாததால் மூளையின் வளர்ச்சியில் பெரியதொரு மாறுதல் ஏற்படுமாம்.

பிற்காலத்தில் இரகசியம் என்ற சொல்லை அகராதியில் இருந்தே எடுத்துவிட வேண்டி வருமாம். ஒவ்வொரு மனிதனும் மின் மூளையைப் பெற்று இருப்பதால் மற்றவன் மூளையில் உண்டாகும் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியுமாம். மூளையே ஒலிபரப்பு நிலையமாகவும், வானொலிப் பெட்டியாகவும் (Radio) வேலை செய்யும். வருங் காலத்து மனிதனுக்கு மணிக்கு 20,000 மைல் வேகம் என்பது சாதாரண வேகமாகவே தெரியும். இவர்கள் வானவெளிப் பயணத்தை மேற்கொண்டு (space travel) தங்கள் ஆயுள் நாட்களை அதிகப் படுத்திக் கொள்ளக்கூடும். (இது ஐன்ஸ்டீன் அவர்களின் கருத்து)

மேற்சொன்ன கருத்துக்கள், டார்வின், பவ்லொவ், பிராயிட் போன்ற அறிவியல், உளநூல் அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும். இதுபோன்று வருங்கால மனிதன் காட்சி அளிப்பானா என்ற ஐயம் ஏற்படுவது இயற்கையே. இன்றைய சமுதாயத்திலும் வருங்கால மனிதனின் முன்னோடிகள் காணப் படுகிறார்கள் என்பதன் மூலம் நம் ஐயத்தைப் போக்கிக் கொள்ளலாம். அமெரிக்காவில் உள்ள 12 வயது குழந்தை ஒன்று நடனத்தை மேற்பார்வை (Direction) செய்யும் அளவுக்கு நடனக் கலையில் தேர்ச்சி பெற்று இருந்தது. லார்டு மெக்காலே என்னும் ஆங்கிலேயர் எதையும் ஒரு முறை படித்தவுடனேயே அப்படியே திருப்பி எழுதும் வல்லமை பெற்று இருந்தார், லண்டன் நகரின் புத்தக நிலையங்களிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் தீக்கிரையாக்கினாலும் ஒரு மெக்காலே இருந்தால் திருப்பி எழுதிவிடலாம் என்று சொல்லும் அளவிற்கு மிகுந்த நினைவாற்றலைப் பெற்றிருந்தார். சுவாமி விவேகாநந்தா நம்மைப் போன்று வரிவரியாகப் படிப்பதில்லை. பார்த்த உடனேயே சங்கதிகளை உணர்ந்து அதிலுள்ள முக்கிய கருத்தைக் கூறி விடும் திறமையைப் பெற்றிருந்தாராம். லண்டனிலுள்ள ஒரு

மருத்துவ விடுதியிலுள்ள ஒரு மனிதன் மின்சாரக் காதுகளைப் பெற்றிருந்தானும்! 100 அடி தொலைவில் நின்று கொண்டு மெதுவாகப் பேசினாலும், இவனுக்குக் கேட்டுவிடுமாம். 1942ல் ஓஹியோவிலுள்ள (Ohio) ஒரு மனிதன் மின் அலைகளைக் கிரகிக்கும் வானொலிப் பெட்டி போன்ற மூளையைப் பெற்றிருந்தான். வானொலிப் பெட்டி இன்றியே இவன் செய்திகள், பாட்டுக்கள் முதலியவற்றைக் கேட்டுக் கொள்ள முடிந்தது. பின்னர் இவனுடைய தலையில் ஒரு மூடி (Cap) போட்டு மின் அலைகளைத் தடை செய்தார்களாம். ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ராபர்ட் ட்யூக் (Robert Duke) என்ற ஏழு வயதுக் குழந்தைக்குத் தினம் முகச் சவரம் செய்து கொள்ள வேண்டியிருந்ததாம். பிற்கால மனிதனுக்கு முன்னோடியாக இவர்களைப் போன்ற மனிதர்கள் இந்த நூற்றாண்டிலும் காணப்படுகிறார்கள். விந்தை உலகின் வருங்கால மனிதர்கள் எல்லோருமே மேற்சொன்ன முறையில் காட்சி அளிப்பார்கள் என்பதில் ஐயமுண்டோ?

## சமூகப் புரட்சி

“அரசியல் புரட்சிகளுக்கு முன் சமய–சமூகப் புரட்சிகள் ஏற்பட்டிருப்பதற்கு உலக வரலாற்றில் ஏராளமான எடுத்துக் காட்டுகள் உண்டு. மார்டின் லூதர் தோற்றுவித்த மதச் சீர்திருத்த இயக்கமே ஐரோப்பிய நாட்டின் அரசியல் விடுதலைக்குத் தூண்டுகோலா யிருந்தது. இங்கிலாந்தில் ப்யூரிட்டன் (Puritan) இயக்கம் அரசியல் சுதந்தரத்துக்கு அடிப்படையாக இருந்தது. புது உலக (அமெரிக்கா) அமைப்புக்கும் ப்யூரிட்டன் இயக்கமே காரணம். அமெரிக்க விடுதலைப் போர் வெற்றிக்கும் ப்யூரிட்டன் இயக்கமே காரணமாயிருந்தது; ப்யூரிட்டன் இயக்கம் மதச் சார்பான இயக்கமே.

முஸ்லிம் பேரரசு அமைப்புக்கும் மதமே காரணம். அராபியர் அரசியல் அதிகாரம் பெறுவதற்கு முன்பு முகமது நபி தோற்றுவித்த மதப் புரட்சியில் ஈடுபட்டுப் பழக்கம் பெற்றிருந்தார்கள்.

இந்தியாவிலுங் கூட சந்திரகுப்தன் நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் புத்தர் சமய–சமூகப் புரட்சி நடத்தி வெற்றி பெற்றிருந்தார். சிவாஜி நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் மகாராஷ்டிர அறிஞர்கள் சமய–சமூகச் சீர்திருத்தப் போர் நடத்தியிருந்தார்கள். சீக்கியர் நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் குருநானக்கின் சமய–சமூகப் புரட்சி நடைபெற்றிருந்தது. ஆகவே மக்கள் அரசியல் விடுதலை பெறுமுன் அவர்களுடைய மனமும் ஆன்மாவும் விடுதலை பெற்றுத்தான் ஆக வேண்டும்.”

—டாக்டர் அம்பேத்கார்.

# உடல் வலிமைக்கு ஒரே மருந்து

உடல் வன்மையும் நோயற்ற நல்வாழ்வும் பெறுதற்கு சூழ்நிலையும், வாழ்விடமும் இயற்கையான உடற்கட்டும் மட்டும் போதாது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது இங்கு நினைக்கத்தக்கது. இத்தகைய நோயற்ற வாழ்வைப் பெறுதற்கு, "நாம் ஆரோக்ய வாழ்வைப் பெறுதல் வேண்டும்," என்ற உறுதியான விருப்பம் இல்லையேல் வேறு எவ்வழியிலும் அதாவது நல்லுணர்வு, உடற்பயிற்சி பிற ஆரோக்கிய சாதனங்கள் இருப்பினும், அவை யாவும் பயனற்றதாகும். எனவே உடல் வன்மை பெறுதல் என்பது, உடலுறுப்புக்கள் பிணியற்ற தன்மையைப் பெறுதல் என்பதை மட்டும் பொறுத்ததல்ல. மனவன்மையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. உடல் வன்மைக்கு அதுவே வித்தாகும். உடலுறுப்புக்களுக்கு சலியாத ஊக்கமுள்ள, கவனமுள்ள, சிறந்த கவனிப்பு இல்லையானல் உடல் யந்திரங்கள் பாழ்பட்டு விடும்.

உடல் வன்மை என்பது மருத்துவர்களால் எழுதி யளிக்கப்படும் மருந்துகளாலும், மருந்துக் கடைகளில் அழகாக அடுக்கி வைத்து விற்கப்படும் மருந்து வகைகளால்மட்டும் பெற்று விட முடியாது. நோயுற்ற—அவதியுற்ற – நம் உடலுறுப்புக்களைத் துன்பத்தி னின்றும்-பிணியினின்றும் காக்க அம்மருந்துகள் பயன்பட்டாலும் அதுவே உடல்வன்மைக்கு இன்றியமையாதது என்பது பொருத்தமற்றது.

முறையான, நேர்மையான வாழ்க்கையும், விகிதப்படி திட்டமிட்ட சத்துணவுப் பழக்கங்களும், அவ்வப்போது சிலசில மருத்துவ உதவிகளும் உடல் ஆரோக்கியத்தைப் பெறுவதற்குத் துணை செய்யும் சாதனங்களாம்.

உடலுறுப்புக்களின் மீது மனதின் ஆட்சி பெரிது, இன்றியமையாதது. மனத்தை அடிப்படையாகக்கொண்டே உடற்பிணிகள் பெரிதும் உருவாகின்றன என்பதற்கு மருத்துவ நூல்கள் சான்று பகருகின்றன. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது போல, மனதில் ஏற்படும் சிந்தனைக்கேற்ப முகம் சிவப்பேறுவதையும் துன்பம், கவலை தோய்ந்து முகம் வெளுத்துக் காணப்படுவதையும் கண்கூடாக அறியலாம்.

எல்லையற்ற அச்ச உணர்வு சீரண உறுப்புக்களைப் பாதிப்பதுடன் அவ்வுணர்வு மரணத்தைக்கூட உண்டாக்கும் என்பதை உணரலாம். சினம், பயம், போன்ற மெய்ப்பாடுகளால் இதயத் துடிப்பில் மாறுதல் ஏற்படுவதை யாரும் அறிவர். நீண்ட ஆயுளுக்கும், திடமான ஆரோக்கிய நல்வாழ்விற்கும் மனதின் செயல்களே அடிப்படையானவை.

## மனமே மருந்து

நாம் நோயுற்ற காலத்தும், தளர்ந்த காலத்தும், நமது உடல் வலிமையில் நம்பிக்கை தளர்ந்து விடுகின்றது. உடல் பலத்தில் நம்பிக்கைக் குறைவு ஏற்படுமானல் உடனே உடல் வன்மை நீங்கி விடுகின்றது. எனவே நாம் தன்னம்பிக்கை குறைந்து நம்மையே இழக்கும்படியான நிலைமையும் ஏற்படுகிறது. நாம் எப்பொழுதும் நம்

மைப் பிணியாளராகவோ, கலைப் படைந்தவராகவோ, வன்மை யற்றவராகவோ, எண்ணிக் கொள்ளக்கூடாது. நம்மை நல்ல சுறுசுறுப்பும் திறமையும் ஆரோக் கியமும் நிறைந்தவர்களாகக் கருத வேண்டும்.

உடற்பிணியைப்பற்றிப் பெரி தாகச் சிந்திப்பதாலேயே அது மேலும் மேலும் வளர்ச்சியுறுகின் றது. பிணியில்லை என்று திடமாக எண்ணுவதால் அப்பிணி குறைந்து அற்றுப் போய்விடும். மனக்கவலையே பலக் குறைவு என்பது போல மனநிலையே பிணிக்கும், பிணியின்மைக்கும் பெருங் காரணம் என்க. எனவே உள்ளத்தின் சக்தியைச் சீர் செய்வதாலேயே பிணிகளெல் லாம் குணமாகிவிடுகின்றன என் பதற்கு உலகில் ஏராளமான சான்றுகள் உள்ளன. இந்தக் கடும்பற்றுக் கொள்கைக் குவியல் களின் முன்னல் விஞ்ஞானமும் வாயடைத்துவிடுகின்றது. அதற் குத் தத்துவ ரீதியான கார ணத்தையேனும் அந்த விஞ்ஞா னத்தால் கூற இயலவில்லை. இத்தீர்மானம் விஞ்ஞான ரீதி யான முடிவுகளுக்கும், சட்டங்க ளுக்கும் பொருந்தாததாகவும், விபரீதமாகவும், எதிரிடையாக வும் இருந்த போதிலும் பிணி நீக்கம்பற்றிய இம்முடிவு மிகவும் உயர்ந்ததாகும்.

மருந்துகளினுல் குணப்படுத்த முடியா தொழிந்த எண்ணற்ற பிணிகள், மனவன்மையாலும், தன்னம்பிக்கையாலும் குணம் அடைகின்றன என்பது ஆராய்ச் சியினுல் கிடைக்கும் உண்மை. பயங்கரமான நோய்களைக் குணப் படுத்தும் திறமையுள்ள மிகப் பெரிய மருத்துவ நிபுணர்கள் கூட தற்காலத்தில் மனநிலையை ஆராய்ந்து அதனைச் சீர்செய்து அதனை அடிப்படையாகக் கொண்ட முறைகளிலேயே குணப்படுத்த முயலுகின்றனர்.

மனவிருப்பமே நேரிய சக்தி. உடல் வன்மையை செம்மைப்ப டுத்தும் பொறி இயல். அச்சக்தி யைச் சீர்பெற வளர்த்துக் கொள் ளின் வாழ்க்கையின் லட்சி யத்தை எளிதில் பெறலாம். உள வன்மை அல்லது உள்ள ஒரு மைப்பாடே உடல் வன்மையை அளித்து நம் ஆசையை நிறை விக்கும் முறையாகும்.

["Eve's Weekly"-தமிழாக்கம்: புலவர் வத்சலன்]

## வியட்நாம்

இது பசிஃபிக் கடலுக்கு மேற் கிலும் சீனுவுக்குத் தெற்கிலும், தாய்லாந்துக்கு கிழக்கிலும் மலேயாவுக்கு வடக்கிலும் உள்ள நாடு. இதன் மக்கள் தொகை (1959ல்)24,612,870. மொழிகள்:— அன்னுமியம், சயாமியம். சமயங்கள்: டோ; பவுத்தம்.

இந்நாடு இரு பிரிவுகளைக் கொண்டது; வடக்குப் பிரிவு மக்கள் குடி அரசு என்னும் முறையில் பொது உடைமைக் கட்சியினரால் ஆளப்பட்டு வருகிறது.

தெற்குப் பகுதி இன்று ஓரளவு இராணுவ ஆட்சியாக இருந்து வருகிறது.

இந் நாட்டின் முக்கிய விளை பொருள்கள்:—

நெல், ரப்பர், தேயிலை, காஃபி முதலியன. மீன் பிடித்தல், சுரங் கத் தொழில், மது வடித்தல், சோப், சர்க்கரை ஆகியவை முக்கிய தொழில்கள்.

**கவிதைப் பகுதி**

# உண்மை வெல்லும்!

[ கவிஞர் கோவைவாணன் ]

1

சீர்திருத்தம் நாட்டிற்குத் தேவை ; நாடு
சீருறவே வேண்டுமென மேடை தோறும்
ஆர்க்கின்ருர் ; ஏடுகளில் தீட்டு கின்ருர் ;
ஆராய்ந்து பார்த்தாலோர் உண்மை தோன்றும் !
பார்திருத்த வேண்டுமெனப் பகரு கின்ற
பான்மையுளோர் நெஞ்சங்கள் மாற வில்லை !
யார்திருத்த வந்தாலும் அவரின் நெஞ்சில்
ஆர்த்தெழும்பேர் ஆர்வமுடன் தூய்மை வேண்டும்!

2

சங்கம்வைத் தரசாண்ட காலம் தன்னில்
தனிப்புலவோர் நாவெல்லாம், நெஞ்சம் எல்லாம்
வெங்களத்தே தோளெடுத்து வாளெ டுக்கும்
வெண்கொற்றக் குடைமன்னர் நீதி யெல்லாம்
தங்குலத்தைத் தமிழர்தம் தனிக்கு லத்தைத்
தரணியிலே நிலையாக்கச் செயலாற் றிற்று !
பொங்குதமிழ்க் காப்பியங்கள் சீர்தி ருத்தம்
பொலிவுறவே பாடிற்று வையம் வாழ !

3

இன்றிருக்கும் சீர்திருத்தச் செம்மல் பல்லோர்
இருக்கின்ற பெருமூடக் கொள்கை ஏற்று
வென்றிருக்கும் சாதியினை வளர்க்கின் ருர்கள் ;
வெளிச்சத்தை இருளாக்கிக் காட்டு கின்ருர் !

நன்றிருக்கும் நீதிகளை மாய்க்கின் றார்கள் ;
நலிவாக்கும் கீழ்நிலையை மேல தென்பார் !
குன்றிருக்கும் விளக்கானோர் சான்றோர் ; இந்தக்
குவலயத்தை மாய்க்கின்றார் போலி மாக்கள் !

4

காசுபணம் ஒன்றேதம் குறிக்கோ ளாக்கிக்
காமுகராய்த் திரிகின்றார் ; நாட்டை மாய்க்க
வீசுபுயல் போலெழுந்தே ஆர்க்கின் றார்கள் !
வீறார்ந்த மயக்காலும் பேச்சி னாலும்
மாசுபல சேர்க்கின்றார் ; மண்ணில் சான்ற
மாண்புகளை மாய்க்கின்றார் ; மடமை மாய்த்த
ஏசுநபி புத்தரொடு காந்தி என்றே
இவரெல்லாம் தமையெண்ணிக் கொள்கின் றார்கள் !

5

சீர்திருத்தம் பேசுகின்ற மாந்த ருள்ளே
சீலமிலாப் பேய்களெனப் பலபேர் உள்ளார் !
" பார்திருத்தி மொழிதிருத்தி நாட்டில் வாழும்
பாமரர்தம் மனந்திருத்தி வாழ வேண்டும் !
ஏர்திருத்தும் உழவர்முதல் செல்வர் ஈறாய்
ஏற்றமுள மாந்தரையாம் திருத்த வந்தோம் !
பார்திருந்தும் வரை நாங்கள் பசியைப் பாரோம் ;
பாருக்கே உயிருடலைப் பணயம் வைத்தோம் ! "

6

என்றிங்கே பசப்புகின்ற வேடத் தாரை
எழிற்றமிழர் நம்புகிறார் ; அரவின் நஞ்சை
நன்றென்றே விழிமூடி விரும்பு கின்றார் !
நலிவுக்கே ஆட்பட்டு தாயி ழந்த
கன்றென்றே கதறுகிறார் உண்மைச் சான்றோர் !
கழிசடைகள் வாழ்ந்ததென வரலா றுண்டோ ?
குன்றெனவே நின்றிருக்கும் சான்றோர் வாழ்வே
குவலயத்தில் நின்றிருக்கும்; உண்மை வெல்லும்!

கவிஞர் முருகுசுந்தரம் எம். ஏ.,

# சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

## IV

### காவியத் தோற்றம்

'சஞ்சீவி பர்வதத்தின் சாரலும், 'புரட்சிக் கவி'யும் பாவேந்தர் பாரதிதாசன் தம் இளமைக் காலத்திலே தமிழுக்குப் படைத்தளித்த காவியங்கள். பாவேந்தர், பாரதியோடு தொடர்பு கொண்டிருந்த காலத்திலோ அல்லது பாரதியார் புதுவையை விட்டுக் கிளம்பியவுடனோ, இவ்விரண்டு காவியங்களும் தோன்றியிருக்க வேண்டும். இதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. பாரதியின் படைப்புக்களில் குறிப்பிடத் தக்கவை, மூன்று. குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகிய மூன்றுமே அவை. குயில் பாட்டில் உயர்ந்த கற்பனையையும், பாஞ்சாலி சபதத்தில் காவியச் சிறப்பையும், கண்ணன் பாட்டில் காதற் சிறப்பையும் காணலாம். இம்மூன்றில் குயில்பாட்டும் பாஞ்சாலி சபதமும் பாவேந்தரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும் அவ்விரண்டையும் உள்ளத்தில் வைத்துக் கொண்டு பாவேந்தர் தம்முடைய காவியங்களை உருவாக்கியிருக்கிறார். பாஞ்சாலி சபதத்தின் எதிரொலியாகப் புரட்சிக் கவி தோன்றியது. பாஞ்சாலி சபதத்தில்காணப்படும் விருத்தங்களும், சந்தங்களும் புரட்சிக் கவியிலும் காணப்படுகின்றன. பாஞ்சாலி சபதம் தமிழ்க் காவிய உலகில் பெரிய திருப்பம். பேச்சு வழக்கில் இல்லாத இலக்கியச் சொற்களைப் பயன்படுத்திப் புரியாத நடையில் எழுதுவதுதான் இலக்கியம் என்று தமிழ் மக்களால் கருதப்பட்டு வந்தது. அதை முதலில் உடைத்தெறிந்து, எளிய சொற்களால் உருப்பெற்ற முதல் காவியம் பாஞ்சாலி சபதம்தான். தம் ஆசிரியரின் வழியைப் பின்பற்றி எளிய சொற்களால், சிறந்த இலக்கிய நயத்தோடு புரட்சிக் கவியைப் பாவேந்தரும் எழுதி முடித்தார். அடுத்தாற்போல் குயிற்பாட்டை உள்ளத்தில் நினைத்துக் கொண்டு, அதைப்போல் சஞ்சீவி பர்வதத்தின் சாரலை உருவாக்கினார்.

### இரண்டிற்குமுள்ள ஒற்றுமை

(1) குயிற்பாட்டும் ஒரு கற்பனைச் சூழ்நிலையை (Supernatural element) மையமாக்க் கொண்டு அமைந்துள்ளது. அதேபோல் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் கற்பனைச் சூழ்நிலையைப் பெற்று விளங்குகிறது. (2) குயிற்பாட்டும் பஃறொடை வெண்பா யாப்பால் அமைந்துள்ளது. சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் பஃறொடை வெண்பா யாப்பால் அமைந்துள்ளது. (3) குயிற்பாட்டும் "காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே" என்று இயற்கை வருணனையோடு துவங்குகிறது. சஞ்சீவி பர்வதத்தின் சாரலும், "குயில் கூவிக்கொண்டிருக்கும்; கோலம்

மிகுந்த மயிலாடிக் கொண்டிருக்கும்...'' என்று இயற்கை வருணனையோடு தொடங்குகிறது.

ஆனால் இரண்டிற்கும் ஒரு முக்கிய வேறுபாடுண்டு. எந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துப் பாரதி குயிற்பாட்டை எழுதினார் என்று சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எழுதப்பட்டதன் நோக்கம், உள்ளங்கை நெல்லிக் கனிபோல் எல்லாருக்கும் தெளிவாகப் புரியும்.

## நோக்கம்

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எழுதப்பட்டதன் நோக்கத்தைப் பாவேந்தரே தெளிவுபடுத்துகிறார். அது பின்வருமாறு:

''மீளாத மூடப் பழக்கங்கள்
மீண்டும் உமை
நாடா திருப்பதற்கு
நான்உங்களை இன்று
சஞ்சீவி பர்வதத்தின்
சாரலுக்குக் கூப்பிட்டேன்''

x x x

''உள்ள பகுத்தறிவுக்
கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க
இயலாது.''

x x x

''நல்ல இமயம்,
நலங்கொழிக்கும் கங்கைநதி
வெல்லத் தமிழ்நாட்டின்
மேன்மைப் பொதியமலை
செந்நெல் வயல்கள்,
செழுங்கரும்புத் தோட்டங்கள்
தின்னக் கனிகள்,
தெவிட்டாப் பயன்மரங்கள்
இன்பம் செறிந்திருக்கும்
இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி
மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை
வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம்,
முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ?
உயர்வதென்றோ?''

## வருணனை

ஒரு கவிஞனுக்கு வருணனை மிகவும் இன்றியமையாதது. மேலும் காவியத்துக்கு வருணனை உயிர் நாடி போன்றது. கவிஞன் தன் கருத்தைச் சொல்வதற்கு முதலில், படிப்போர் உள்ளத்தில் ஏற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு வருணனைதான் ஏற்றகருவி. குப்பன்-வஞ்சி என்ற காதலர் மாலைப் பொழுதைக் கழிக்கச் சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்கு வரப் போகின்றனர். அதற்கேற்ற காதல் சூழ்நிலையை வருணனை மூலம் நம் உள்ளத்தில் கவிஞர் உருவாக்குகிறார். அதைப் படிக்கும்போதே ஒருவிதக் காதல் மயக்கம் நம் உள்ளத்தில் ஏற்படுகிறது. வருணனையைப் படியுங்கள்:

''குயில்கூவிக் கொண்டிருக்கும்;
கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்;
வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்;
கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு;
கனிமரங்கள் மிக்கவுண்டு.
பூக்கள் மணங்கமழும்;
பூக்கள்தொறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி
இன்னிசைபா டிக்களிக்கும்
வேட்டுவப் பெண்கள்
விளையாடப் போவதுண்டு;
காட்டு மறவர்களும்
காதல்மணம் செய்வதுண்டு.

நெஞ்சில் நிறுத்துங்கள்;
இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின்
சாரல்என்று சொல்லிடுவார்''

ஆம்! இது நெஞ்சில் நிறுத்த வேண்டிய இனிப்புச் சொல் வருணனை.

## சொல்லாட்சி

உரை நடை என்பது சொல் வரிசை; அல்லது சொல் மாலை. சொற்களை ஏற்ற முறையில் வரிசைப்படுத்துவதுதான் உரை நடையில் ஓர் எழுத்தாளன் செய்யும் வேலை. ஆனால் கவிதை அப்படியன்று. அது ஒரு வைரக் கணையாழி. முதலில் கணையாழி செய்து கொள்ள வேண்டும். பிறகு அதில் முகப்பு அமைக்க வேண்டும். அம்முகப்பில் இழைத்து மெருகேற்றப்பட்ட, பொருத்தமான வைரக் கற்களைப் பொறுக்கி எடுத்து, அம்முகப்பில் பொருத்த வேண்டும். அதுவும் கண்ணுக்கழகாக இருக்க வேண்டும். அதேபோல் கவிஞன் சிந்தித்து மிகவும் நுட்பமான, கருத்துச் செறிவுள்ள, இனிய ஓசையுள்ள, சிறிய சொற்களைப் பொறுக்கி எடுத்துக் கலை நுணுக்கத்தோடு இலக்கண வரம்பு என்னும் முகப்பிற்குள் வைத்து உறுதியாகப் பொருத்த வேண்டும். இத்துணை ஆற்றலும் உடைய கவிஞன் ஒருவன், சொற்களை ஆளும் முறை மிகவும் வியக்கத்தக்க முறையில் அமைந்திருக்கும். அச்சொல்லாட்சியில் கலைச்சுவையும் இருக்கும்; கருத்துத் தெளிவும் இருக்கும். உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியும். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் அத்தகைய சொல்லாட்சியைப் பரக்கக் காணலாம். அவை பின் வருமாறு:

(1) கட்டிச் சமூகத்தின்
கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி யளக்கும்
குருக்கள்.

(2) தேன்சுரக்கப் பேசிஇந்து
தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த
பூசுரர்.

(3) ராமாயணம் சொல்லி
நாளைக் கழிக்கின்ற
ஏமாந்தார் காசுக்
கெசமானன்.

(4) ஆளிவாய்ப்
பாகவதன்

(5) பட்டைநா மக்காரப்
பாகவதன்

(6) உள்ள பகுத்தறிவுக்
கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க
இயலாது.

(7) பொற்புள்ள மாந்தர்களைக்
கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க்
காணப்படும் அங்கே.

(8) கொந்தளிப்பில் நல்லதொரு
கொள்கை முளைப்பதெங்கே?

(9) கண்ணையவள்
கண்ணிலிட்டுக்
கையேந்தி
நின்றிட்டான்.

## உவமைகள்

தொல்காப்பியர் காலத்தில் உவமையொன்றுதான் அணியாகக் கருதப்பட்டது. எனவேதான் அணியிலக்கணத்தை உவமவியலுள் அடக்கினர். மேலும் மற்ற அணிகளுக்கு உவமையே தாய். இவ்வுவமை யணிதான் கவிதையின் இன்றியமையாத கலைப் பகுதியாகக் கருதப்படுகிறது. உவமையை மிகவும் திறம்படக்

கையாளும் ஆற்றல் எல்லாக் கவிஞருக்கும் இருப்பதில்லை. பாவேந்தர் பாரதிதாசன் உவமைகளை மிக அதிகமாகக் கையாள மாட்டார். ஆனால் ஏற்ற இடத்தில் இணையற்ற உவமைகளை எடுத்து வீசுவார். அவைகளில் சில :

காதலுக்காகக் காளையர்கள் எதையும் செய்யத் தயங்கார் என்பதை,

"கிட்டரிய காதற்
 கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல்
 மேலேறிப் பாயாதோ?
கண்ணின் கடைப்பார்வை
 காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு
 மாமலையும் ஓர்கடுகாம்"

என்று அழகாகக் கூறுகிறார். அநுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கும் நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது,

"சஞ்சீவி பர்வதத்தைத்
 தாவித் தரையோடு
பஞ்சிருக்கும் மூட்டைபோல்
 பாவி அவன்எவனோ
தூக்குகின்றான் வஞ்சி"

என்றும், தூக்கிய மலையை அசையாமல் இருந்த இடத்தில் கொண்டுவந்து அநுமன் வைத்த காட்சியைக் குறிப்பிடும்போது,

"கண்ணே! மலையைக்
 கடுகளவும் ஆடாமல்
கண்ணாடிப் பாத்திரத்தைக்
 கல்தரையில் வைப்பதுபோல்
தந்திரமாய் மண்ணில்
 தலைகுனிந்து வைத்திட்ட
அந்தப் பகுதிதான்
 ஆச்சரியம் ஆகுமடி"

என்றும், குப்பனின் அறியாமையை வஞ்சி எள்ளி நகையாடும் காட்சியைக் குறிப்பிடும்போது,

"பொய்யுரைப்பார் இந்தப்
 புவியைஒரு சிற்றெறும்பு
கையால் எடுத்ததென்பார்.
 ஐயோ என்றஞ்சுவதோ?"

என்றும் பொருத்தமான உவமை

## தமிழர் யார் ?

"தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடையவர் யாவரும் தமிழரே. மொழியை வைத்து மக்களின் இனத்தைக் கூறுவது உண்டெனினும் ஓர் இனத்தாரின் மொழியை அவர்களோடு ஒருங்கு வாழும் மற்றோர் இனத்தார் தம்முடைய தாகத் தழுவிக்கொள்ளுதலும் உண்டு. யூதர் (Jews) என்பவர் ஐரோப்பாவில் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு மொழிகளைத் தங்கள் சொந்த மொழியாகப் பேசுவதைக் காணலாம். இந்தியாவில் உள்ள மொழிகள் ஆரிய மொழிகள் என்றும் மண்டா மொழிகள் என்றும், திராவிட மொழிகளென்றும் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. திராவிட மக்களோடு ஒத்த இனத்தவர்கள் திராவிட மொழிகளின் வேறான மண்டா மொழிகளைப் பேசுகின்றார்கள். கலப்பினத்தார்கள் தாய்மொழி அல்லது தகப்பன் மொழியைச் சொந்த மொழியாகக் கொண்டிருக்கின்றனர். ஆங்கில ஆடவர்க்கும் இந்தியப் பெண்களுக்கும் பிறந்தவர்கள் ஆங்கில மொழியைத் தங்கள் வீட்டு மொழியாகப் பேசி வருகின்றனர். இதனால் மொழியானது இனத்தையும் இனச்சார்பையும் குறிக்குமென்பது புலப்படும்."

—கா. சுப்பிரமணிய பிள்ளை
M.A., M.L.,
"தமிழர் சமயம்"

களோடு கவிஞர் கூறும் நயம் வியந்து போற்றற்குரியதாக அமைந்துள்ளது.

இதில் உருவகமும் இல்லாமல் இல்லை. குப்பன் வஞ்சியை அணைக்க காதலோடு நெருங்குகிருன். அப்போது வஞ்சி 'தொடாதீர்கள்' என்று கூறி மருட்டுகிருள். அப்போது குப்பன் கூறிய சொற்கள் உருவக் அணியோடு அமைந்துள்ளன:

''கண்ணுக்குள் பாவையே!
கட்டமுதை நான்பசியோடு
உண்ணப்போம் போதுநீ
ஓர்தட்டுத் தட்டிவிட்டாய்!
தாழச் சுடுவெய்யில்
தாளாமல் நான்குளிர்ந்த
நீழலைத்தா வும்போது
நில்என்று நீதடுத்தாய்!
நேற்றுத்தான் இன்பக்கரை
காட்டினய் இன்று
சேற்றிலே தள்ளிவிட்டாய்!
காரணமும் செப்பவில்லை!''

## இக்காவியத்தின் தனிச் சிறப்புக்கள்

ஒருநாள் 'அழகின் சிரிப்'பைப் பற்றிப் பாவேந்தரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, அந்நூலில் உள்ள பாடல்களை ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த்தின் பாடல்களோடு நான் ஒப்பிட்டுப் பேசினேன். உடனே அவருக்குச் சினம் வந்துவிட்டது.

''வருகின்றவர்களெல்லாம் என் பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு, இது அவன் பாட்டைப் போலிருக்கிறது; இவன் பாட்டைப் போலிருக்கிறது என்று எதற்காகச் சொல்லுகிறீர்கள்? இத்தகைய பாடல்களை என்னல் எழுத முடியாதா என்ன? என் பாட்டை மேலை நாட்டுக் கவிஞர்களின் பாடலோடு ஒப்பிட்டுப் படிக்க வேண்டாம்; என் பாட்டை நீங்கள் என் பாட்டாகவே படிக்க வேண்டும்'' என்று கூறினர்.

தம் பாடலை மேலை நாட்டுக் கவிஞர்களின் பாடலோடு ஒப்பிட்டுப் பேசுவதை அவர் எப்போதும் பொறுப்பதில்லை. காரணம், அவருக்கு மேலைநாட்டு மொழி எதுவும் தெரியாது. புதுச்சேரியில் இருந்ததால், அவருக்கு ஆங்கிலம் பயில வாய்ப்பில்லை. அவ்வூரின் ஆட்சி மொழியான ஃபிரெஞ்சும் அவருக்குத் தெரியாது. ஓரிரு ஃபிரெஞ்சுச் சொற்களைத் தமிழோடு கலந்து பேசுவார். அவர் தனித் தமிழ்ப் புலவர். எனவே மேலை நாட்டு இலக்கியத்தில் எழுதப்பட்டுள்ள எள்ளல் இலங்கியங்களைப் (Satire poetry)பற்றி அவருக்குத் தெரியாது. என்வே ''சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'' அவரது சிந்தனையில் குதித்தெழுந்து தமிழ் இலக்கிய உலகில் நுழைந்த புதுத்துறை; அங்கதம், வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகிய தமிழ் அங்கங்களின் வளர்ச்சி பெற்ற முழு உருவம்.

இராமாயண, மகாபாரத இதிகாசங்களில் காணப்படும் மூடக் கருத்துக்களைச் சாடி, உரைநடையில் இவருக்கு முன் பல அறிஞர்கள் நூல் எழுதியுள்ளார்கள். கவிதையில் கூட இராமலிங்கர், ''கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக'' என்று அங்கொன்றும் இங்கொன்றும் ஆகக் குறிப்பிடுகிருர். ஆனல் இதிகாசங்களிலுள்ள பகுத்தறிவுக் கொவ்வாத கருத்துக்களைக் கண்டித்துத் தனிக்காவியம் எந்தக் கவிஞனும் தமிழில் எழுதவில்லை. எழுத எந்தக் கவிஞனுக்கும் துணிச்சல்

இல்லை. அப்பணி பாவேந்தரின் கைவண்ணத்துக்கும், கலை வண்ணத்துக்கும் காத்துக் கிடந்தது.

## முடிவுரை

படைப்பாற்றலும், கொள்கைப் பிடிப்பும், எதிர்ப்புக்கும் பின் விளைவுகட்கும் அஞ்சாத நெஞ்சுரமும், நுட்பமான கலையுணர்வும், கற்பனை வளமும் ஒருங்கே பெற்ற ஒரு பெரும் புலவனால் தான் சமுதாயத்தைச் சீர்திருத்தும் உயர்காவியத்தை எழுத முடியும் என்பதற்குச் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவருடைய 'எதிர்பாராத முத்தம்' ரோமியோவும் ஜூலியத்தும், லைலாமஜ்னு, ஷிரீன்குஸ்ரு, சாகுந்தலம் போன்ற உலகப் புகழ்பெற்ற காதற் காவியங்களின் வரிசையிலே இடம் பெறத் தக்க தகுதியை உடையது. இவருடைய வேறு படைப்புக்களான அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு ஆகிய இரண்டும் எந்தத் தமிழ்க் கவிஞனும் இதுவரை முழு முயற்சி செய்யாத புதுத்துறை இலக்கியங்கள். இவருடைய இசையமுது தமிழிசைக்கு ஒரு திருப்புமுனை.

பாவேந்தரின் இலக்கியங்களின் பெருமையை இன்று மேலை நாட்டினரும் உணரத் தொடங்கியிருக்கின்றனர். ருசிய மொழியில் இவருடைய இலக்கியங்களை மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 1962-ஆம் ஆண்டு மார்ச் திங்கள், செக்கோஸ் லேவேகியாவிலிருந்து பாவேந்தரின் சென்னை இல்லத்திற்கு ஒரு செய்தித்தாள் வந்தது. அச்செய்தித் தாளைக் கண்ணுறும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. செக் நாட்டு அறிஞரான டாக்டர் காமில் ஸ்வெலபில் என்பார் பாவேந்தரின் கவிதையொன்றைச் செக் மொழியில் மொழி பெயர்த்து, இவருடைய படத்தோடு அச்செய்தித் தாளில் அழகாக வெளியிட்டிருந்தார். டாக்டர் காமில் ஸ்வெலபில் தமிழ் மொழியை நன்குணர்ந்தவர். செக்நாட்டுப் பல்கலைக் கழகமொன்றில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றுபவர். அவர் பாவேந்தருக்கு ஒரு கடிதமும் எழுதி யிருந்தார். அக்கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதை அப்படியே நான் இங்கு உங்கள் முன்னால் படைக்கிறேன்.

Thiru Bharathi Dasan Avargal,
95, Rue de perumal Kovil,
Puduccheri—Pondichery

Dear Mahakavi,

I send enclosed herewith an issue of our 'Novy'/New Orient Monthly/wherein you will find a few of my CZECH translations of your splendid poems together with a short note on your life and work.

May I ask you to kindly arrange for the despatch of your collected-work to me? For me and my students of Tamil, it is a "MUST". Your work is undoubtedly the peak of Tamil lyrical poetry in the first half of our century.

Yours very sincerely,
**Dr. Kamil Zvelebil**

---

தமிழ் ஊழியன்

இக்கடிதத்தைப் படித்தபோது என் விழிகளில் இன்பக் கண்ணீர்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# திருவள்ளுவர் சமயம்

புலவர் வி. பொ. பழனிவேலன் B. O. L.

## முன்மொழி

இன்றைய ஆராய்ச்சி யறிஞர்கள் பலர் ஒன்றை ஆராயுங்கால் தங்கள் கொள்கைகளை முன்னிட்டே ஆராய்ச்சியைத் தொடங்கி அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் முடிக்கின்றனர். ஆராய்பவர் எந்த மதச் சார்பாளரோ அந்த மதக்கண் கொண்டே ஆய்வு நிகழ்த்துகின்ருர். 'தோள்கண்டார் தோளே கண்டார்', என்ற கம்பன் வாக்கு ஈண்டு நினைக்கற்பாற்று.

ஆராய்ச்சி செய்பவர் காய்தல் உவத்தல் அற்றவராயும், எந்த மதச்சார்பும் இல்லாதவராயும், சமன்செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து ஒருபாற் கோடாமலும் இருத்தல் வேண்டும். நாடு, மொழி, மதம், ஆத்திகம், நாத்திகம் ஆகிய சார்பு எண்ணங்கள் இடையில் புகுந்து ஊடாட மனத்தில் இடமளித்தல் கூடாது. சமகோணத்தில் நின்று யாண்டும் நோக்குதல் நன்ரும்.

"கல்லைக் கண்டால் நாயைக் காணேம்; நாயைக் கண்டால் கல்லைக் காணேம்" என்று குழவிக் கற்களைக் கும்பிடுகின்ற கோயில் பெருச்சாளிகள் மக்களிடையே தெய்வப்பற்றை ஊட்டக் கூறுவதைக் கேட்டிருக்கின்ரேம். என்ன பொருள் சொல்கிருர்கள்? ஒரு கல்லால் செய்யப் பெற்ற நாயுருவைப் பார்க்கும்போது அது 'கல்' என்று நினைத்துக்கொண்டால், 'நாய்' என்ற எண்ணம் மனத்தை விட்டுப் போய்விடும்; அவ்வுரு 'நாய்' என்று நினைத்துக் கொண்டு பார்த்தால், 'கல்' என்ற எண்ணமே மறைந்துபோம், என்று விளக்கங் கூறி தெய்வப்பற்றை மக்கள் மனத்தில் பதிக்கிருர்கள்.

இவ்வாறு இயம்புவோர் எத்தகையோர் தெரியுமா? இளங்கலைப்பட்டம், முதுகலைப்பட்டம், ஆய்வுப் பட்டம், அறிவியல் பட்டம், கணிதப் பட்டம், பண்டாரகர் பட்டம் பெற்ற பெரும் மேதைகள். இவர்கள் சொல்வதை யாரே மறுக்கவல்லார்? ஆனல், அறிவுக் கண் கொண்டு, நடுநின்று நோக்குவார்க்கு உண்மை புலனுகாமற் போகா. இருப்பினும் நம் நாட்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சுரந்தது. பாவேந்தரின் பெருமையை எண்ணி என் உள்ளம் விம்மிப் பருத்தது. ஊம்...இதெல்லாம் இப்பாழும் தமிழர் கண்ணில் படவா போகிறது? தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசென்றும், சென்னை அரசினர் பரிசென்றும், மத்திய அரசினர் பரிசென்றும், ஏதேதோ வாய்க்கு வழங்காத குப்பைகளுக்கெல்லாம் பரிசுகளை வாரி வழங்குகிருர்களே! இப்பரிசுகளில் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்குப் பாரதிதாசன் எழுதியவற்றுள் தகுதியுள்ள நூல் ஒன்று கூடவா இல்லை?

அட, நன்றி கெட்ட தமிழ் நாடே!

★

டில் எத்தனை பெயர் மேற்காணும் பத்தி மொழியையும், உட்பொருளையும் ஆயுந்திறன் உடையார்? திறனுடையார் அறனுடையார்; திறனில்லார் முரணுடையார். உண்மை காண்பது எங்ஙனம்? மதம் கண்ணை மறைக்கும்; தெய்வப்பற்று திரை போடும். உண்மை ஒளி சிறிது ஊடுருவி வந்தாலும் கண்டும் காணாதுபோல் விடப்படும். உள்ளதை உள்ளவாறு கூறுவோர் இந்நாட்டில் அருமையினும் அருமை. அங்ஙனம் யாராவது இருப்பின் அவர்க்கு ஊறு விளைப்பார் பலர். இதனாற்றான் நம் நாட்டு ஆராய்ச்சி ஒரு சார்பானதாகவே உளது. சமயச்சார்பு இன்றி ஆய்வோர் இன்றில்லை.

## வள்ளுவர் யார்?

திருவள்ளுவர் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை வரலாறு முதலியன உள்ளவாறு அறியக் கூடவில்லை. ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தார் என்பது பிற்காலத்தார் புனைந்துரை. 'இந்து' மதத்தார் கற்பித்த இழித்துரை. ஏனெனின், இந்து மதத்தை எதிர்த்துப் புரட்சி செய்தார் வள்ளுவர். அவர் இயற்றியுள்ள திருக்குறளே சான்று பகரும். நடுநிலை பிறழாத ஆராய்ச்சியாளர் நன்குணர்வர்.

சிவநெறியினர் வள்ளுவரைத் தம்மவர் என்று கொண்டு அவரது உருவத்தை இன்றுள்ள சைவ மதத் தலைவர்களெனப்படும் "மடாதிபதிகள்", போன்று அமைத்துக் கொண்டனர். வள்ளுவர் காலத்தில் நிழற் படம் பிடித்தல் தெரியா திருந்தமையின் அவரது உண்மை வடிவை இன்று அறிய இயலவில்லை. அவரவர் விரும்பியவாறு உருவைக் கற்பனைசெய்து கொள்கின்றனர்.

அவர் எந்த சமயச் சார்பாளர் என்று கூறுதல் மேலெழுந்தவாறு நோக்குவார்க்கு விளங்கவில்லை. யாரோ கட்டிய கதையைப் படித்த மக்கள் அதனையே மெய்யென்று நம்பி வருகின்றனர். மாற்று யாரும் கூறினாரில்லை. உடன்பிறந்தார் எழுவர் எனவும் கற்பித்துள்ளர். ஔவையார் வள்ளுவருடன் பிறந்தவர் என்றும் காணப்படுகிறது. ஆராயார் கற்பனை இஃது.

வள்ளுவரது உண்மை வரலாறு காண புறச் சான்றுகளோ அகச்சான்றுகளோ இல்லை. அவர் எழுதிய திருக்குறளை நன்கு படித்து உண்மையுணரும் திண்மை யுடையார்க்கு அவருடைய கொள்கைகள் புலனாகாமற் போகா. வள்ளுவர்க்குப் பத்துப் பெயர்கள் சூட்டியுள்ளனர். அவற்றுள் 'மாதாநுபங்கி' என்பதும் ஒன்று. பேராசிரியர் இலக்குமணனார் பி.ஏ. என்ற ஒரு ஆராய்ச்சியறிஞர், இப் பெயர் புத்த மதத்தினர்க்குரியது; ஆதலின், திருவள்ளுவர் புத்த மதச் சார்பினர் என்கின்றனர்.

பேராசியர் ஏ. சக்கிரவர்த்தி (எம். ஏ., ஐ. இ. எஸ்.) என்பார் திருவள்ளுவரைச் சமண சமயச் சார்பாளர் என்று உரைக்கின்றார். புத்தர் மதத்திற்கும், சமண மதத்திற்கும் பல்வகையில் ஒற்றுமை யிருப்பதால் இஃதும் ஒருவாறு பொருத்தமாகவே தோன்றுகின்றது.

## திருவள்ளுவர் காலம்

திருவள்ளுவருடைய காலத்தைப் பலரும் பலவாறு கணிக்கின்றனர். செந்தமிழ்ச் செல்வர் பன்மொழிப் புலவர், தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் ஆய்வின்படி கி.மு, 31 என்பதையே கொண்டு இன்று ஆண்

டுக் கணக்கிடப்படுகிறது. இப்பொழுது திருவள்ளுவராண்டு 1995. தை மாத முதல் ஆண்டு தொடங்குகிறது. பேராசிரியர் இலக்குமணனாரும் இதனையொட்டியே ஆய்ந்துளார். இதற்கு மாறான ஆராய்ச்சி இனி வேண்டற்பாலதன்று. கால ஆராய்ச்சியிலேயே நமது காலத்தை யெல்லாம் கழித்தல்வேண்டா; கருத்து ஆராய்ச்சியே இனித் தேவை.

ஈண்டு வள்ளுவர் எம்மதத்தினர் என்பதைத் தெளியப்படுத்தவே காலம்பற்றிக் குறிப்பிடப் பெற்றது. சிலர் மாறுபாடாகவும் மதிப்பிட்டுளர். கடைக் கழகக் காலத்தினர் என்று கருதப்பெறுவதாலும், அக்காலத்தில் தமிழ் நாட்டில் பெருவழக்கா யிருந்த மதங்கள். புத்தமும் சமணமும் ஆதலினாலும் இவர் இவ்விரண்டனுள் ஒன்றைச் சார்ந்தவராகவே இருத்தல் வேண்டும் எனக் கூற இடமுண்டு.

மேலும், ஐம்பெருங் காப்பியங்கள் இயற்றிய ஆசிரியர்கள் புத்த, அமண சமயத்தினரே. சிந்தாமணி யாசிரியர் திருத்தக்க தேவர், மணிமேகலையாத்த சீத்தலைச் சாத்தனார் புத்தத்தையும் சிலப்பதிகாரம் செய்த இளங்கோ வடிகள் அமணத்தையும் தழுவியர்கள் என்பது உறுதி. இவர்கட்கு முற்பட்ட திருவள்ளுவர் அவற்றுள் ஒன்றனைச் சார்ந்தவர் என்பதில் இழுக்கென்ன? ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியரும் புத்த சமயத்தினரே.

'இந்து' மதம் வடநாட்டில் பரவியபோது புத்தமதம் தெற்குப் பகுதியில் வரவேற்கப் பெற்றது. இப்பொழுது இலங்கையில் புத்த மதம் இருப்பதே இதற்குச் சான்றாம். தமிழகத்திற்கு இந்து மதம் (ஆரிய மதம்) வந்து தனது செல்வாக்கைப் பெருக்கிய காலம் கடைக்கழகக் கால இறுதியே யாகும். ஆனால், இடைக் கழகக் காலத் தொடக்கத்திலேயே அதன் வாடை வீசத் தொடங்கி விட்டதெனலாம். கடைக் கழகத் தலைமைப் புலவர் நக்கீரனார் அமண சமயத்தினராகவோ புத்த சமயத்தினராகவோதான் இருந்திருத்தல் வேண்டும்.

## கற்பனைக் கதை

திருவிளையாடற் புராணம் என்ற புனை காதையில் பரஞ்சோதி முனிவர் நக்கீரரை முருக வேள் அடியாராகக் கற்பித்துள்ளார். பரஞ்சோதியார் காலம் ஏறத் தாழ நானூறு ஆண்டுகட்கு உட்பட்டதே. கடைக்கழகம் இவர்க்குத் தெரியாது. வடமொழியில் இருந்த சிவன் திருவிளையாடல்களைக் கூறும் புராணத்தைத் தமிழில் ஆக்கினார். அப்புனைந்துரையை அடிப்படையாகக் கொண்டு நக்கீரரது மதத்தை மதிப்பிடுவது சாலாது.

கடைக்கழகத்தில் திருவள்ளுவர் இயற்றிய அறநூல் அரங்கேற்றப் பெற்றதாகக் கூறப் பெறுகிறது. தொகை நூல்களில் காணப்பெறும் புலவர்களில் பெரும்பாலோர் கழகக் காலத்தினரே. பிற்காலப் புலவர்கள் இயற்றிய பாடல்கள் பலவும் அவற்றுள் சேர்க்கப் பெற்றுள்ளன. அப்பெயர்களை நோக்கின் புத்த, சமணப் பெயர்களாகவே தெரிகின்றன.

• நக்கீரர் சிறந்த புலவர். மாதாநுபங்கியும் மிகச் சிறந்த புலவர். இருவரும் சீரிய நன்னூல்கள் யாத்துத் தம் புகழை நிலை நாட்டியுளர் மதவெறி தலைவிரித்தாடிய கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இவர்களை இந்து மதத்தில் சைவத்தைத் தழுவியவராகக் கதை கட்டி விட்டனர். தம்மவராக்கிக் கொண்டனர்.

## வள்ளுவர் மதம்பற்றிய சான்றுகள்

திருவள்ளுவரது நூலாகிய திருக்குறளில் எந்த மதத்தைப் பற்றியும், எத்தத் தெய்வத்தைப் பற்றியும் கூறவில்லை. இவரது காலத்தில் இந்து மதக் கொள்கைகள் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கின. கற்பனைக் கதைகள் பல, இன்றைய நெடுங்கதைகள் போன்று, தமிழ் மக்களால் விரும்பிப் பயிலப்பட்டன. புத்த மத, அமண மதக் கொள்கைகள் மிகவும் கடினமாயும், இந்து மதக் கொள்கைகள் மிக எளியவை யாவும் இருந்தமையான் உரித்த வாழைப்பழம் விரும்பிகளாகிய தமிழர் பலர் அம்மதத்தில் நாட்டங் கொண்டனர். அவர்களை நல்வழிப்படுத்துவான் கருதி இச்சீரிய நூலை யாத்தனர்.

## இந்து மதம்

கட்டுப்பாடற்ற கலவை மதம்; உறுதியற்ற உற மதம். திருடலாம், பொய் சொல்லலாம், புறங் கூற லாம், கொல்லலாம், புலா லுண்ணலாம், சூதாடலாம், ஏமாற்றலாம், தெய்வ வழி பாடு செய்யலாம், விரும்பத் தகாத செயல்கள் யாவும் செய்யலாம், இவற்றிற்கு எதிராகவும் நடக்கலாம், இருவகையாகவும் நடக்க லாம். பிற மதங்களைப் போல இம்மதத்தை எவர் உருவாக் கினார் என்பதும் தெரிய வில்லை.

வள்ளுவர் இப்போலிக் கொள் கைகளை வெறுத்தார். மக்கள் மன உறுதியுடன் நல்லொழுக்க முள்ளவர்களாக வாழ வேண்டு மென்று விழைந்தார். எனவே, தம் நூலறிவு, பட்டறிவு, கேள்வி யறிவு ஆகியவைகொண்டு இத் தமிழற நூலாம் திருக்குறளை வடித்துத் தந்தார்.

முதல் குறளில் புத்தரையே வணங்கித் தொழுகின்றார்.

> ''அகரமுதலெழுத்தெல்லாம்
> அறிவின் முனைவன்
> முதற்றே யுலகு"

என்பதே அக்குறட்பாவின் உண்மை வடிவம். அறிவின் முனைவன் என்பது புத்தனையே குறிக்கும் தொடராகும். அதனைப் பிற்கால இந்துமதத்தார் அகற்றி "ஆதி பகவன்" என்று புகுத்தி விட்டனர். அன்றியும் அதிகாரத் திற்குக் ''கடவுள் வாழ்த்து'' என் றும் தலைப்புச் சூட்டி விட்டனர். திருக்குறளில் யாண்டும், 'கட வுள்' என்ற சொல் காணப்பட வில்லை. நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களின் தலைப்புகளும் அந்தந்த அதிகாரங்களில் உள்ள சொற்களைக் கொண்டே குறிக் கப் பெற்றுள்ளன. ''கடவுள் வாழ்த்தும்" ''புதல்வரைப் பெறு தலும்" மாற்றமாயுள. திருக் குறளை அச்சேற்றிய பிற்காலத் தினர் திருத்தி யமைத்திருக்கின் றனர். இச்செயலை இடைச்செரு கல் என்பர் தொன்னூலோர்.

இந்து மதக் குல முறையைக் கண்டிக்குமுகத்தான்

> "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்
> கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை
> யான்"

என்று ஒருமைப்பாட்டை உறு திப்படுத்தியுள்ளார். 'சாதி'என்ற சொல் அன்று வள்ளுவர்க்குத் தெரியாது. இந்துமதத் தொடக்க காலமது. இப்பல சாதிப் பிரிவு பிந்தியதே.

ஆரியமத வேள்வி (யாகம்)யை மாதாநுபங்கி மறுத்துள்ளார் இதோ குறட்பா:

"அவிசொரிந்து ஆயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை
நன்று".

கொல்லாமை என்றகொள்கை புத்த மதத்தின் உயிர் நாடி. அதைப்பற்றி ஒரு அதிகாரமே வகுத்துள்ளார்.

"அறவினை யாதெனின்
கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாந் தரும்",

என்ற முதற் குறட்பாவில் கொல்லாமைதான் அறம் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆரிய மதத்தினர் தங்களை 'அந்தணர்' என்ற உயர் சொல்லால் கூறிப் பெருமைப்பட்டதை அறிந்து அச்சொற்கு விளக்கம் உரைத்து விட்டார். அக்குறட்பா வருமாறு :

"அந்தண ரென்போர்
அறவோர்மற் றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக
லான்''

எல்லா வுயிர்களிடத்தும் செவ்விய தண்ணருளை மேற்கொண்டொழுகுவோரே அந்தணர் என்று கூறுகிறார்.

புலாலுண்பதை மறுத்துளார் வள்ளுவர். புலான் மறுத்தல் என்ற அதிகாரத்தில்,

''தன்னூன் பெருக்கற்குத்
தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள்"

என்ற பாவால் புலாலுண்பவர் கருணையுடையவரா யிருக்க முடியாது என்கின்றார். இன்று இக்கருத்தைப் பலர் ஏலார்.

இன்ன பிற எடுத்துக் காட்டுகளும் உள.

மேற்காட்டிய சில சான்றுகளாலும், பிறவற்றாலும் திருவள்ளுவர் புத்த மதத்தினர் என்பது துணியப் பெறுகின்றது. அவரை அலங்கோலப் படுத்தியவர்; வெறிபிடித்த மதவாதிகளே.

---

"மூலதனம் என்பது உழைப்பின் விளைவு; முதலில் உழைப்பு இருந்திராவிட்டால் மூலதனம் முளைத்தே இருக்காது."

—ஆப்ரகாம் லிங்கன்.

x x x

"வெற்றிகரமான தொழில் - வாணிப முதலாளியை விட வேசிகள் மிகத் தூய்மையான வாழ்க்கை நடத்துகின்றனர்."

—லின் யு டாங்.

x x x

"உண்மையாகவும் நேர்மையாகவும் செய்யப்படுகின்ற எந்த விதமான உழைப்பிலும் இன்பமும் திருப்தியும் இருக்கின்றன. இதைப் போன்ற மன நிறைவும் மன அமைதியும் வேறு எதிலிருந்தும் பெற முடியாது."

—ஜான் ப்ரைட்.

எஸ். ஆறுமுகம்

# பண்டைத் தமிழக நாணயங்கள்

II

## பாண்டியர் கால நாணயங்கள்

### சிந்துவெளி நாகரீகம்

அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் W. F. லிப்பி (Prof. W. F. Libby) 1951-ல் தொல் பொருள்களின் காலவரை யறை செய்யும் மிக சக்தி வாய்ந்த "ரேடியோ கார்பன் காலவரை யறை கருவி" (Radio carbon Dating Method) என்ற ஒன்றைக் கண்டுபிடித்து மென்மேலும் அதனை அபிவிருத்தி செய்து ஆய்வின் பலனை "C14 ரேடியோ கார்பன்" முறைப்படி 40,000 ஆண்டுகளுக்குட்பட்ட புதைபொருள்களின் காலத்தை அறிய முடியும் என நிருபித்தார். அவருக்கு 1960-ல் இரசாயன ஆராய்ச்சிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது. இம்முறைப்படி நிர்ணயிக்கும் காலம் 100 ஆண்டுகள் வரை ஏறத்தாழ மாறுபடலாம்.

1955-ல் இந்தியாவில் இரு தடவை இம்முறை கையாளப் பட்டு, பின் கைவிடப்பட்டது. காரணம், இம்முறை விண்வெளி ஆராய்ச்சி சோதனைசாலைகளில் தான் திறம்பட நடைபெற முடியும். இந்நிலையில் இந்தியாவின் பழம்பெரும் நாகரீக காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த டாக்டர் H. J. பாபா அவர்கள் டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் (Tata Institute of Fundamental Research) C 14 ரேடியோ கார்பன் முறையை நிர்மாணித்தார். இந்திய தொல்பொருள் அகழ்வுகள் நடைபெறும் சிந்துவெளி பகுதிகளான மொகஞ்சதரோ, அரப்பா, தம்ப்சதாத் (Dambsadaat), நியாபூதி (Niai buthi), கோட்டிஜி (Kot diji) முதலிய இடங்களிலிருந்தும் மற்றைய இடங்களிலிருந்தும் 80 வகையான புதைபொருள்கள் பிரபல பூதத்துவ ஆராய்ச்சியாளர்களாலும் ரேடியோ கார்பன் பரிசோதனை நிபுணர்களாலும் சோதனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. அவைகளை இங்கு இம்முறைப்படி சோதனை செய்ததில் சிந்துவெளி நாகரீகத்தின் காலம் கி. மு. 2300-க்கும் கி. மு. 1750-க்கும் இடைப்பட்டது என நிர்ணயிக்கப்பட்டது. இவைகளை வெளி நாட்டு பரிசோதனைசாலைகளுக்கு அனுப்பி சோதிக்கப் பெற்றதில் இம்முடிவு சரியானது என முடிவு செய்யப்பட்டது. ஆதலின், சிந்துவெளி நாகரீகத்தின் காலமாகிய வரலாற்று இடைப்பட்ட காலம் (Proto – Historical) கி. மு. 2300 — கி மு. 1750 ஆகும். சிந்துவெளி நாகரீகம் திடீரென ஏற்பட்டதன்று. அவ்விடங்களில் நாம் கண்ட பொருள்களுக்குரிய காலத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்தே இந்தியாவில் தானே இடம், பொருள், ஏவல்கட்கு ஏற்றபடி வளர்ச்சி

பெற்று வந்ததாகும். அரப்பா நகரம் பூமிக்கு அடியில் எட்டு அடுக்குகள் கொண்டிருப்பதால் எட்டு முறை புதுப்பிக்கப்பட்ட நகரம் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

## சிந்துவெளி முத்திரைகளும் எழுத்துக்களும்

சிந்து பிரதேசத்தின் மேற் கெல்லை கீர்தர், இந்துகுஷ், சுலை மான் ஆகிய மலைத்தொடர்களும் காடுகளும் நிறைந்ததாகும். ஆத லின் காட்டு விலங்காகிய யானை, காண்டாமிருகம், காட்டு எருமை ஆகியவைகளை பெரிதும் முத் திரைகளில் பொறிக்கலாயினர். சிந்துவெளியில் தந்தத்தால் ஆன பொருள்கள் அகப்பட்டுள் ளன. ஆகையால் தந்தத்தின் உபயோகம் பற்றி யானை அவர் களிடையே பெரு மதிப்புப் பெற் றிருந்தது. சிந்துவெளி மக்க ளுக்கு உழவுக்கும் வாணிபத்திற் கும் எருது பேருதவி புரிந்துவந்த தால் அதுவே வணக்கத்திற் குரிய விலங்காக மாறிவிட்டது. சிவபிரான் "பசுபதி" எனப்படு வதை அம்முத்திரை குறித்தல் வேண்டும். சில முத்திரைகளில் சுவஸ்திகா சக்கரம் பொறிக்கப் பட்டுள்ளது. இவை இரண்டும் அவர்கள் வழிப்பட்ட ஞாயிற்றின் அடையாளங்கள் ஆகும்.

சிந்துவெளி எழுத்துக்களைக் கொண்ட மொழி பழைய திரா விடமாகும். அத்திராவிடத்தின் பெரும்பாலான சொற்கள் தமிழி லேயே காணப்படுகின்றன. அது பழைய கன்னடத்தையும் சங்கத் தமிழையும் ஒருவாறு ஒத்ததாகும் (Rev. Fr. H. Heras.-Studies in Proto-Indo-Mediterranean culture P. 270-279) என்பது சிந்து வெளி மக்கள் பேசிய மொழி ஆராய்ச்சியில் தன் வாழ்நாள் முழுவதையும் கழித்த ஹெரஸ் பாதிரியாரின் முடிவாகும். மொகஞ்சதரோ முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள உருவ எழுத்துக்களை ஒலி முறைப்படி

> **சாணக்கிய சூத்திரம்!**
>
> "அரசனது தோட்டத்தில் ஏதாவது ஒரு மரம் அகால மாகப் பூக்கவோ, காய்க்கவோ செய்திருந்தால் அதில் கடவுள் தோன்றியிருக்கிறார் என்று பொது மக்களிடம் காட்டி விளம் பரப்படுத்த வேண்டும். அல்லது ஒரு கிணற்றில் அநேக தலை களையுடைய பாம்பு ஒன்றிருப் பதாகச் சொல்லி அதைப் பார்க்க வருபவர்களிடமிருந்து ஒற்றர்கள் பணம் வசூலிக்க லாம். ஒரு பாம்பின் சிலையில் ஓட்டை செய்தோ, அல்லது கோயிலின் இருட்டு மூலை யிலோ, அல்லது ஏதாவதொரு பொந்திலோ பசியால் வாடிக் கிடக்கும் பாம்பு ஒன்றை வைத்து மக்களைப் பார்க்கச் சொல்லிப் பணம் வசூலிக்க லாம். இம்மாதிரித் தந்திரங்களை எளிதில் நம்பாதவர்களுக்கு மயக்க மருந்து கலந்த நீரைத் 'தீர்த்தம்' என்றும் "பிரசாதம்" என்றும் சொல்லிக் குடிக்கும்படி செய்து, அவர்கள் குடித்து மயங்கியவுடன், அதற்குக் கார ணம் 'கடவுள் கோபம்' என்று சொல்லிவிடவேண்டும். அல் லது தாழ்ந்த சாதியான் ஒரு வனைப் பாம்பு கடிக்கும் படியா கச் செய்து, இம்மாதிரி துர்ச் சகுனம் நேரிடாது தடுக்கப் போவதாக பாசாங்கு செய்து ஒற்றர்கள் பணம் வசூலிக்க லாம்."
>
> —சாணக்கியர்-"அர்த்த சாஸ்திரம்"

படித்துப் பார்த்து அவைகள் தமிழ்ச் சொற்களாகவும் பெயர்களாகவும் விளங்குவதை தக்க ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிந்துவெளியில் கிடைத்த சில எழுத்துக் குறிகள் தளதள, முகில், கார்முகில், மழை, மூன்கண், பேராள், எண்ணுள், மீன், நண்டூர், வேலூர், மீனவர், நாய் வேல் முதலிய சொற்களைக் குறிக்கின்றன. வெளிச்சம், விளக்கு, ஞாயிறு, ஒளி, சுடர் என்னும் பல வற்றைக் குறிக்க ஏறக்குறைய ஒரே அடையாளமான எழுத்துக் காணப்படுகிறது. ஒரு முத்திரையில் ''மூனுதயது" என்னும் சொற்றொடர் காணப்படுகிறது. அதன் பொருள், "மூன்று கம்பளி போர்த்துக் கொள்ளத்தக்க குளிரையுடைய காலம்" என்பதாகும். "பேராள்'', ''எண்ணுள்", ''மூன்கண்'' என்பன சிவனைக் குறிப்பதாகும். சிந்துவெளி சமய நிலை இன்றளவும் இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் இருந்து வருகையில் எழுத்துக் குறிகள் மட்டும் மறைந்து விட்டன எனக் கூறுதல் பொருத்தமற்றதாகும்.

சிந்துவெளி எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்களாகக் காணப்படினும், அவற்றுள் சில வேறுபாடுகள் உள்ளன. பறவை, மீன், விலங்கு, மனிதரின் பல வகை உருவங்கள் போன்ற ஓவிய எழுத்துக்கள் மிகச் சிலவாகவே உள்ளன. மற்ற எழுத்துக் குறிகள் எல்லாம் பெரும்பாலும் தொன்று தொட்டு உலக வழக்கில் இருந்துவரும் எழுத்து வடிவத்தை ஒத்தே இருக்கின்றன. எனினும் எழுத்துக்கள் அனைத்தும் ஓவிய அமைப்பில் தெளிவான நேர்க்கோடுகளால் எழுதப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் பல்லாவரம், பல்லடம் தாலுகாவில் உள்ள செட்டிப்பாளையம், மண்மேடு, புதுவையிலுள்ள அரிக்கன்மேடு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், புதுக்கோட்டை, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், திருமறைக்காடு எனப்படும் வேதாரணியம், திருவிதாங்கூர் முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓவியங்களுடன் கூடிய மட்பாண்டங்கள், அணிகள், விளையாட்டுப் பொருள்கள், உருவங்கள் (Terracottas), மற்றைய பொருள்கள் சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ள பொருள்களை மிகவும் ஒத்துள்ளன. பாண்டிய நாட்டில் கிடைத்துள்ள நாணயங்களும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்துவெளி எழுத்துக் குறிகளிலிருந்தே பிராமி எழுத்துக்கள் தோன்றினவாதல் வேண்டும் எனப் பல காரணங்கள் காட்டி மெய்ப்பித்துள்ளனர், அறிஞர்கள் சர் அலெக்ஸாண்டர் கன்னிங்காம், பேராசிரியர் லாங்டன் ஆகியோர். அசோகன் சாசனங்களில் காணப்படும் பிராமி எழுத்துக்கள் கி. மு. 300க்கு சரியான காலத்தவை.

சிந்துவெளி எழுத்துகட்கும் பிராமி எழுத்துகட்கும் இடைப்பட்ட வளர்ச்சி உடையன என கருதத் தக்க குறிகளைக் கொண்ட சாசனம் ஒன்று மத்திய இந்தியாவில் விக்கிரமகோல் என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (Indian Ant. Vol. 62) சிந்துவெளி நாகரீகம் ஆரியர் வருகை (சுமார் கி.மு. 1500)யோடு அழிவுற்றது என்று கூறக் கூடிய சான்று இதுகாறும் கிடைத்திலது. ஒருவகை நாகரீகம் தோன்றும்பொழுது அது அதற்கு முற்பட்ட நாகரீகத்தை தன்ன

கத்தே கொண்டே தோற்ற மெடுக்கும். இது வரலாற்றின் உயிர் நாடியாகும். மேற்கூறிய வற்றை எல்லாம் கருத்திற் கொண்டு கடைச்சங்க கால பாண்டியரது நாணயங்கள்பற்றி ஆராய்வோம்.

## கடைச் சங்க கால பாண்டியர் நாணயங்கள்

கடைச்சங்க கால பாண்டிய மன்னர்கள் 49 பேர் மதுரையைத் தலைநகராகக்கொண்டு சுமார் 1850 ஆண்டுகள் (கி. பி. 200 இறுதி வரை) ஆண்டு வந்தனர் எனக் குறிப்பிட்டோம். சிந்து வெளி நாகரீகத்தின் இறுதிக் காலமும் கடைச்சங்க துவக்க காலமும் ஏறக்குறைய ஒரே காலமாகும்.

கடைச் சங்க கால பாண்டிய ரது நாணயங்கள் சம சதுரமாக வும் அமைந்துள்ளன, அவற்றில் கடைச்சங்க கால முற்பகுதியில் பாண்டியரால் வெளியிடப்பட்ட நீண்ட சதுர நாணயங்களில் (படம் 4–5) ஒருபுறம் யானை உரு வம் பொறிக்கப்பட்டுள்ளது. யானையின் மேற்புறம் சக்கரம், சங்கு, பிறைச்சந்திரன், செடி யுடைய தொட்டி (கும்பம்), மலர், லிங்கம் முதலிய சின்னங்களும் யானையின் முன்புறம் சூலம், கொடி மரம் ஆகிய சின்னங்களும் புடைப்புச் சித்திரமாகப் பொறிக் கப்பட்டுள்ளது. நாணயத்தின் மறுபுறம் முக்கோண வடிவமாக ஒன்றின்மேல் ஒன்றாக உள்ள கோடுகள் பாண்டியர்களின் தலைச்சங்க கால மீன் இலச்சினை யாக அமைந்துள்ளது. இதே காலத்தைச் சேர்ந்த சில நாண யங்களில் யானைக்குப் பதில் காளைமாடு மேற்குறிப்பிட்டுள்ள அத்தனை சின்னங்களுடன் அமைந்துள்ளது. நாணயங்கள் அமைப்பிலும் யானை, எருது போன்ற சின்னங்களிலும், அவை களின் மேற்புறம் உள்ள எழுத் துக் குறிகளும் சிந்துவெளியிற் கிடைத்துள்ள எழுத்துக் குறி களையே பெரும்பாலும் தழுவி யுள்ளன. இங்கு விக்கிரமகோல் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள சிந்துவெளி எழுத்து கட்கும் பிராமிய எழுத்துகட்கும் இடைப்பட்ட வளர்ச்சியுடைய எழுத்துக் குறிகளையும் கவனத் திற் கொண்டு ஆராய்வோமா னால் இந்நாணயங்கள் கடைச் சங்க கால முற்பகுதியில் வெளி யிடப்பட்டதென கொள்ளல் மிகப் பொருத்தமுடையதாகும்.

கடைச்சங்க கால இடைப் பகுதியில் வெளியிடப்பட்ட நாணயம் ஒன்றில் யானையின் மேல் அரசன் வீற்றிருப்பதும் அதன்முன் இருவர் அதனை நடத்திச் செல்வதும் பொறிக்கப் பட்டுள்ளது. பிறிதொரு நாண யத்தில் யானையின் மேற்புறம் சுவஸ்திகா, சக்கரம், சங்கு போன்ற சின்னங்கள் உள்ளன. மற்றுமொரு நாணயத்தில் முன் புறம் ஒரு மரமும் அதற்குமேல் இருவகையான தர்ம சக்கரங் களும், மரத்தின் பக்கத்தில் புத்தமத கோவில் அமைப்பும் (Chaitya) அம்மரத்தின் இரு புறமும் மாடும், சிங்கமும் உள் ளன. அம்மரம் ஒருவேளை புத் தர் ஞானோதயம் அடைந்த போதி (அரச மரம்) மரத்தைக் குறிப்பதாக அமைக்கப்பட்டிருக் கலாம். பின்புறம் மூன்று கோடு களாய் அமைந்த மீன் இலச் சினை உள்ளது.

## பிற்கால பாண்டியர் நாணயங்கள்

சங்க காலத்திற்குப் பின் ஆண்ட பாண்டிய அரசர்கள்

வெளியிட்ட நாணயங்கள் வட்ட வடிவமாக அமைந்துள்ளன. அவைகளில் முன் பக்கம் முழங் காலிட்டுப் படுத்திருக்கும் காளை உருவமும் இருபுறம் இரு குத்து விளக்குகளும் மேலே பிறைச் சந் திரனும் பின் பக்கம் இரு மீன் களும் இரு புறமும் இரு குத்து விளக்குகளும் மேலே பிறைச்சந் திரனும் அமைந்துள்ளன. இவை கள் கொற்கை என்னுமிடத்தில் கிடைக்கப் பெற்றவையாகும். சங்க கால இறுதியில் வெளியிடப் பட்ட நாணயமாக இவை இருக்க லாம்.

கி. பி. மூன்றும் நூற்றுண்டு தொடக்கம் முதல் கி. பி. ஆரும் நூற்றுண்டின் பிற்பகுதி வரை பாண்டிய நாடு களப்பிரர் ஆட் சிக்குட்பட்டிருந்தது. கி. பி. 575-ல் கடைச்சங்க கால பாண்டி யரின் வழித் தோன்றலாகிய பாண்டியன் கடுங்கோன் களப் பிரரை வென்று மீண்டும் மதுரை யில் பாண்டியரது ஆட்சியை நிலை நாட்டிஞன் என வேள்விக் குடி செப்பேடுகளால் அறியப் படுகிறது. களப்பிரர் பிராகிரு தம், பாலி முதலிய மொழிகளைத் தமக்குரிய மொழிகளாகக்கொண் டனர். பிற மொழியாளரான களப்பிரரின் ஆளுகைக்குட்பட் டிருந்த பாண்டி நாட்டில் அர சாங்க மொழி வேருெரு மொழி யாகப் போய்விடவே நம் தாய் மொழியாகிய தமிழ் வீழ்ச்சியுற் றது. பாண்டியர்கள் வெளியிட் டுள்ள நாணயம் ஒன்றில் ஒரு புறம் முழங்காலிட்டுப் படுத்திருக் கும் காளை மாடும், அதன் இரு புறமும் இரு குத்து விளக்குகளும் உள்ளன. அதன் மறுபுறம் பிராமி மொழியில் ''ஸ்ரீவிக்கிரம்'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நாணயம் களப்பிரர் ஆளு கைக்குப் பின் கி பி. ஆரும் நூற் ருண்டில் பாண்டிய அரசனுல் வெளியிடப்பட்ட நாணயமாக இருக்கலாம். பாண்டியர் நாண யங்களில் முதன் முதலாக பிராமி எழுத்துக்கள் காணப்படு வது இவைகளில் தான்.

பாண்டியன் கடுங்கோனுடைய மகன் மாறவர்மன் அவனி சூளா மணி கி. பி. 600 முதல் கி. பி. 625 வரை ஆட்சி புரிந்தான். இவன்காலம் முதல் பாண்டியர் கள் ''மாறவர்மன்'' ''சடையவர் மன்'' என்ற பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி சூடி வருவாராயினர். கி. பி. 640-ல் பட்டமெய்திய அரிகேசரி என்ப வனுக்கு மாறவர்மன் சுந்தர பாண்டியன், கூன் பாண்டியன், என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இவன் காலத்திலிருந்து தான் பாண்டிய மன்னர்களின் சிறப்புப் பெயர்கள் அவர்கள்

## செய்கையின் சிறப்பு

''தியாகம், எளிமை என்ற லட்சியங்கள் என் அன்றுட வாழ்க்கையில் மேலும் மேலும் அதிகமாக நிறைவேறி வந்தன. சமய உணர்ச்சியும் மேலும் மேலும் துரிதமாக எனக்கு ஏற் பட்டு வந்தது. அதே சமயம், சைவ உணவுக் கொள்கையைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வ மும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஒரு கொள்கையைச் சரியானபடி பரப்ப வேண்டு மானல் அதற்கு எனக்குத் தெரிந்தது ஒரே ஒரு வழிதான். அந்தக் கொள்கையை நானே கடைப்பிடித்துக் காட்டுவதும், அறிவை வளர்த்துக் கொள் வதற்காக ஆராய்ச்சி செய்பவர் களுடன் விவாதிப்பதுமே அந்த வழி.''

''காந்தியார் சுயசரிதை''
(பாகம் 4 : அத்: 6)

வெளியிட்ட நாணயங்களில் பொறிக்கப்பட்டன என பல நாணயங்கள் மூலமாகவும் கல்வெட்டுக்கள் மூலமாகவும் அறியப்படுகிறது. கூன் பாண்டியன் முதலில் சமண மதப் பற்றுடையவனாயிருந்து பின் திருஞான சம்பந்தரால் சைவனாக்கப்பட்டான். இவன் சுந்தர பாண்டியன் என்ற சிறப்புப் பெயரில் வெளியிட்டுள்ள நாணயத்தில் ஒருபக்கம் தீர்த்தங்கரர் உருவம் தியானத்தில் ஆழ்ந்துள்ளது. அதன் இருபுறமும் "சுந்தர" என்ற தமிழ் எழுத்துக்கள் பிரித்து எழுதப்பட்டுள்ளன மறுபுறம் ஓர் செங்கோலின் இருபுறம் இரு மீன்களும் அவற்றின்மேல் அரசாங்க குடையும் இரு கொடிகள் சூழ அமைந்துள்ளன.

கி. பி. 835-ல் பட்டமேறிய சீமாறன் சீவல்லபன் கங்கர், பல்லவர், சோழர், காலிங்கர், மாகதர் ஆகிய அரசர்களை வென்றமையால் இவனுக்கு ஏகவீரன், பரசக்கர கோலாகலன், அவனிப சேகரன் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. புதுகோட்டைக்கு அருகிலுள்ள சிற்றண்ணவாயில் சமணரது குகைக் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்று "பார் முழுதாண்ட பஞ்சவர் குல முதல்—ஆர்கெழு-வைவேல் அவ்வனிபசேகரன் — சீர்கெழு செங்கோல் சீவல்லபன்" என்று இவனைப் புகழ்ந்து கூறுகின்றது. மற்றும் சின்னமனூர்ச் செப்பேடுகளாலும் தளவாயபுர செப்பேடுகளாலும் இவ்வரலாறு அறியப்படுகின்றது. இவன் தனது விருது பெயரால் நாணயம் ஒன்று வெளியிட்டுள்ளான். அதன் முன்புறம் ஒரு செங்கோலின் இருபுறமும் இரு மீன்களும் மேலே பிறைச்சந்திரனும் பின்புறம் "அவனிபசேகரன்" என்ற அவனது விருதுப் பெயர் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1216 முதல் கி. பி 1238 முடிய முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சி புரிந்தான். இவனது இளமைப் பருவத்தில் மூன்றும் குலோத்துங்க சோழன் பாண்டி நாட்டின் மேல் படையெடுத்து அங்கு பல அழிவு வேலைகள் நிகழ்த்திச் சென்றமையும், தனது முன்னோர்கள் பல ஆண்டுகளாக சோழர்க்குத் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னராக வாழ்ந்து வந்தமையும் இவன் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தன. இந்நிலையில் பேராற்றல் படைத்த மூன்றும் குலோத்துங்கன் கி. பி. 1218-ல் இறந்துவிடவே, காலங் கருதிக் கொண்டிருந்த சுந்தர பாண்டியன் சில திங்கள்களில் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு கி. பி. 1219-ல் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று மூன்றும் இராச ராச சோழனைப் போரில் வென்று அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். இப்படையெழுச்சியில் சோழரின் பழைய தலைநகராகிய உறையூரும் தஞ்சாவூரும் கொளுத்தப்பட்டுப் போயின.

வாகை சூடிய சுந்தர பாண்டியன் சோழர்க்கு இரண்டாம் தலைநகராக விளங்கிய பழையாறை நகர்க்குச் சென்று அங்கு ஆயிரத்தளி அரண்மனையில் வீராபிடேகஞ் செய்து கொண்டான். பிறகு தன் நாட்டிற்குத் திரும்புங்கால் நாட்டை இழந்த மூன்றும் இராச ராச சோழனை அழைப்பித்து தனக்கு ஆண்டுதோறும் கப்பஞ் செலுத்திக் கொண்டு சோழ நாட்டை ஆட்சி புரிந்து வருமாறு ஆணையிட்டு அந்நாட்டை வழங்கினன். சுந்தர பாண்டியனுடைய மூன்றும்

ஆண்டு கல்வெட்டுக்கள் இவனை "சோனாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்" எனவும், "சோனாடு வழங்கியருளிய சுந்தர பாண்டிய தேவர்" எனவும் கூறுகின்றது. இதன் நினைவாக இவன் இரண்டு நாணயங்கள் வெளியிட்டுள்ளான். அந்நாணயங்களின் முன்புறம் ஒரு செங்கோலின் இருபுறம் இரு மீன்கள் உள்ளன. பின்புறம், "சோனாடு கொண்டான்" என்ற விருதுப் பெயர் தமிழில் உள்ளது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்குப் பின் முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1251-1271) முடி சூட்டப் பெற்றான். இவன் சேர நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று சேர அரசனை வீர ரவி உதய மார்த்தாண்ட வர்மனைத் தோற்கடித்து சேரநாட்டைக் கைப்பற்றினான். மூன்றாம் இராசேந்திர சோழனோடு சோழர் ஆட்சி சோணாட்டில் முடிவெய்தியது. இவன் இலங்கை அரசனையும், பல்லவ அரசனை கோப்பெருஞ் சிங்கனையும் வென்று கப்பங் கட்டி வருமாறு செய்தான்.

பிறகு சுந்தர பாண்டியன் தெலுங்கச் சோழனாகிய விசய கண்ட கோபாலனைப் போரிற் கொன்று அவன் ஆட்சிக்குட்பட்டிருந்த காஞ்சி மாநகரைக் கைப்பற்றினான். பின்னர் வடபுலஞ் சென்று காகதீய மன்னனாகிய கணபதி என்பவனைப் போரில் வென்று நெல்லூரைக் கைப்பற்றி அந்நகரில் வீராபிடேகஞ் செய்து கொண்டான். இந்நிலையில் விசய கண்ட கோபாலன் தம்பியார் வந்து வணங்கவே அவர்களுக்குரியகாஞ்சிமாநகரை அளித்து தனக்கு ஆண்டுதோறும் திறை செலுத்தி வருமாறு பணித்தனன்.

இங்ஙனம் பல நாடுகளை வென்று தன்னடிப் படுத்தி, தனக்கு ஒப்பாரும்மிக்காருமின்றி முடி மன்னனாகி விளங்கிய சுந்தர பாண்டியன் 1. எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர் 2. மகாராசாதி ராச ஸ்ரீ பரமேசுவரன் 3. எல்லாந் தலையான பெருமாள் 4. காஞ்சி புரவராதீஸ்வரன் 5. காஞ்சி புரங்கொண்டான் 6. கச்சி வழங்கும் பெருமாள் என்ற பட்டங்களைப் புனைந்து கொண்டு ஆட்சி புரிந்தனன். இவன் ஆட்சி காலத்தில் வழங்கிய "எல்லாந் தலையானான்" "கச்சி வழங்கும் பெருமாள்" என்ற நாணயங்களும் இதற்குச் சான்றாகும்.

1. எல்லாந் தலையானான்: (முன்புறம்) அரசன் தன் அரச உடையில் வலது கையில் ஓர் தாமரைப் பூவுடனும் இடது கையில் ஒரு திரிசூலமும் வைத்துக் கொண்டிருக்கிறான். அவனது இடது புறம் "க" என்ற தமிழ் எழுத்து உள்ளது.

பின்புறம்: சில நாணயங்களில் "எல்லாந் தலையானான்" என்ற தமிழ் எழுத்துக்கள் இரு மீன்களுக்கிடையிலும் சிலவற்றில் இரு மீன்கள் குத்து விளக்கு இவைகளைச் சுற்றிலும் உள்ளன.

2. கச்சி வழங்கும் பெருமாள்: (முன்புறம்) இரு மீன்கள் ஒன்றன்மேல் ஒன்றாக குறுக்காக அமைந்துள்ளது. அதைச் சுற்றி செங்கோல், பிறைச்சந்திரன், இரு தாமரை மொட்டுகள் முதலிய சின்னங்கள் உள்ளன.

பின்புறம்: "கச்சி வழங்கும் பெருமாள்" என்ற தமிழ் எழுத்துக்கள் உள்ளன.

முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திலேயே கி. பி. 1253 முதல் கி. பி. 1268 வரை சோழ நாடு, நடு நாடு

தொண்டை நாடுகளில் அப் பாண்டிய அரசனின் பிரதிநிதி யாக இருந்து ஆண்டவன், சடை யவர்மன் வீரபாண்டியன் ஆவான். இவன் காலத்தில் "வாளால் வழி திறந்தான் குளிகை" (புதுகோட்டை நாட்டு கல்வெட்டுக்கள் நெ. 439, 440) என்ற நாணயம் வழக்கிலிருந் தது.

**மதம்**

"சொற்களை எந்தப் பொருளி லும் பயன்படுத்தலாம்; பல வேறு மக்கள் பல்வேறு பொருள்களில் பயன்படுத்து கின்ற சொற்களில் 'மதம்' என்ற சொல் முக்கியமானது. இதற்கு இரண்டு பேர் சேர்ந்து ஒரே பொருளைக் கூறக் கூடி யவர்களோ, ஒரே கருத்தைக் கொள்கிறவர்களோ இல்லை. சடங்குகள், நூல்கள், அற உரைகள், வெறுப்பு உணர்ச்சி, அன்பு, யாகம், தர்மம், இறை வணக்கம், உண்ணு விரதம், விருந்து, மறு உலகம், திரு மணம், சாக்காடு, பக்தி, கலகம் — போன்றவைகளை 'மதம்' என்று கருதிக் கொண்டிருப் பவர்கள் பலர். ஆகவே 'மதம்' என்ற சொல்லுக்கு குறிப்பிட்ட பொருளோ, கருத்தோ கிடை யவே கிடையாது. ஒரே குழப் பம்தான்! இடைவிடாத விவா தந்தான்!

ஆதலால் இந்தச் சொல்லை ஒழித்துவிட்டு, இதைவிடப் பொருள்தரக்கூடிய, தத்துவம், ஒழுக்கம், கடமை, மனே உணர்ச்சி, சமுதாய நடை முறை—போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம்."

—நேரு

-(சுயசரிதை: பக்கம் 378)

பாண்டிய அரசர்கள் வெளி யிட்ட நாணயங்களில் "சுந்தர பாண்டியன்", என்ற பெயருடன் கூடிய பலவகையான நாணயங் கள் கிடைத்துள்ளன.

கி. பி. 1268 முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்ட முதல் மாறவர்மன் குலசேகர பாண்டி யன் "கொல்லங் - கொண்ட பாண்டியன்" எனவும், "புவனேக வீரன்" எனவும் அழைக்கப்பட் டான். அவன் வெளியிட்டுள்ள நாணயத்தில் முன்புறம் ஓர் அழ கிய குடையின் கீழ் பறக்கும் நிலை யில் உள்ள கருடாழ்வாரும் பின் புறம் "புவனேகவீரன்" என்ற தமிழ் எழுத்துக்களும் உள்ளன.

மிகச் சீரிய நிலையிலிருந்த பாண்டிய நாடு கி. பி. பதினன் காம் நூற்றுண்டின் பகுதியில் தாழ்ந்த நிலை அடையத் தொடங் கிற்று. இந்நிலையில் பாண்டிய நாட்டின்மீது அலாவுதீன் கில்ஜி யின் படைத்தலைவனுன மாலிக் காபூர் படையெடுத்து வந்து பல நகரங்களைக் கொள்ளையடித் தான். பாண்டிய நாட்டில் ஒற் றுமையின்மை ஏற்பட்டு குறுநில மன்னர்களாகப் பிரிந்து ஆட்சி புரியத் தொடங்கினர்கள். அவர் கள் வெளியிட்டுள்ள நாணயங் கள் சிலவற்றில் "சமரகோலா கலன்", "கோனேரி ராயன்" என்ற விருதுப்பெயர்கள் காணப் படுகின்றன. இவ்வாறு நாண யங்கள் வாயிலாகவும் தமிழக வர லாற்றை ஓரளவு அறிய முடி கின்றது. ★

பேனு மன்னர்கள் : 4

# கவிக்கோமகன் டென்னிசன்

## " காதம்பரி "

*[இங்கிலீஷ் மாபெரும் கவிஞர்களில் டென்னிசன் ஒருவர். பல உலகப் பெரியவர்களைப் போல் இவரும் ஏழ்மையில், எளிய குடியில் பிறந்து, வறுமையுடன் போராடியவர். இவரது வரலாறு இங்கு சுருக்கித் தரப்படுகிறது.]*

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இரண்டு பெருங் கவிஞர்களின் புகழ் ஆங்கில நாடெங்கிலும் பரவிக்கிடந்தது. அவர்கள் ஆல்ஃபிரெட் டென்னிசனும், இராபர்ட்பி ரௌனிங்கும் ஆவர். அவர்களுக்குள் மூன்ருண்டு காலமே ஏற்றத் தாழ்வு இருந்தது, பிறப்பிலும், இறப்பிலும்! விக்டோரியா அரசியின் ஆட்சிக் காலத்தின் மாட்சியையும், பெருமித வாழ்வையும் கண்டும் உணர்ந்தும் அனுபவித்தவர்கள் இவ்விரு பெருங் கவிஞர்களும். அவர்களுடன் ஆங்கிலக் கவிதையின் சிறப்பும் மங்கி மறைந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் அவர்கள் இறந்த பின்பு அவ்வளவு கவித்திறன் படைத்த பேரறிஞர்கள் எவருமே ஆங்கில நாட்டில் தோன்றவில்லை. இதற்குக் காரணம் பின்வருவதாகவும் இருக்கக் கூடும். இங்கிலாந்தின் அரசியல், பொருளாதாரம், சமூக இயல்—மூன்றும் சீர்குலைந்து கிடந்தன. இங்கிலாந்தின் புகழ் வெளிநாடுகளில் கொடி கட்டிப் பறந்த போதெல்லாம், அந்நாட்டில் பெரும் புகழ்படைத்த கவிமணிகள் தோன்றி வந்திருக்கிருர்கள். நார்மானிய ஆட்சி மங்கி, ஆங்கிலோ—சாக்சனியர்கள் தலையெடுத்தபோது சாஸர் என்ற பெருந்திறன் படைத்த அறிஞர் தோன்றினர். ஆங்கில இலக்கிய வரலாற்றின் துவக்கமே அவரிடமிருந்துதான்! முதலாம் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் தேசீய உணர்வு ஏற்பட்டிருந்தது. அப்போது ஷேக்ஸ்பியர் போன்ற நாடக மேதைகள் தோன்றி எல்லோரையும் மகிழ்வித்தனர். ஊழலும், ஒழுங்கீனமும் மலிந்து கிடந்த அரசவையின் அதிகாரப் பிடிப்பிலிருந்து மக்கள் தம் உரிமையினை நிலைநாட்டக் கிளம்பிக்கொண்டிருந்த சமயத்தில், ஜான் மில்டன் என்ற அமர கவிஞன் தோன்றிச் சுடரொளி பரப்பினன். பைரன், ஷெல்லி, கீட்ஸ் போன்ற புத்துலகக் கவிகள் தோன்றித் தம் இனிய கவிதைகளின் கருத்துச் செறிவினல் உலகை ஆட்கொள்ளத் தொடங்கிய சமயம், ஆங்கில நாட்டு மக்களுக்கு மக்களாட்சியின் மீதும், அடிப்படை உரிமைகள் பற்றியும் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றுதலும் ஏற்பட்டிருந்தன. உரோமப் பேரரசு உலகமெங்கும் தன் மாண்பு புலப்பட உச்சநிலையில் இருந்தகாலத்தில், வர்ஜில் என்ற பெருங் கவிஞர் தோன்றி அதன் புகழைப் பாடி

யது போலவே, ஆங்கிலப் பேரரசு அகிலத்தின் மூன்றில் ஒரு பகுதியைத் தன் அடிமையாக்கி, ஒப்புயர்வற்றதாகத் திகழ்ந்த கால கட்டத்தில் டென்னிசன் தோன்றினன். அவனுக்குப் பிறகு இங்கிலாந்தின் பெருமை தாழ்ந்தது போலவே, இங்கிலாந்தின் காவிய வளர்ச்சியும் தேங்கி நிற்கிறது.

## டென்னிசன் இளமை

6—8—1809 அன்று, லிங்கன் ஷயர் மாவட்டத்தின் ஒரு பகுதியான சோமர்ஸ்பி கிராமத்தில் ஆல்ஃபிரெட் டென்னிசன் பிறந்தான். பன்னிரண்டு குழந்தைகளுள்ள ஒரு குடும்பக் கடலில் அவன் நான்காவது பிள்ளை. அவனுடைய தந்தையான அருட்திரு ஜார்ஜ் கிளாய்டன் டென்னிசன், மதப்பிரசாரகராக இருந்தார். தந்தை சோக உணர்ச்சிக்குப் பிறப்பிடமாக இருந்ததனல், குழந்தைகள் அனைவருமே அப்படித் தோற்றமளித்தார்கள். அதிலும் நம் டென்னிசனுக்கு எப்போதும் வாடிய முகம்தான்!

பன்னிரண்டு குழந்தைகளும் ஓயாமல் வேடிக்கை விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பார்கள். தந்தையாரின் நூல் நிலையத்தில் நிறைய நூல்கள் இருந்தமையால், பிள்ளைகள் அவற்றைப் படித்து, இன்புற்று அறிவு வளர்ச்சி பெற்றார்கள். ஆருவது வயதிலேயே டென்னிசன் கவிதை எழுதத் தொடங்கினன். பதின்மூன்றும் வயதில் நாடகக் காவியம் ஒன்றைச் செய்யுள் வடிவில் எழுத முயன்று ஏறக்குறைய ஆருயிரம் வரிகளும் எழுதி முடித்தான். பள்ளியில் அவன் மிகக் கெட்டிக்காரனக இருந்ததில்லை. ஆனல் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்திருந்தான். பள்ளியிறுதித் தேர்வில் அவன் வெற்றி பெற்ற சமயத்தில், அவன் படிப்பு ஆழ்ந்ததாயிருந்தது.

1827ம் ஆண்டில் அவன், தன் உடன் பிறந்தான் சார்லஸ் என்பவனுடன் சேர்ந்து எழுதிய கவிதைகளை, "இரு சகோதரரின் கவிதைகள்" என்ற பெயருடன் வெளியிட்டான். அதன் பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சார்லசும் அவனும் சேர்ந்து படிக்கத் தொடங்கினர்கள். பல்கலைக் கழகத்தில் இளைஞர் இலக்கியக் கழகம் ஒன்று இருந்ததால், டென்னிசன் அதில் சேர்ந்ததால் துணை வேந்தரின் பரிசு மெடலை, தான் எழுதிய "டிம்பக்டூ" என்ற கவிதைக்குப் பெற்றான். அதிலிருந்து அவன் புகழும், திறமையும் நாள்தோறும் பெருகத் தலைப்பட்டன அப்போது அவனுக்குக் கிடைத்த நண்பர்களில் உயிர் நண்பன் ஆர்தர் ஹல்லாம் என்பவன். ஆண்மை, அறிவு, அழகு எல்லாம் ஒன்று திரட்டிய உருவம் போன்ற இந் நண்பனின் ஆதரவினல் 1830ம் ஆண்டில் டென்னிசன் தன் சொந்தக் கவிதைகளை வெளியிட்டான்.

டென்னிசனும், ஹல்லாமும் இணை பிரியாதவர்களாயினர். டென்னிசனின் தங்கை எமிலிக்கும் ஹல்லாமுக்கும் காதல் ஏற்பட்டது அந்தக் காலத்தில் டென்னிசன் தன் வாழ்நாளிலேயே அதிக மகிழ்வுடன் இருந்தான். நிறையப் படித்தான். நிறைய எழுதினன். "கவிதைகள்" என்ற பெயருடன் மூன்றும் தொகுதி வெளிவந்தது, 1832ம் ஆண்டில். இருபத்துமூன்று வயது டென்னிசனின் பேரறிவு அதிலிருந்து சுடர்விடத்தொடங்கியது.

மறு ஆண்டுத் துவக்கத்தில் உயிர் நண்பன் ஹல்லாம், வியன்னுவில் உயிர் துறந்தான். மூளையில் இருக்கும் இரத்தக் குழாய் ஒன்று வெடித்து அவன் இறக்க நேர்ந்தது. இந்த அதிர்ச்சியிலிருந்து டென்னிசன் மீள்வதற்குப் பத்துஆண்டுகள் சென்றன. பைத்தியம் பிடித்தவன் போல் அவன் மாறிஞன். அப்புறம் மனதைத் தேற்றிக்கொண்டு மாபெரும் கவிதை நூல்கள் இரண்டை ஏககாலத்தில் துவக்கிஞன். "நினைவுக் கோவை" (In Memoriam) என்ற நூல், ஹல்லாமின் நினைவு மண்டபமாகக் கவிதைகளால் கட்டப்பட்ட காவிய மாளிகை. இன்ஞென்று, ஆர்தர் என்ற ஆங்கில மன்னனின் வாழ்க்கையைக் குறித்த காதல், முதலிய ஒன்பது சுவைகளும் கலந்த பெருங் கதை.

## நல்லவர்களின் பயன்!

"அரசியல்வாதிகளில் நல்லவர்களால் பலன்கள் பல உண்டு. முக்கியமான பயன், கெட்டவர்கள் மற்றவர்களால் சந்தேகப்பட முடியாதபடி நல்லவர்களின் திரையில் ஒளிந்து கொண்டு தங்கள் செய்கைகளில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கலாம்! நல்ல மனிதன் தன் நண்பர்களின் தீய நடத்தைகளைப்பற்றி அய்யப்படமாட்டான்; அவனது நற்பண்புகளில் இதுவும் ஒன்று. அயோக்கியர்களுக்கு இவன் திரையாகப் பயன்படுகிருன் என்று பொது மக்கள் நல்லவன் மீது குறை கூற மாட்டார்கள். இது நல்லவஞல் கிடைக்கக் கூடிய லாபம்!"

—பர்ட்ரண்டு ரஸ்ஸல்

("Sceptical Essays. P. 80)

'தனித்து வாராது துயரம்,' என்ற முதுமொழி உண்மையானது. தந்தையார் இறந்தார். டென்னிசனும் உடன் பிறந்தவர்களும் துயரமும், துன்பமும் அழுத்தியதால் வருந்தத் தலைப்பட்டனர். டென்னிசன் பங்குக்கு வந்த சிறு செல்வமும், விரைவில் ஒரு வியாபாரத்தில்முடங்கி, இழக்கப்பட்டது. வறுமையின் கோரக் கூத்து டென்னிசனை ஆட்டி அழவைத்தது. நல்ல வேளையாக நண்பர்கள் ஒன்று திரண்டு, அரசாங்கத்துக்குச் சிபாரிசுசெய்து, ஆண்டுக்கொருமுறை இருநூறு பவுன்கள் உபகாரச் சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்தனர். இதஞல் அவன் தப்பிஞன். அப்போது "இளவரசி" (The Princess) என்ற சிறுகாவியத்தை ஆரம்பித்திருந்தான். அது நல்ல விதமாக முடிக்கப்பட்டது. கார்லைல், ஃபிட்ஸ்ஜெரால்ட் போன்ற பேரறிஞர்களின் அறிமுகமும், தாக்கரே, பிரௌனிங் போன்றவர்களின் நட்பும் அவனுக்கு உண்டாயிற்று. நல்ல வருவாயும் செல்வாக்குப் படைத்த நண்பர்களும் திருமணம் செய்து கொள்ளத் தூண்டுதலாக இருந்தனர். எமிலி சாரா செல்வுட் என்ற பெண்ணை மணந்தான். இந்தத் திருமணம் அவனுக்கு இன்பமான இல்லற வாழ்வினைத் தந்தது. நல்லதோர் காலம் உதயமானது. மணிமணியாக இரு ஆண் குழந்தைகள் பிறந்து வளர்ந்தனர்.

## புகழ் ஏணி

விக்டோரியா அரசியும், தலைமையமைச்சர் கிளாட்ஸ்டனும் அவனுக்கு ஆதரவு தந்தனர். பெருமகஞக ஆஞன் டென்னிசன். அரசவைக் கவிஞராக நியமனம் பெற்ருன். புகழும், பொருளும், செல்வாக்கும் தேடி வந்தன.

மனைவி மக்களுடன் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் கிளம்பினான். நார்வே, போர்ச்சுகல் முதலிய நாடுகளில் நல்ல வரவேற்பும் கிடைத்தது. புதிய புதிய காவிய நூல்களை எழுதி வெளியிட்டான். எல்லோரும் ஒரு மனதாக அவனைப் பெருங் கவிஞன் என்று ஒத்துக்கொண்டனர்.

1862ல் அவன் எழுதிய "ஈனக் ஆர்டன்" (Enoch Arden) என்ற நூல், அறுபதினாயிரம் பிரதிகள் உடனடியாக விற்பனையாயிற்று. இதற்குப் பிறகு அவன் புகழ் மலையின் சிகரத்திலிருந்து மெல்ல இறங்கவேண்டி வந்தது. அதற்குக் காரணம் இருந்தது. அவன் தன் கவித் திறனைத் திசைமாற்றி நாடகங்களை எழுதத் தொடங்கினான். அவைகள் அவ்வளவு புகழைத் தரவில்லை. மேலும் பிரௌனிங், ஸ்வின்பர்ன் போன்ற கவிமணிகள் தலையெடுத்து ஒளிவீசத் தொடங்கினார்கள்.

"மேரி அரசி," "ஹெரால்ட்," "வல்லூறு" "பொற்கிண்ணம்," "பெக்கட்," முதலிய நாடகங்கள் வரிசையாக வெளி வந்தன. எல்லாம் நன்கு அமைக்கப்பட்டிருந்தும், பெரும்புகழ் தர மறுத்தன. திறனாய்வாளர்கள், இவற்றை விடாமல் தாக்கினார்கள்.

டென்னிசனுக்கு வயது எண்பது ஆகிவிட்டது. தள்ளாத முதுமையிலும் அவன் விடாமல் எழுதினான். எண்பதாவது வயதிற்குப்பின் மூன்று கவிதைத் தொகுதிகள் எழுதினான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! அயராத உழைப்பு, அற்புதக் கற்பனை, இவற்றின் உருவமே டென்னிசன் என்றால் மிகையல்ல.

மறுபடியும் அவனுக்குத் துன்பம் வரத் தலைப்பட்டது. உயிர் நண்பர் பிரௌனிங் இறந்தார். தன் துயரத்தையும், மன எழுச்சிகளையும் தெரிவித்து ஆறுதலடைய, அவனுக்கிணையான நண்பர்கள் எவருமில்லை. இன்னொரு பெரும் துயரம் அவனைக் கவ்விக் கொண்டது. அவனுடைய இளைய மகன் லயனல் என்பவன் இந்தியாவுக்குச் சென்று சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் தாய் நாட்டுக்குத் திரும்பிய வேளையில் அரேபியக் கடற்கரையினருகே நோய்வாயுற்று, மரணமடைந்தான். பாலைவன மணல் வெளியில் அவன் உடலைப் புதைத்தார்கள். டென்னிசனின் செல்வ மகன் அவன். அவனைப் பறி கொடுத்த துன்பம், கண்காணாத நாட்டில் அனாதைபோல் புதைக்கப்பட்ட பரிதாபம், டென்னிசனை என்ன பாடுபடுத்தியிருக்கும்?

தாங்கொணாத துன்பம் நெஞ்சைப் பிளக்க நடமாடும் பிணமானான் கவிக் கோமான் டென்னிசன். தத்துவப் பாடல்கள் உதயமாயின. 1892ம் ஆண்டில் முது பெருங் கிழவனான ஆல்ஃபிரெட் டென்னிசன், மரணப் படுக்கையில் கிடந்தான். அக்டோபர் மாதம் ஆறாந் தேதிவரையில் நல்ல நினைவுடன் இருக்க முடிந்தது அவனால்! ஷேக்ஸ்பியரின் "சிம்பலின்" என்ற நாடகத்தை ரசித்துப் படித்தான். அன்றிரவே அவன் உயிர் பிரிந்தது. அவன் முகம் என்றுமில்லாத நிம்மதியுடன் சுடர்விட்டது என்று சொல்லுகிறார்கள், உடனிருந்த நண்பர்கள்.

'வெஸ்ட்மின்ஸ்டர்' கல்லறையில் கவிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனிப் பகுதியில், அருமை நண்பர் ராபர்ட் பிரௌனிங்கின் சமாதியினருகே அவன் உடலும் புதைக்கப் பட்டது. டென்னிசன் அமரன் ஆனான்.★

சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட்.

# தேசீயத் திருப்பணி

*[தமிழர்களைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் வட நாட்டினர் அறிந்திருப்பது பெரும் சுன்னமாக இருக்கிறது. இக்குறை தீர வேண்டுமானால் தமிழர் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறார், பல ஆண்டுகளாக வட நாட்டினருடன் நாள்தோறும் நெருங்கிப் பழகிக்கொண்டிருக்கின்ற இக்கட்டுரையாளர்.]*

"இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாகிவிட்டால் மற்ற மொழிக்காரர்களெல்லாம் இரண்டாந்தரக் குடிகள் போல ஆகி விடுவார்கள்," என்று இந்தி எதிர்ப்பாளர் சிலர் சொல்லி வருகிறார்கள். இது என்றோ நடக்கப் போகிற காரியம் அல்ல; இப்போதே, வட இந்திய மக்களும் அரசியல் தலைவர்களும் தென் இந்தியர்களை இரண்டாந்தரக் குடிகளாகவே கருதியும் பேசியும் வருகின்றார்கள். சில சமயங்களில், தென்னிந்தியர்கள் மூன்றாந்தர, நான்காந்தரக் குடிகளாகக் கருதப்படுகிறார்களோ என்ற எண்ணம் கூட ஏற்படுகிறது.

தில்லிமாநகரில் நடைபெறும் அரசியல், இலக்கியக் கூட்டங்களின் செயல் முறையைக் கவனித்தால், தென்னிந்திய மக்களைப் பற்றி வட இந்தியர்கள் மிகமிகத் தவறான கருத்துக் கொண்டிருப்பது தெரிகிறது. வட இந்திய மொழிகள் மிகமிக இளமையானவை. ஆகையால், இரண்டாயிரம் ஆண்டுகளாகவே தமிழ் மொழியில் இலக்கியம் இருந்து வருகிறது என்பதை அவர்களால் ஏற்றுச் சீரணிக்க முடியவில்லை. "ஆராய்ச்சிச் சிறுபிள்ளை"களாகவே அவர்கள் காணப்படுகிறார்கள். இல்லாவிட்டால், "டாக்டர்" பட்டம் பெற்ற ஒருவர், "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் இருந்து தமிழ் ஆய்ந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆயிரம் வருடங்களுக்கு முன்பாவது இருந்திருக்கும் என்று ஏற்றுக்கொள்ளலாம்" என்று சொல்லுவாரா? எண்ணிப்பாருங்கள். ஆராய்ச்சி அறிஞர்களே இப்படிப் பேரம் பேசுகின்றவர்களாக இருந்தால் பாமரர் எப்படி இருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

சில நாட்களுக்கு முன் ஒரு புத்தக வெளியீட்டு விழா நடந்தது. அதில் ஒரு மந்திரி பேசுகிறார்: "தென் இந்தியர்களுக்கு இந்தியின் மீது வெறுப்புக் கிடையாது; மத்திய அரசாங்கத்தில் உத்தியோகம் கொடுத்தால் எல்லோரும் இந்தி படித்துவிடுவார்கள். சான்றாக, இங்கே வந்திருக்கிற தமிழ் மந்திரிகள் அனைவருக்கும் இந்தி தெரியும்." இவ்வாறு சொல்லிவிட்டு, மத்திய அரசாங்கத்தில் உள்ள தமிழ் மந்திரிகளின் பெயர்ப் பட்டியலை வரிசையாகப் படித்தார்; அவர்களில் பெரும்பாலோர் அந்தக் கூட்டத்திலேயே இருந்தார்கள்.

மந்திரி மட்டுமல்ல; இங்குள்ள மக்கள் எல்லாருமே, ''சாப்பாட்டுக்கு வழி செய்து கொடுத்தால் தமிழ் நாட்டுக்காரன் எதுவும் செய்வான்'' என்ற கருத்தே கொண்டுள்ளார்கள். தமிழர்களில் ஒரு சிலரைமட்டும் அறிந்ததனுலும், தமிழகத்தைப் பற்றி அறியாததனுலும் ஏற்பட்டுள்ள எண்ணம் இது. இவர்கள் அறிந்த தமிழர்கள் மத்திய அரசாங்கத்தில் அலுவல் பார்க்க வந்திருக்கும் தமிழர்களே. அவர்கள் தமிழ் இனத்தைப் பற்றி இங்குள்ள மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் எண்ணங்களில் தலையானது, ''சோறு போட்டால் தமிழன் எதுவும் செய்வான்; சொன்னபடி கேட்பான்" என்பது. இப்படிப்பட்டவர்களை இரண்டாந்தரக் குடிகள் என்றுதானு சொல்லுவது ?

மற்றொரு பெரிய குறை, தமிழகத்தின் தேசீயப் போராட்ட வரலாறு பற்றி இங்குள்ள மக்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஒன்றும் இதுவரை இவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை; தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இங்குள்ள மக்களுக்கு இதுவரை ஏற்படவில்லை. ஆதலால் பொதுமக்கள் ''தமிழர்களுக்குத் தேசீய உணர்ச்சியே கிடையாது'' என்றே எண்ணி வருகிருர்கள். சில நாட்களுக்கு முன் ஆங்கில எழுத்தாளராகிய ஒரு மலையாளத் தமிழரைப் பற்றிய விமர்சனக் குறிப்பில், ''தமிழ் பிராமணர்களிடம் தேசீய உணர்ச்சி வேரூன்றவே இல்லை'' என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டிருந்தது. மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்கும் தமிழர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் இன்றைக்கும் இராசகோபாலாச்சாரியின் வாக்கையே வேத வாக்காகக் கொண்டிருப்பதனுல் இக் கருத்து அக் கட்டுரையாளருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தேசீயப் போராட்டக் காலத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி, தமிழகத் தேசீய தலைவர்களைப் பற்றி இந்த மக்களுக்கு ஒருவரும் ஒன்றும சொல்லவில்லை என்றே தெரிகிறது. புலித்தேவன், கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், சத்தியமூர்த்தி போன்றவர்களில் யாரைப் பற்றியும் இங்கு யாருக்கும் எதுவும் தெரியவில்லை. நாம் நமது போராட்டக் காலத்தில் வடநாட்டுத் தலைவர்களுக்கு ''ஜே'' போட்டே தொண்டை வறண்டோம்; இவர்களோ, நம்மவர்களின் பெயர்களை மறந்தும் கூட இங்கே உச்சரிப்பதாகத் தெரியவில்லை. முன்பு பல தோழர்கள் இதைச் சுட்டிக்காட்டிய போதெல்லாம் என் ''கதர் இரத்தம்'' துடித்ததுண்டு; இப்போது இங்கு வந்து பார்த்தாலோ ?......!

அண்மையில் இந்திய அரசாங்கச் சார்பில் உள்ள புத்தக நிறுவனம் ஒன்று ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளது. ''டாக்டர்'' பட்டம் பெற்ற ஒருவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள அப்புத்தகம்,* பல்வேறு இந்திய மறவர்களின் வீர தீரங்களை இனவாரியாகவும் மாநிலவாரியாகவும் விவரிக்கிறது, இந்தியாவின் மற்றப் பகுதிகளிலுள்ள மக்களின் வீர வரலாறு நெடுங் காலத்துக்கு முன்பு தொடங்கி, ஆங்கிலேயரை எதிர்த்தது, காஷ்மீர்ப் போராட்டம் ஆகியவற்றில் உச்ச நிலை அடைகிறது; வரலாற்று ஆதாரமில்லாத கட்டுக்கதை

* Traditions of the Indian Army.

எல்லாம் கூட ஓங்கி எழுதப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மூத்த குடிகள் என்று வரலாறு முழங்கும் தமிழர்களின் வீர வரலாறு எங்கே தொடங்கி எப்படிச் செல்கிறது தெரியுமா? ஆங்கிலேயரோடு சேர்ந்துகொண்டு அய்தரலியையும் திப்பு சுல்தானையும் எதிர்த்த கட்டத்தில் தொடங்கி, ஆங்கிலேயருக்காக வெளிநாடுகளில் சண்டை போட்ட கட்டத்தில் முடிகிறது! ஆங்கிலத் தளபதிகள் நெஞ்சு நடுங்க, விரல் நடுங்க, பாஞ்சாலங்குறிச்சியைப் பற்றியும் காளையார் கோயிலைப் பற்றியும் ஆங்கிலத்தில் எழுதிய குறிப்புக்களைக் கூட இந்த (ஆங்கில நூல்) ஆசிரியர் படிக்கவில்லை. நூலில் தமிழரைப் பற்றி வருகின்ற வீர குறிப்பு அவர்கள் தலைநாள் முதலே "கஞ்சிப் பட்டாளம்" என்ற கருத்தையே ஊட்டுகிறது. (இப்புத்தகம் இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் வெளிவர இருக்கிறது.) உத்தியோகம் கொடுத்தால் தமிழன் இந்தி படிப்பான் என்று மந்திரி கூறுவது இக் கருத்தின் தொடர்ச்சி தானே?......

## செய்ய வேண்டியது

இந்திய நாடு ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள், இப்படியா ஒருபகுதி மக்களைப் பற்றித் தவருகக் கருதுவது? இப்படியா, அம்மக்களின் வரலாற்றையே மூடி மறைப்பது? "சோறுபோட்டால் எதுவும் செய்வான்" என்று ஒருவனைப் பற்றிக் கருத்துக்கொண்டால், அவனை நமக்குச் சரிநிகர் சமானமாக நடத்துவோமா? 'வேலைக்காரன் என்றுதானே, என்றென்றும் நினைப்போம்?

அரசியல்வாணர்கள் தோல்விகளுக்கும் பழிப்புரைகளுக்கும் பழக்கப்பட்டு மரத்துப்போனவர்கள், அவர்களையோ அவர்களின் இனத்தினரையோ பற்றிப் பிறர் கூறும் பழிச் சொல் அவர்களுக்கு உறைக்காது. ஆனால் ஒரு மொழி இனம் அவர்களோடு தீர்ந்துவிடுவதில்லை; அவர்கள் தீர்ந்த பின்னும் வாழ வல்லது; வாழ வேண்டியது. தன்மேல் இவர்களெல்லாம் "சேறு வாங்கிப்" பூசுவதைப் பார்த்துக்கொண்டும் சும்மா இருப்பது பேதைமை.

அதற்காக யாரும் யார்மீதும் படையெடுக்க வேண்டியதில்லை. ஏடுகளிலும் மேடைகளிலும் திட்ட வேண்டியதுமில்லை. காலத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். அதை மறந்தால் இரண்டாந்தர, மூன்ருந்தரக் குடிகளாகத்தான் போக வேண்டும்.

> ### தவற்றின் படிப்பினை
>
> "நீ செய்கிற தவறுகளைக் காட்டிலும் சிறந்தவனாக இருப்பதற்குரிய வழிகள் மிகச் சுளுவானவை. அவையும் அய்ந்தே அய்ந்துதான்:
>
> 1. உன்னால் கூடும்போதெல்லாம் தவறுகள் செய்யாமலே விலகிக்கொள்.
> 2. ஒவ்வொரு தவறு செய்யும்போதும் அதன் மூலம் ஒரு படிப்பினையைத் தெரிந்துகொள்.
> 3. ஒரு தவறுக்காக ஒரே அடியாக மனமுடைந்து போகாதே!
> 4. தவறு தொலையட்டும்; மேலே நடந்துசெல்!
> 5. மற்றவர்களும் தவறு செய்கிருர்கள் என்பதை எப்போதும் நினைவில் வை!"
>
> —சார்லஸ் பி. ராத்

"காலம் நம்மிடம் என்ன எதிர் பார்க்கிறது?—ஏன்?" இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான விடை கண்டு அதன்படி செயல் பட வேண்டும்; செயல்பட்டால் தான் தமிழன் ஏக இந்தியாவில் பிறர் போல முதல்தரக் குடியாக வாழ வழி உண்டு. இது விளம்பரக் காலம். தங்களைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதிலேயே பலரின் விடுபொழுது (Spare time) கழிந்துவிடுகிறது. மற்றவர்களைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்குத் தனி உழைப்பை மேற்கொள்ள அவர்களுக்கு நேரமில்லை. ஆகையால் நாமும் உலகத்தோடு இணைந்து செல்ல வேண்டும்; தன்னடக்கம் என்ற பழைய போர்வை புதுக் காலப் போக்கு என்னும் குளிரைத் தாங்காது. நம்மைப் பற்றிய செய்திகளை நாம் விளம்பரப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்கள் நம்மைப் பற்றித் தவருகக் கணித்து விடுகிருர்கள்.

"இந்தியாவிலேயே முந்திய மொழி தமிழ்தான்; தமிழ் நாட்டில் நீண்ட அரசியல் செழித்திருந்தது; தமிழ் மன்னர்கள் சிறந்த ஆட்சி அமைப்புக்களை ஏற்படுத்தி இருந்தார்கள்; தமிழருக்கென்று ஒரு தனிப் பண்பு இருக்கிறது..." என்று (காங்கிரஸ் மந்திரிகள் உட்பட) நாமெல்லாம் பேசிக்கொள்ளுகிரேம். இந்த உண்மைகளை இலண்டனிலும், பாரிசிலும், மாஸ்கோவிலும் நம்மால் எதிரொலிக்கச் செய்ய முடிந்தது. ஆனல், வேங்கடத்துக்கு வடக்கும் இமயமலைக்குத் தெற்கும் உள்ள நிலப்பரப்பில் உள்ள மக்களுக்கு இது ஒன்றும் தெரியவில்லை. தமிழ் என்று மொழி இருப்பதே ("தமிழ்நாடு" பெயர்ப் போராட்டம் வரும்வரை) இங்குள்ள மக்களுக்குத் தெரியவில்லையே! படித்தபட்டதாரிகூட, "மதராஸ், தமிழ் நாட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்றல்லவா கேட்கிருர்!

நம்மைப் பற்றிய இவ்வளவு பெரிய அறியாமையை நாட்டின் பெரும் பகுதியில் வாழவிட்டிருப்பது, அப்பகுதி மக்களின் தவறு மட்டும்தாஞ?. இவ்வளவு பேரறியாமை உள்ள அவர்கள் நம்மை அவர்களுக்கு இணையாகக் கருதுவார்களா?

சென்னை அரசியலாரும், ஏனைய பெருமக்களும், தமிழைப் பற்றி வடக்கில் நிலவிவரும் அறியாமையைப் போக்க உடனே முன்வர வேண்டும். சாப்பாட்டுத் திட்டங்களோடு, நமது எதிர்காலப் பரம்பரையின் மானத்தையும் அதன்மூலம் நாட்டின் ஒற்றுமையையும் காப்பதற்கான திட்டத்திற்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். எழுத்து, பேச்சு, திரைப்படம் போன்ற பல சாதனங்களாலும் இப்பணி நிறைவேற்றப்பட வேண்டும். தலைநகரிலும், வடநாட்டின் உட்பகுதிகளிலும் பல்வேறு பிரசார சாதனங்களின் மூலம் தமிழரின் மேன்மையை விளக்க வேண்டும். தமிழையும் தமிழரையும் பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் பள்ளியிலும் கல்லூரியிலும் கட்டாயமாகப் பயிற்றுவிக்க வேண்டும். தமிழருக்கு இந்தி கற்றுக்கொடுப்பதில் தீவிரமாக நிற்கும் பெருமக்கள் இந்தப் பணியை முதற் பணியாகக் கொள்ள வேண்டும். அறியாமையில் உழல்பவர்களுக்குத் தான் ஆசிரியர்கள் தேவை; அறிந்தவர்கள் மத்தியில் ஆசிரிய வேடம் போடுவதில் பெருமை இல்லை.

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத்து சென்னையிலும் தில்லியிலும் ஆட்சி செலுத்துவோருக்கு இருப்பது உண்மையானால் அவர்கள் இப்பணியைப் புறக்கணித்து, வடக்கில் உள்ளவர்கள் தமிழர்களைப் பற்றிய தவறான கருத்துக்களையே வளர்த்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டால் நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவது திண்ணம். எல்லாரையும் விடச் சிறந்த ஒருவன், எல்லாரையும் விடத் தாழ்வாக மற்றவர்கள் தன்னை நடத்துவதை நீண்ட காலம் பொறுக்கமாட்டான். அப்படி ஒரு நிலை ஏற்படும்போது, "சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து நாட்டை ஆளவந்தவர்களின் செயல்முறைக் குறைகளினாலேயே இந்தச் சீர்குலைவு இந்த நாட்டுக்கு ஏற்பட்டது" என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவார்கள். வரலாறு படிக்கவும் வரலாற்றின் எச்சரிக்கைகளை உணரவும் திறம் பெற்றிருப்பவர்களாவது இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்களும் சுயநலங்கருதிக் கண்களை மூடிக் கொண்டால், தன் குடிகளுக்குள்ளேயே படித்தரங்கள் ஏற்படுத்திக்கொண்டு இந்த நாடு பழைய படியே ஆகிவிடப்போவது நிச்சயம். "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என்பது வள்ளுவன் குரல்.

பின் குறிப்பு:

தமிழகத்தில் உள்ள சில காங்கிரஸ் அன்பர்கள், "தமிழையும் இந்தியாவின் ஆட்சி மொழியாக்க வேண்டும், இந்தியும் தமிழும் இந்தியாவில் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும்" என்று சொல்லி வருகிறார்கள். பழைய நமது பண்புப் பார்வையில் நோக்கினால், "இது நியாயமா? எல்லாருக்கும்தான் அவரவர் தாய்மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும்" என்று தோன்றும். ஆனால், இன்றைய உடனடித் தேவை அந்தப் பண்புப் பார்வையல்ல; அரசியல் பார்வையே இப்போது வேண்டியிருக்கிறது. இந்தக் குரலை எழுப்புவதால், தமிழ் ஆட்சி மொழி ஆனாலும் ஆகாவிட்டாலும் தமிழருக்கு இந்திய அரசியல் மதிப்பு உயரும் என்பது திண்ணம். "வாயுள்ளவன் மதிப்புள்ளவன்" என்பதே ஜனநாயக யுகத்தின் பொன்மொழி.

## நன்கொடை

சென்னை மேகலை மலைப்பழக் கடை உரிமையாளரான திரு. ச. குருசாமி–புஷ்பலீலா தம்பதிகட்கு 11—8—64–ல் ஆண் குழந்தை பிறந்தமைக்காக 'குத்தூசி' ஏட்டுக்கு ரூ. 5 நன்கொடை அனுப்பியுள்ளனர். (குழந்தைக்கு வள்ளுவன் என்று பெயரிடப்பட்டுள்ளது) நன்கொடை பெற்றோம்; நன்றி.

"எப்போதும் நன்மை செய்து கொண்டேயிருப்பவர்களை விடத் தீமை செய்பவர்கள் எவருமில்லை."

—Mandell Creighton

# உங்களுக்கு ஊக்கம் பிறக்க

*[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக் கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப் பாடஞ் செய்யுங்கள்; பலதடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு நடத்தையில் காட்டுங்கள்.*

*மற்றப் பொன்மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன் படுத்துங்கள்.*

*இவைபல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு — மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையி லேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]*

"தங்களால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை உடையவர்கள் நிச்சயம் வெற்றி பெற்றே தீர்வர்."

—ஜான் ட்ரைடன்

x x x

"உன்னிடம் எது இருந்தாலும் சரி, நீ அதைப் பயன் படுத்த வேண்டும்; இல்லையேல் அதை இழந்துவிட நேரிடும்."

—ஹென்றி ஃபோர்டு

x x x

"மேதைத் தன்மை (பிறவித் திறமை) என்பது என்ன? ஒரு சதம் இயற்கை உணர்வு; 99 சதவிகிதம் இடைவிடா உழைப்பு."

தாமஸ் ஏ. எடிசன்

x x x

"ஒருவன் தன் பணப்பையைத் தன் தலைக்குள்ளே (மூளை) அடியோடு கொட்டி காலி செய்து விடுவானேயானால் அந்தப் பணத்தை அவனிடமிருந்து யாராலும் பறித்துக்கொள்ள முடியாது."

—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

x x x

"இன்பம் என்பது நமக்குள்ளேயே இருக்கிறது; நமக் களிக்கப்படும் உல்லாசப் பொழுது போக்குகளில் இல்லை. நம் உள்ளம் இன்ப மயமாக இருக்குமானால் உலகிலுள்ள ஒவ்வொன்றும் உல்லாசப் பொழுது போக்காகக் காட்சி தரும்; துன்பம் என்பதற்குப் பெயரே இருக்காது."

—ஆலிவர் கோல்ட்ஸ்மித்

K. S. மகாதேவன், B. SC., M. A.

# செவ்வாய் உலகில் சோதிடம்!

*[பூமியிலுள்ள சோதிடப் புரட்டைப் பிட்டுக் காட்டுகிறார், வான மண்டல நூலறிவு பெற்றுள்ள தமிழ்ப் பெரும் புலவர் மகாதேவன். நகைச்சுவை என்னும் வெல்லத்திற்குள் விஞ்ஞான அறிவு என்ற மருந்தை வைத்துத் தருகிறார்! அப்படியே விழுங்க வேண்டாம்; மென்று சுவைத்துக் கூடத் தின்னலாம்.]*

சோதிடர் சுப்புவிற்கு ஏழரை நாட்டான்சனி இரண்டாம்முறையாகப் பிடித்திருந்தது. எனவே, 'வருவாய் அதிகரிப்பும், அயல் நாட்டு வாசமும்' கிடைக்கலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆனால், சோதிடக் கலையைப் பரப்புவதற்கென்று செவ்வாய் உலகத்திலிருந்து அவருக்கு அழைப்பு வரும் என்று சிறிதும் அவர் எதிர்பார்க்கவில்லை!

முன் பின் அறிமுகமில்லாத உலகத்திற்கு எப்படிப் போய் இருந்து விட்டு வருவது என்று முதலில் சிறிது தயங்கினார்.

"செவ்வாய்க்குப் போவதற்கு யாராவது பயப்படுவார்களோ? இந்தக் காலத்தில்தான் ஒவ்வொருவரும் வியாழன், சனி, யுரானஸ், நெப்டியூன் போன்ற தூரத்து உலகங்களுக்கெல்லாம் போய் வருகிறார்களே! ஏழரை நாட்டான் சனி இரண்டாம் முறை வந்தால் நல்லது தானே நடக்கும்?" என்று ஆறுதல் கூறினாள், சோதிடரின் மனைவி. அடுத்தபடி 'மரண சனி' அவருக்குத் திரும்புவதற்குள் ஏதாவது நாலு பணம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அவள் கவலை!

சுப்புவிற்கும் தைரியம் பிறந்தது. "எல்லாவற்றிற்கும் விஞ்ஞானிகள் இருக்கவே இருக்கின்றனர்; பார்த்துக் கொள்கிறார்கள்!" என்று பெட்டி, படுக்கை, சோதிடச்சுவடிகள்ஆகியவற்றை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்! வழியில் இராக்கெட் பயணத்தை நன்றாகச் சுவைத்தார்.

சோதிடர் சென்று இறங்கிய செவ்வாய் உலகப் பகுதியில் அப்பொழுது இன்னும் பொழுது புலரவில்லை; ஆனாலும், விண்மீன் வெளிச்சம் நன்றாக வீசிக்கொண்டிருந்தது. செவ்வாயுலகம் தன் பெயருக்கேற்பச் சிவந்து புழுதி படிந்து கிடந்தது. அடிக்கடி வீசிய காற்றால் புழுதிப் 'புயல்' எழுந்து அடங்கிக் கொண்டிருந்தது.

சோதிடக் கலையை 'லக்ன காலத்தை' அடிப்படையாகக் கொண்டு தானே தொடங்க வேண்டும்? சோதிடர் தொடுவானத்தைப் பார்த்தார்; அப்பொழுது கும்பராசி கீழ்வானத்திலே தலைகாட்டியது. சோதிடர் தனது கடிகாரத்தைப் பார்த்துக்

கொண்டார். சரியாக இன்னும் இரண்டு மணிக்கெல்லாம் கும்பத்தைத் தொடர்ந்து மீனராசி உதயமாகப் போகிறது என்று எதிர்பார்த்தார். ஆனல், திடுக்கிட்டார். மீனராசி சற்றுக் காலம் தாழ்த்தி வெளிவந்தது! மாமனர் அன்பளிப்பாகக் கொடுத்த தனது கடிகாரத்தின் மீதே அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது! கடிகாரம் ஒரு வேளை வேகமாகப் போகிறதோ?

அவர் வேதனையை அருகிலிருந்த விஞ்ஞானி புரிந்து கொண்டார். உடனே அவர், "ஐயா, சோதிடரே! பூமிக் கடிகாரங்கள் செவ்வாய் உலகத்திற்குப் பொருந்தமாட்டா! இங்கு உங்கள் கடிகாரம் வேகமாகத் தான் செல்லும்! ஏனென்ருல், பூமி 24 மணிக்கு ஒருமுறை தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. ஆனல், செவ்வாய் 24½ மணிக்கு ஒருமுறை தான் சுற்றுகிறது. அதனல், பூமியின் நாளைவிடச் செவ்வாயின் நாள் சிறிது நீளம்! நீங்கள் உடனே ஒரு 'செவ்வாய்க் கடிகாரம்' வாங்கி விடுங்கள்!" என்று ஆலோசனை கூறினர்.

## விலங்குகளின் உணவு

"உலகத்தின்கண் நடைபெறும் கடுமையான தொழில்களெல்லாம் புற்பூண்டுகளைத் தின்னும் விலங்கினங்களினலேயே செய்யப்படுகின்றன. எருது, குதிரை, கோவேறுகழுதை, யானை, ஒட்டகம் என்னும் உயிர்கள் புல்லையும் வைக்கோலையும் தின்று, குளிர்ந்த தண்ணீரைப் பருகுகின்றனவே யல்லாமல் மற்ற உயிர்களைக் கொன்று தின்னக் கண்டதில்லையே! அவ்வாறிருந்தும், அவைகள் நாடோறும் ஆங்காங்குச் செய்யும் உழைப்பான தொழில்களைப் போல், இறைச்சி தின்னும் புலி, கரடி, சிங்கம், ஓநாய் முதலான மற்ற விலங்குகள் செய்யக் கண்டதுண்டோ? இவைகள் கூர்ம் பற்களும் நகங்களுங் கொடுஞ் சினமும் உடைமையால் வலிமையுடையன போற் காணப் படுகின்றனவேயல்லாமல் உண்மையில் அவை அஃது உடையன அல்ல. பெருஞ் சுமை ஏற்றிய ஒரு பெரு வண்டி நுகத்தின் ஒரு பக்கத்தில் ஓர் எருது மாட்டினையும் மற்ருெரு பக்கத்தில் ஒரு புலி அல்லது சிங்கத்தினையும் பூட்டி இருபது நாழிகை வழி நடத்தினல் எருதைப் போற் சிங்கம் அதனை ஒத்து இழுக்குமோ? ஒரு நாழிகை வழிகூட அஃது இழுக்க மாட்டாது. இன்னும் புல்லையுந் தழைகளையும் மேய்ந்து அருவி நீரைக் குடிக்குங் காண்டாமிருகம் என்னுங் கல்யானையின் வலிமையை என் என்போம்! இது பெரிய மரங்களையுந் தன் முகத்திலுள்ள கொம்பால் தகர்த்தெறிவதோடு, அம்மரங்களின் வலிய கிளைகளையுந் துகளாக நுறுக்குகின்றது."

—மறைமலையடிகள்

("மக்கள் நூருண்டு உயிர் வாழ்க்கை")

இராசிகள் செவ்வாயுலகத்து வானவீதியில் மந்த நடைபோடுவது சோதிடருக்கு விந்தையாக இருந்தது. சோதிடம் அகிலத்திற்கெல்லாம் பொதுவான சாத்திரம் என்று அவர் இது வரை எண்ணி வந்ததை அவரால் எப்படி மாற்றிக் கொள்ள முடியும்? ஆரம்பமே குழப்பமாக இருக்கிறதே! முதற் கோணல் முற்றுங் கோணலாகி விடுமோ? செவ்வாயுலகில் எப்படிப் பெயர் சொல்வது என்ற அச்சம் அவரைப் பிடித்துக் கொண்டது!

வான வீதியைக் கண்களால் நோட்டம் விட்ட சுப்பு திடுக்கிட்டார். இராசிகளின் வரிசையெல்லாம் பூமியிலிருந்து பார்ப்பது போன்றே சரியாக இருந்தன. ஆனால், கோள்கள்? சதுரங்கக் கட்டத்தில் இருந்த காய்களைச் சிறுவர்கள் எற்றி விட்டதுபோல் கோள்கள் தாறுமாருக இறைந்து கிடந்தன! ஏனோ, இருக்கவேண்டிய கோள்கள் இருக்கவேண்டிய இராசிகளில் இல்லை! அம்மட்டோ! மேடத்திற்கும் விருச்சிகத்திற்கும் அதிபதியான செவ்வாய் அவர் கண்ணிலேயேபடவில்லை! ''செவ்வாய் எங்கே? அங்காரகன் எங்கே போய்விட்டான்?'' சோதிடர் தன்னையும் அறியாமல் வாய்விட்டு அலறி விட்டார்.

அருகிலிருந்த விஞ்ஞானிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''ஐயா, சோதிடரே! கவலைப் படாதீர்கள்; செவ்வாய் எங்கும் போய் விடவில்லை; அதைத் தான் நீங்கள் உங்கள் காலடியில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே!'' என்ருர்.

சோதிடருக்கு உடலெல்லாம் பதறியது. ''என்ன உலகமடா இது! அங்காரகனைக் காலில் மிதித்துக் கொண்டு நான் எப்படிச் சோதிடக் கலையை இங்கு வளர்க்கப் போகிறேன்?" என்று கலங்கினர்.

"வருந்தாதீர்கள், சோதிடரே! செவ்வாய் வான வீதியிலிருந்து 'வீழ்ந்து' விட்டதற்காகக் கவலைப் படாதீர்கள்; அதோ! ஒரு புதிய கிரகம் வானத்திலே அழகாகத் தெரிகிறதே! அதைப் பாருங்கள்! அது என்ன கிரகம் என்று உங்களில் புரிந்து கொள்ள முடிகிறதா?" என்று கேட்டார் விஞ்ஞானி.

## பூமி தோஷம்

சோதிடர் வானத்தைநிமிர்ந்து பார்த்தார். பூமியிலிருந்து பார்ப்போருக்குத்தெரியும் செவ்வாயை விட அளவில் அது பெரிதாக இருந்தது; ஆனல், சந்திரன் போல் பிறை உருவம் காட்டிக் கொண்டிருந்தது!

"அதுதான் நமது தாயகமான பூமி!" என்ருர் விஞ்ஞானி.

"என்ன? பூமி வானத்தில் தொங்கும் ஒருகிரகமா? பூமியைக் கிரக வரிசையில் எந்தச் சோதிட நூலும் சேர்க்கவில்லையே!" என்று குரல் தடுமாறினர் சோதிடர்.

"முன்பு பூமியில் நீங்கள் இருந்ததால் செவ்வாய் வானத்தில் விண்மீன்களாலான இராசிகளுக்கிடையில் தெரிந்தது. இப்பொழுது செவ்வாயில் நீங்கள் நிற்பதால், பூமி வானத்திலே இராசிக் கூட்டங்களுக்கிடையில் நகர்ந்து கொண்டிருக்கிறது,'' என்று விளக்கினர் விஞ்ஞானி.

''அப்படி என்ருல் செவ்வாய் உலகத்துச் சோதிடத்தில் செவ்வாய்க்கு இடமில்லை; பூமிதான் அதற்கு பதில் இடம் பெறும், என்று சொல்லுங்கள்!" என்ருர் சோதிடர்.

"ஆம், இனிமேல் உங்கள் சோதிடத்தைப் பொறுத்த வரையில் செவ்வாயை மறந்து விட்டால்தான் நல்லது என்று நினைக்கின்றேன்! இங்குப் புதன் கிரகம் கூட இனி உங்கள் கண்ணில் படாது; அது எப்பொழுதும் இணை பிரியாமல் சூரியனுடனேயே இருக்கும்" என்றார் விஞ்ஞானி.

"ஆம்! இனி செவ்வாய்க் கிழமை இல்லை; பூமிக் கிழமை தான்; எட்டிலே செவ்வாய் இருந்தால் சாதகனுக்குச் செவ்வாய் தோஷம் என்று கூறி வந்தோம். இனிமேல் 'பூமி தோஷம்' என்று கூற வேண்டியதுதான்" என்று சோதிடர் ஒரு முடிவுக்கு வந்தார். ஆம்! பூமியில் பிறக்கும் குழந்தைகளுக்குச் செவ்வாய் தோஷம்; செவ்வாயில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பூமிதோஷம்!

ஆனால், அடுத்த கணம் சோதிடர் திடுக்கிட்டார். தேய்ந்து வளர்ந்தபடி 'திதி' என்ற ஒரு கால அளவைப் பஞ்சாங்கத்தில் புகுத்திய சந்திரன் எங்கே? அது இருக்க வேண்டிய இராசி, காலியாகக் கிடக்கிறதே! இனி எதை வைத்துக்கொண்டு 'திதி' கூறுவது? சோதிடர் விஞ்ஞானியின் பக்கம் திரும்பினார்.

விஞ்ஞானி சிரித்துக்கொண்டே விளக்கினார். "சந்திரன் எப்பொழுதும் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு துணைக் கோள். பூமியிலிருந்து பார்க்கும் போது 2½ இலட்சம் மைல் தொலைவில் உள்ள சந்திரன் வானத்தை அடைத்துக் கொண்டு பெரிதாகத் தெரிந்தது. ஆனால் இப்பொழுதோ நாம் பூமியிலிருந்து 5 கோடி மைலுக்கு அப்பால் விலகி வந்து விட்டோம். எனவே, இங்கிருந்து பார்க்கும் நம் பார்வைக்குப் பூமியும், அதைச் சுற்றும் சந்திரனும் அருந்ததி, வசிட்டர் விண்மீன்கள் போல அருகருகே இணைந்து தோன்றுகின்றன" என்றார்.

## சோதிடர் கலக்கம்

சோதிடர் வானத்தில் தொங்கும் பூமியை மீண்டும் ஒருமுறை அண்ணாந்து பார்த்தார். பூமிக்கு அருகில் ஒரு சிறு ஒளிப் புள்ளி விண்மீன் போலக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

"பதினாறு கலைகளைத் தாங்கி அழகுடன் திரியும் சந்திரனா இப்படி இருக்கும் இடமும் தெரிந்து கொள்ள முடியாதபடி ஒளிப் புள்ளியாகச் சுருங்கி விட்டான்? சந்திரன் போய்விட்டால் இனித் திதி இல்லை; கிரகணம் என்பது இல்லை; கிரகணம் இல்லை என்றால் இராகு, கேதுக்களுக்கும்பொருள் இல்லை! இனி என்ன இருக்கிறது? செவ்வாய், சந்திரன், இராகு, கேது எல்லாம் போயினவே! ஐயோ! சோதிடத்தின் அடிப்படைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகத் தகர்ந்து போகின்றனவே" என்று சோதிடர் மனம் உடைந்து கூறினார்.

"ஐயா, சோதிடரே! ஓர் இராகுவும், ஒரு கேதுவும் போனதற்காகவா இப்படிக் கலங்குகிறீர்கள்? இங்கு, செவ்வாயுலகில் உங்களுக்கு இரண்டு இராகுகளும், இரண்டு கேதுக்களும் இருக்கின்றன; போதுமா?" என்றார் விஞ்ஞானி.

சோதிடருக்கு மேல்மூச்சு வாங்கிற்று! என்ன? இரண்டு இராகுகள்; இரண்டு கேதுக்களா? நான் என்ன கேள்விப்படுகிறேன்? எனக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லையே?" என்றார் சோதிடர்.

விஞ்ஞானி நிதானமாகப் பேசினார். "ஐயா! பூமிக்கு ஒரு சந்திரன் மட்டுமே உண்டு. எனவே,

பூமியின் பாதையும், சந்திரனின் பாதையும் ஒன்றை ஒன்று வெட்டுவதாகத் தோன்றும் இரு புள்ளிகளுக்கும் இராகு என்றும், கேது என்றும் பெயர் வைத்து அழைத்தீர்கள். ஆனால், நாம் இப்பொழுது இருக்கும் செவ்வாய் உலகத்திற்கோ, இரண்டு சந்திரன்கள் இருக்கின்றன. எனவே, செவ்வாயின் பாதையை அதன் இரண்டு சந்திரன்களும் தனித் தனியாக நான்கு இடங்களில் வெட்டுகின்றன! அதனால் நான்கு வெட்டுப் புள்ளிகள், அதாவது, இரண்டு இராகுகளும், இரண்டு கேதுக்களும் இருக்கின்றன!'' என்றார் விஞ்ஞானி.

''செவ்வாயுலகத்துச் சந்திரன்கள் பார்ப்பதற்குச் சிறு உருண்டைகளாகத் தெரிந்தன. இங்கு மனிதர்களெல்லாம் கிரகண காலத்தில் பயபக்தியுடன் தர்ப்பணம் செய்து கொண்டு வருகிறார்களோ?'' என்றார் சோதிடர்.

''நல்ல கேள்வி கேட்டீர்கள் ஐயா! இந்த இரண்டு சந்திரன்களாலும் இவ்வுலகில் ஆண்டு ஒன்றுக்கு 1400 கிரகணங்களுக்கும் அதிகமாக நிகழ்கின்றன. ஒரே நாளில் பல கிரகணங்கள் கூட நிகழும்! அவைகளுக்கெல்லாம் கிரகண சாந்தி செய்யச் சுறுசுறுப்பான இந்தச் செவ்வாயுலகத்தில் யாருக்கு நேரமிருக்கிறது?'' என்றார் விஞ்ஞானி.

சோதிடர் நடுங்கினார்! ''என்ன? ஆண்டு ஒன்றுக்கு 1400 கிரகணங்களா? அதுவும் ஒரே நாளில் பல கிரகணங்களா? நான் எந்த உலகில் இருக்கிறேன்?'' என்று கத்தினார்.

''நீங்கள் செவ்வாயுலகத்தில் இருப்பதால் தான் உங்கள் சோதிடத்திற்கு அப்பாற்பட்ட செய்திகளையெல்லாம் இப்பொழுது கேள்விப்படுகிறீர்கள்! பூமிக்கு ஒரு சந்திரன். இங்கு, செவ்வாயிலோ, இரண்டு சந்திரன்கள்; பூமியின் சந்திரன் 28 நாளைக்கு ஒருமுறை தான் பூமியைச் சுற்றி வருகிறது. ஆனால் செவ்வாயிலோ, நிலைமை முற்றிலும் வேறாக இருக்கிறது. செவ்வாயுலகத்திலிருந்து 12,500 மைல் தொலைவில் ஒரு சந்திரன் இருக்கிறது. அது 30 மணி, 18 நிமிடம் ஆவதற்குள் செவ்வாயைச் சுற்றி வந்து விடுகிறது. எனவே, இது செவ்வாய் வானத்தில் இராசிகளிடையே மிக வேகமாக நகர்ந்து செல்கிறது. செவ்வாயுலகிற்கு 3,700 மைல் அருகிலேயே இருக்கும் மற்றொரு சந்திரனோ $7\frac{1}{2}$ மணிக் காலத்திற்குள் செவ்வாயைச் சுற்றி வந்து விடுகிறது! அதாவது ஒரு நாளைக்குள் மூன்று முறை செவ்வாய் வானில் இது உலா வருவதுடன் மூன்று முறை தனது கலைகள் யாவற்றையும் மீண்டும் மீண்டும் காட்டி வருகின்றது! இந்தச் சந்திரன் செவ்வாய் உலகின் நாள் சுழற்சி வேகத்தை விட வேகமாகச் சுற்றுவதால், செவ்வாய் வானத்தில் மேற்கில் உதித்துக் கிழக்குத் திசையில் மறைகிறது! இந்த இரு சந்திரன்களும் செவ்வாய் நிழலில் அடிக்கடி மறைந்து வெளி வருவதாலும், சூரியனை மறைத்து நீங்குவதாலும், மிகவும் அதிக எண்ணிக்கையில் கிரகணங்களை உண்டாக்குகின்றன'' என்றார் விஞ்ஞானி.

சோதிடருக்குப் போதும் போதும் என்றாகி விட்டது! ஓர் உலகில் பல சந்திரன்கள்; ஒரு நாளில் பல திதிகள்; பல கிரகணங்கள்! செவ்வாயுலகத்திற்கும் பூமியுலகச் சோதிடத்திற்கும் நெடுந்தொலைவு என்பதை அவர் புரிந்து கொண்டு விட்டார்!

## சாதகப் பொருத்தம்.

இருந்தாலும் தான் வந்த வேலையை நிறைவேற்றத் தொடங்கினர். செவ்வாய் உலகில் அச்சாகிப் பூமியுலகில் வெளிவரும் ஒரு செய்தித்தாளில் செவ்வாய் உலகில் பிறந்த 16 வயது நிரம்பிய மங்கைக்கு மணமகன் தேவை, என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதைக் கண்ணுற்ற பூமியில் உள்ள 18 வயது நிரம்பிய மணமகன் ஒருவன் தன் சாதகத்தை அனுப்பி வைத்திருந்தான்! சோதிடர் சுப்பு மணமகன் சாதகத்தை மணப் பெண் சாதகத்தோடு பொருத்திப் பார்த்தார். எந்தக் கோள்களை, எந்த இராசிகளுடன் பொருத்தி, இந்த இரு வேறு உலகத்தைச் சேர்ந்த சாதகங்களுக்கும் பொருத்தம் பார்ப்பது? என்ன முறையைப் பின்பற்றி இந்த மணமக்களுக்கு 'வாழ்வையோ, வைதவியத்தையோ, ஆயுளையோ, குடும்ப ஒற்றுமையையோ, புத்திர பாவத்தையோ' ஆராய்வது? அவருக்கு மூளை குழம்பியது!

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார். மணமகனுக்கு வயது 18; மணமகளுக்கு வயது 16. எனவே, வயதுப் பொருத்தம் இருக்கிறது!

மணமகனுக்கு எட்டிலே செவ்வாய்; எனவே, செவ்வாய் தோஷ சாதகம்! மணமகளுக்கு எட்டிலே பூமி! எனவே, 'பூமி தோஷ' ஜாதகம்! செவ்வாய் தோஷத்திற்குப் பூமி தோஷம் பொருந்தி விட்டது!

அடுத்தபடி திருமண நாள் நிச்சயிக்கப்பட்டது. செவ்வாயுலகில் 'பூமிக் கிழமையில்' மணமகள் இல்லத்தில் திருமணம்; பூமியுலகில் செவ்வாய்க் கிழமையில் மணமகன் வீட்டில் வரவேற்பு!

திருமண நாள் அன்று மணமகன் பெண்ணைப் பார்த்துத் திடுக்கிட்டான்! மணமகள் பையனைப் பார்த்து அழுதே விட்டாள்!

"இவளா பதினறு வயது மங்கை? இவளுக்கு முப்பத்திரெண்டிற்குக் குறைந்தால் எங்கள் காதை அறுத்துக் கொள்கிறோம்" என்று கூச்சலிட்டனர், பூமியிலிருந்து வந்த பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்கள்.

"யாருக்கு ஐயா, முப்பத்திரெண்டு வயது? முதலில் உங்கள் பையனுக்கு என்ன வயது என்று சொல்லுங்கள். ஒன்பது வயது கூட நிரம்பாத பாலகனைப் பதினெட்டு வயது மாப்பிள்ளை என்று பச்சைப் பொய் பேசி அழைத்து வந்திருக்கிறீர்களே? செவ்வாய் உலக சம்பந்தம் என்றால் என்ன வேண்டுமானாலும் செய்து விடலாம் என்ற எண்ணமா?" என்று செவ்வாயைச் சேர்ந்த பெண் வீட்டார் பதிலுக்குக் கூச்சலிட்டனர்.

சோதிடருக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை!

ஆனால், அருகிலிருந்த விஞ்ஞானி நிலைமையை எடுத்து எல்லோருக்கும் விளக்க முன் வந்தார்.

"பூமி சூரியனைச் சுற்ற எடுத்துக் கொள்ளும் காலம் 365¼ நாள்; ஆனால், செவ்வாய் சூரியனைச் சுற்ற எடுத்துக் கொள்ளும் காலமோ 687 நாள். அதனால், செவ்வாய் ஆண்டு பூமியின் ஆண்டுக் காலத்தைப் போல் இரு மடங்கு நீளமாக உள்ளது! எனவே, பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் ஆகிய இருவர் சொல்வதிலும் உண்மை இருக்கவே செய்கிறது! செவ்வாய் உலக சாதகத்தின்படி பெண்ணிற்கு வயது

16தான். ஆனால், பூமியின் கணக்குப்படி பார்த்தால் வயது 32. அதேபோல், பூமியைச் சேர்ந்த மணமகனுக்குப் பூமி சாதகப்படி வயது 18. ஆனால், செவ்வாய் உலகக் கணக்குப்படி பார்த்தால் வயது 9 தான்!" என்று விஞ்ஞானி விரிவுரை தந்தார்.

அவ்வளவுதான்! இரு உலகத்தைச் சேர்ந்தவர்களும் சோதிடர் மீது பாய்ந்தார்கள்! ஆனால் சோதிடர் அங்கு இருந்தால் தானே?

கனவு தெளிந்து கண்ணைக் கசக்கியபடி சோதிடர் சுப்பு எழுந்து உட்கார்ந்தார் தன் வீட்டில்—பூமியில்! ★

## பற்களின் பாதுகாப்பு

"சுரசுரப்பான பற்பொடிகளைப் பயன்படுத்தினால் பற்களின் புறத்தேயுள்ள எனாமல் தேய்ந்துபோகும். மிருதுவான நாருடைய பச்சைமரக் குச்சி அல்லது தூய பல் ப்ரஷ் (brush)-ஐப் பயன்படுத்த வேண்டும். இவற்றால் பற்களை மேலிருந்து கீழாகத் தேய்க்க வேண்டும்.

நாள்தோறும் காலையில் எழுந்தவுடனும், இரவு உணவு உண்ட பின்னரும் பல் துலக்குதல் இன்றியமையாதது. உணவை நன்றாக மெல்லுதல் பற்களுக்கு உரந்தரும். பல் துலக்கும்போது ஈறுகளை நன்றாக விரல்களைக் கொண்டு அழுத்தித் தேய்த்தலும் முக்கியம்; இப்படிச் செய்தால் ஈறுகளுக்கு இரத்தம் நன்கு பாயும்.

நாகரீக மக்களிடம் தோன்றும் முக்கியமான பல்நோய்கள் இரண்டு. ஒன்று, பல் சொத்தை (Dental Caries) மற்றொன்று, பற்சீழ் (Pyorrhoea).

பல்லில் சொத்தை உண்டாவதற்கு முக்கிய காரணம், கார்போஹைடிரேட் உள்ள சர்க்கரைப் பொருள்களையும் மாப் பொருள்களையும் மிகுதியாக உண்பதாகும்.

பற்சீழ் என்பது ஈறுகளில் அழற்சி உண்டாகி சீழ் வருவதாகும். இந்த நோய் பல்லின் வேர்தங்கும் குழியிலுள்ள எலும்பைத் தின்றுவிடும்.

இந்த இரண்டுவித பல்நோய்கள் உள்ளவர்களின் உடல் நலம் கெட்டுவிடும். ஆதலால் தகுந்த பல் மருத்துவரிடம் சிகிச்சை பெறவேண்டும்.

பொதுவாக நல்ல ஊட்டமுள்ள உணவு உண்பதும் சுகாதார விதிகளின்படி வாழ்வதுமாக உள்ளவர்களுக்கு இந்நோய்கள் பெரும்பாலும் தோன்றுவதில்லை. 35 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் பல் விழுவதற்கு முக்கிய காரணம் பற்சீழ் நோய் தான்."

('கலைக்களஞ்சியம்')

# தொழுநோய் (குஷ்டம்)

பல ஆண்டுகளாக சல்போன் மருந்துகள் கொண்டு மிருத்துவர்கள் தொழு நோயைக் குணப்படுத்தி வந்திருக்கின்றனர். ஆனால் முழு மறுவாழ்வு அளிப்பது மிகக் கடினமாகவே இருந்து வந்துள்ளது.

உலகச் சுகாதார நிலையத்தின் மதிப்புப்படி உலக முழுதும் மொத்தம் 50 லட்சம் முதல் ஒரு கோடி வரை தொழு நோயாளிகள் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் இந்தியா, சீனா, ஆஃப்ரிக்கா, கொரியா, ஃபிலிப்பைன்ஸ், முதலிய நாடுகளில் இருக்கின்றனர். வெனெசூயெலாவிலும் கொலம்பியாவிலும் சிலர் இருக்கின்றனர். கிருமியினால் ஏற்படுவது தொழுநோய். இதனால் முகம், கை கால்கள் விகாரமாகி விடுவதுடன், உறுப்புகள் ஓரளவு செயலற்றுப் போகின்றன. இப்பொழுது இந்த நோய் மேலை நாடுகளில் அதிகமாகத் தலை காட்டுவதுடன் நீண்ட காலமாக இருந்துவரும் நாடுகளில் அதிகரித்து வருகிறது.

மறு வாழ்வுதரும் பிளாஸ்டிக் அறுவை மருத்துவத்திற்கு முதன் முதலில் முறைகளைக் கண்டுபிடித்தவர் டாக்டர் பால் டிராண்டு என்பவர். இவர் இந்தியாவில் பிறந்தவர். பிரிட்டிஷ் மருத்துவத் தொண்டர் குழுவைச் சேர்ந்த ஒரு அறுவை மருத்துவர்.

இந்த அறுவை சிகிச்சையில் உச்சந் தலைத் தோலிலிருந்து எடுக்கப்பட்ட உரோமம் கொண்டு உதிர்ந்துபோன புருவங்கள் மீண்டும் அமைக்கப்படுகின்றன. அமுங்கிப்போன மூக்கு திருத்தி அமைக்கப்படுகிறது; முகத்தில் விழுந்த சுருக்கங்கள் அகற்றப்படுகின்றன. கை கால்கள் செயலாற்றும் வகையில் அசைவு பெறுகின்றன.

கை அல்லது கால் ஒன்றின் ஒரு பக்கத்தில் இருக்கும் சேதமடையாத தசை நாண், தசை ஆகியவற்றை அகற்றி, இன்னொரு பக்கத்தில் ஒட்டவைப்பதுதான் இந்த முறை. எடுத்துக்காட்டாக, மணிக்கட்டின் மேலிலிருந்து தசையை எடுத்து மணிக்கட்டின் கீழில் ஒட்டவைத்தால் நோயாளிக்கு கையை விரிக்கவும் மடக்கவும் முடியும்.

தொழுநோயை ஒரு தடவை குணப்படுத்தித் தடுத்துவிட்டால் அது தொற்று நோயாக இராது. சிகிச்சை பெற்ற நோயாளியினுடைய குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கோ, அண்டை அயலாருக்கோ ஆபத்து எதுவுமில்லை என்கிறார், தலைசிறந்த பிளாஸ்டிக் அறுவை மருத்துவரான, டாக்டர் என். எச். அன்டியா என்பவர்.

# உண்ணாவிரதம் உடற்பிணிக்கு மருந்து

முன்னாள் கிரேக்க மருத்துவ அறிஞர் ஹிப்போகிரேட்டஸ், ''உடல் தன்னிடமுள்ள கழிவுப் பொருள்களை வெளியே தள்ளாதிருக்கும் வரை, ஒருவன் அதிகமாகச் சாப்பிடச் சாப்பிட அது அவனுக்கு-அவனுடைய உடலுக்கு கெடுதலையே பயக்கும்'' என்று சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். நோயுற்ற நாயோ பூனையோ, வெகுநாட்களுக்கு முன்பே தீனியைச் சாப்பிடாமல், சில வகைப் புற்களையும் மூலிகைகளையும் சாப்பிடுவதை மக்கள் அறிந்திருந்தனர். இது பிராணிகளிடத்து உள்ள ஒரு பாதுகாப்பு முறையாகும்.

''தவறான உணவும், உணவாக உட்கொள்ளப்படும் நச்சுப்பொருள்களுமே நாகரீக மனிதர்களின் பெருவாரியான நோய்களுக்குக் காரணம்'', என்று சின்கிளேர் கூறியுள்ளார். 1911-ம் ஆண்டில் வெளியிட்ட ஒரு புத்தகத்தில் அவர் உண்ணா நோன்பிற்குப் பிறகு தம்முடைய சொந்த அனுபவங்களையும் 117 நோயாளிகளுக்கு உண்ணாவிரதத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் எழுதியுள்ளார். இதனால் நோயுற்ற ஒருவன் மருந்துகளின் உதவியின்றி உண்ணாவிரதம் இருந்தே குணமாகிவிடலாம் என்று எதிர்பார்ப்பது தவறு. மருத்துவமும் உண்ணா நோன்பும் சேரும் பொழுதுதான் பலன் கிடைக்கிறது. இந்த வகையான சிகிச்சை முறை இப்பொழுது சோவியத் யூனியனில் உள்ள பல மருத்துவ நிலையங்களில் கையாளப்படுகின்றது.

உண்ணாவிரதமிருக்கும் பொழுது எத்தனையோ பல இரசாயன பௌதீக மாற்றங்கள் நம் உடலில் ஏற்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. உடலின் வளர் சிதை மாற்றம் பட்டினியால் பாதிக்கப்படும் பொழுது ஏற்கனவே ஏற்பட்ட மாறுதல்கள் தானாகவே செப்பனிடப்பட்டு உடல் தன் பழைய நிலையை அடைகிறது. பல்வேறு பாகங்களில் தங்கும் கழிவுப் பொருள்களை அது வெளியேற்றுகிறது. உணவுப் பாதையும், இருதயமும் மட்டுமல்லாது நமது மூளையும் பட்டினியின் போது ஓரளவு ஓய்வு எடுத்துக் கொள்கிறது.

எல்லாவித நோய்களிலும் நமது உடலின் உட்புகுந்த நுண்ணுயிர்களை மாத்திரம் அடக்கினால் போதாது. சில நோய்களின்போது நமது உடலின் வேலைகளையே மாற்றியமைப்பது அவசியமாகிறது. இந்த இடத்தில்தான் நமது உண்ணாவிரத சிகிச்சை பலனளிக்கிறது. உடற்பயிற்சி, நீர்சிகிச்சை, ஒத்தடங்கள், உடலை அழுத்தித் தேய்த்தல் (Massage) ஆகியவைகளுடன் சேர்த்து உண்ணாவிரத சிகிச்சையை ஒரு நோயாளி பெறும்போது அவனது உடலின் ஆக்கல், அழித்தல் வேலைகள் தூண்டப்பட்டு கழிவுப் பொருள்கள் வெளியேறுதல்

எளிதாகிறது. உடற்பிணி நீக்கும் அளவான உடற்பயிற்சி உண்ணுவிரதச் சிகிச்சைக்கு இன்றியமையாததாகும். மேலும் நோயாளி அருந்தும் நீர்ப்பொருள்கள் இச்சிகிச்சையில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றன. தண்ணீரே அருந்தாமல் அதிக நாட்கள் உண்ணுநோன்பு இருக்க முடியாது; உடம்பில் உண்டாகும் கழிவுப் பொருள்கள் வெளியேற வழியற்றுப் போய் அது தீங்கு விளைக்கும். மாருக உலோக தாதுப் பொருள்களடங்கிய நீர் உண்ணுவிரதமிருக்கும் பொழுது மிக்க நன்மையை அளிக்கிறது. உடலில் தேங்கும் கழிவுப் பொருள்களை வெளியேற்ற அது மிகவும் உதவுகிறது.

உண்ணுநோன்பு கடினமல்ல. முதல் நான்கைந்து நாட்களில் பசியின் தீவிரம் மறைந்துவிடுகின்றது. உடல்நிலை, மனநிலை தெளிவடைகிறது. ஆழ்ந்த தூக்கம் புத்துணர்ச்சியளிக்கிறது. ஆனல் சிகிச்சை முடிவடையும் பொழுதுதான் உணவின் மேலுள்ள விருப்பம் திரும்ப வருகிறது. உடல் மிகவும் தளர்ந்துள்ளது போலவும் அப்பொழுதுதான் தோன்றும். உண்ணுவிரதச் சிகிச்சையை முடிக்கும்போது ஒவ்வொரு நோயாளியும் தனித்தனியாக, தகுந்த முறையில் உண்ணுவிரதத்தை முடிக்க வேண்டும். அதன் பிறகே சாதாரண உணவு வகைகளை அவர்கள் சாப்பிடத் தொடங்க வேண்டும்.

—டாக்டர் ஜி. போரோடைனு பிரஷிஷ்கியான்

"ஒவ்வொருவரும் புகழ்கின்ற புத்தகங்களை எவருமே படிப்பதில்லை."

—Anatole France

x x x

"சிறந்த மனிதன் என்பவன் சொற்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவான்; நடத்தையில் உறுதியாக இருப்பான்."

—கன்ஃபூஷ்யஸ்

x x x

"உங்கள் திறமைக்கு மிகப் பிடித்தமான ஒரு வேலை கிடைக்குமானல் மிக்க நல்லது; அத்தகைய பணி கிடைக்காவிட்டால் அதற்காக வேதனைப்பட்டுக் கொண்டு நேரத்தை வீணுக்காதீர்கள். கூர்ந்த அறிவும் சக்தியும் ஊக்கமும் இருக்குமானல் வேறு எந்த முயற்சியிலும் சிறு வெற்றியாவது கிடைத்தே தீரும்.''

—J. C. ராபர்ட்ஸ்

மு. குழந்தைவேலு, பி. ஏ.

# திருப்புகழ் பக்தி நூலா?

*[காம ரசப் பாடலான திருப்புகழ் ''காவடிச் சிந்தின்'' அண்ணன்! காவடிச் சிந்தின் பழங்காலப் பதிப்பைப் படித்தவர் மட்டுமே இதை உணர முடியும்! இரண்டுமே நிர்வாண இரவு 'கிளப்'களில் பாடிச் சுவைக்கப்பட வேண்டியவை. பக்தி நூல் அல்லாத திருக்குறளில் உள்ள 'இன்பத்துப்பால்' பகுதியையே இருட்டடித்திருக்கின்ற பக்தர் உலகம் திருப்புகழையும், காவடிச் சிந்தையும், வால்மீகி இராமாயணத்தையும் பக்தியின் பெயரால் படித்து இன்புறுவதுதான் வேடிக்கை! ''திருப்புகழ் பக்தி நூல்'' என்று கருதுவோர் இதை ஊன்றிப் படிக்க வேண்டும்.]*

இடிந்துபோன வீட்டுக்கு முட்டுக்கட்டை கொடுக்கும் அளவுக்குத்தான் கொடுக்க முடியும்; கொடுக்கவேண்டும். நிலைமையை மறந்து மேலும் நாள் கடத்திச் செல்லுவதால் வீட்டுக்கும் கேடு; வீட்டில் உள்ளவர்களுக்கும் துயரம்; இழப்பு. பழுதடைந்து செப்பனிட முடியாத நிலையை அடையும் போது, அப்பழுதான பொருளைத் தூக்கி எறிவதுதான் முறை; நல்லவழி. பயன் தந்த பொருளே, அதைப் பழுதடைந்த போது தூக்கி எறியலாமா என்று எண்ணிக் காலம் கடத்துவது அறமும் அன்று; ஆக்கமும் அன்று.

ஒரு காலத்தில் பயன் தந்த கருத்து, கால ஓட்டத்தின் காரணமாகப் பயன் தருவதற்குப் பதில் ஊறு செய்யலாம்; அறிவூட்டுவதற்குப் பதில் அறிவுக்குப் புறம்பாகச் செல்லலாம். அக்கருத்துக்களை மறந்துவிட்டுப் புதிய கருத்துக்களை ஏற்பதுதான் அறிவுடைமை. அதைவிட்டுவிட்டுப், பழமையிலேயே உள்ள பிடிப்பை விடமாட்டேன் என்று கூறுவது அறிவுக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை, எதிரி என்று சொல்லலாம்.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஒவ்வொன்றையும், பயன் கருதியே ஏற்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அரசியல் கருத்தாகட்டும், சமுதாய அறிவுரை ஆகட்டும், பொருளாதாரப் பாடமாகட்டும்; இவற்றால் மக்களினம் சிறப்பாகவும் உயிரினம் பொதுவாகவும் அடையும் நன்மை, ஏற்றம், இவை கொண்டே அக்கருத்துக்கள் ஏற்கப்பட முடியும்; ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இது போன்றே கடவுள் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் நூற்களையும் அறிவுக் கண்கொண்டு ஆய்ந்து, சமுதாயம் அக் கருத்துக்களால் பெறும் நன்மையை உணர்ந்தே பின்பற்ற முடியும்; பின்பற்ற

வேண்டும். இந்த நூல் இன்னுரால் பாடப் பெற்றது; இன்னுர் இம்மதத்தைச் சார்ந்தவர்; இம் மதம் எங்கள் மதம் அதனுல் குறைகாண மாட்டோம், குறை காணக் கூடாது. அப்படியே ஏற்ருக வேண்டும்—என்று கூறி னுல் புதுப்புது விஞ்ஞான உண் மைகளைக் கண்டு உலகத்திற்கு உணர்த்திய உத்தமர்களைத் துன் புறுத்திய ஆதிமனிதர்களுக்கும், நமக்கும் வேறுபாடில்லை என்று தான் நல்லறிவாளர்கள் தீர்ப்புத் தருவார்கள். எதையும் கண் மூடிப் பின்பற்றும் தன்மை களை யப்பட்டு, அறிவு ஆராய்ச்சி கொண்டு ஆய்ந்து ஏற்று வழி நடக்கும் நிலைமை உருவாக வேண்டும் அப்போதுதான் சிறந்த சமுதாயம் உருவாகும்.

கண்ணுடி முன்பு நின்று, மணிக்கணக்காக வாசனை எண் ணெய் பூசி அழகு பெற ஒப்பனை செய்யப் பெற்று, மேகத்தோடு, இருளோடு ஒப்பாக உவமைப் படுத்திப் பேசப்பெறும், புகழப் படும் கரிய கூந்தல், தன் நிலை தவறி இருக்க வேண்டிய இடத்தை விட்டுக் கீழே வீழ்ந்து விட்டால், அருவருக்கத் தக்க பொருளாகி விடுகிறது. புலவர் நாவில் புகழப்பட்ட கூந்தல், புன்மையாகக் கருதப்படுகிறது, அது நிலை குலைந்துவிட்டால். மக் கள் வாழ்வு முறையும் அப்படியே. இலக்கியமும் அப்படியே. வரம்பு மீறி, குறிப்பிட்ட அளவு கோலுக்கு, உரை கல்லுக்குப் பொருந்தி வராவிட்டால், நிலை யின் இழிந்த மனிதரைப் போல் தரம் குறைந்ததாகிறது.

## திருப்புகழ்

அருணகிரியின் திருப்புகழ் முருகவேளைக் குறித்துப் பாடப் பெற்றப் புகழ் நூல். பக்தி இல் லாதவர்க்குப் பக்தியூட்டும் பக்தி நூல். தமிழ்க் கடவுளின் புகழையும், அவரது துணைவியர் வள்ளி, தெய்வானை அம்மையர் களின் சிறப்பையும், அவர்கள் எழுந்தருளியுள்ள படைவீடுகளை யும் சிறப்பித்துரைத்து, நாத்திக ராக இருப்பவரை ஆத்திகராக்க, கெட்டழிந்து திரிநது கீழ்நிலை யிலே போவோரைத் தடுத்து ஏற்றம் பெற வழி சொல்லும் சிறந்த நூல் என்று இந்து மதத் திலே, சைவப்* பிரிவிலே, மிக ஆழ்ந்த நம்பிக்கைகொண்ட பக்திமான்கள் கூறுகிருர்கள்; புகழ்கிருர்கள். ஆனுல் திருப் புகழ் முருகனது அருட் செயலை, அருள் தரும் தோற்றத்தை, உல கில் இருந்து ஈடேற்றும் முறையை, விளக்கத்துணை செய் வதற்குப் பதிலாக, படிப்பவருக்கு உடற்கூறுகளை விளக்கிப் பெண் களின் உடல் உறுப்புகளைப் பல கோணங்களில் இருந்து படம் எடுத்துக் காட்டி, அதை அறிய ஆவலைத் தூண்டுகிறது.

சில நண்பர்கள் ஒரு நூலில் உள்ள நிறைவையே காண வேண்டும்; குறை கண்டாலும், காணுது போல் விட்டுவிட வேண் டும். நல்லனவற்றைக்கொண்டு, அல்லாதனவற்றைத் தள்ளிவிட வேண்டுமே அன்றி, குறையை மட்டுமே விளக்கிக் காட்டி, நிறை வுக்குக் களங்கம் ஏற்படுத்த லாகாது என்று சொல்லுவார் கள். இன்னும் ஒருபடி முன்னே றிச் செல்லும் நண்பர்கள், விறகு நிறுக்கும் தராசில், தங்கத்தை நிறுக்கக் கூடாது; ஒவ்வொன் றுக்கும் ஒவ்வொருவித அளவு கோல் இருக்கிறது; அந்தந்த அளவுகோல் கொண்டே அள விட வேண்டுமே அன்றி, தவ ருன எடை கல்லால் எடை போடலாகாது, என்பார்கள்.

*இது மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் சிறப்பாகத் தோன்

றும். சிறந்த முறையில் ஆராய்ந்து பார்த்தால் இது ஒவ்வாத உவமை என்பது தானுக விளங்கும். நிறைவு இருக்கும் இடத்தில்தான் குறை இருந்தால் நிச்சயம் சுட்டிக்காட்ட வேண்டும். குறைவால் சமுதாயம் பாதிக்கப்படுமே யானுல், நிறைவையும் பொருட்படுத்தாது ஒதுக்கி வைத்தே ஆகவேண்டும். ஒரு கிண்ணம் பாலில், ஒரு சிறு பூச்சி விழுந்திருந்தாலும், அதை நிறைவுக்காக அருந்தலாகாது. பால் சாக்கடையோடே கலக்கப்படவேண்டும். பூச்சி சிறியது. பால் அளவு அதிகம் என்பதற்காக உட்கொண்டால் உயிருக்கே ஆபத்து! அல்லது உடலுக்குக் கேடு. இது போன்றே சில நூல்களில் இருப்பது சிறு குறைவு என்றெண்ணி, இலக்கிய நயத்துக்காக, ஏனைய அழகு நயத்துக்காக, அடிமைப்பட்டு நூற் கருத்துக்களை ஏற்பதும், சமூக ஒழுங்கையே ஒருசிறு கருத்து குலைத்து விடுமானுல், ஒருசிறு பகுதி, ஒரு சமூகத்தையே தாழ்வாக மதிக்க இடம் தருமானுல், அந்நூல் மக்கள் கண்களில் இருந்தே அப்புறப்படுத்தப்பட வேண்டும். அல்லது அக்குறைவு நீக்கப்பட முடியுமானுல் நீக்கப்பட வேண்டும்.

திருப்புகழ் "அமிர்தம்" தந்த அருணகிரியாரின் வாழ்வு முறை பற்றி யாவரும் அறிந்திருப்பார்கள். அவர் இளமைப் பருவத்தில் காமுகராக இருந்து, கண்ட பெண்கள் பின்னே சுற்றி அலைந்து சீர்கேடாக வாழ்ந்தது; பொருட் பெண்டிருக்குப்பொருள் கொடுக்கத் தனது சகோதரியிடமே பணம் கேட்டது; அதற்கு அவள், "உடல்தானே வேண்டும்? நானும் பெண்தானே! உன் இச்சையைத் தீர்த்துக் கொள்ளலாமே", என்று கூறியது; அதற்குப் பின்பு தொழுநோயால் பாதிக்கப்பட்டது; தற்கொலைக்கு முயன்றது; இறைவன் காப்பாற்றியது—இன்னபிற நிகழ்ச்சிகள் நாம் அறிந்ததே. ஆனுல் பெரும்பாலோர் திருப்புகழ் படித்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். திருப்புகழ் தமிழ் நூல்; பக்தி நூல்; தமிழர் எழுதியது என்று நாட்டுப் பற்று என்ற போர்வையில் மயங்காமல் அது மதிப்புரைக்கு வந்த நூல் என்று மனதில் கொண்டு குறையும், நிறையும் காணும் நோக்கோடு ஆய்வுக்கண் கொண்டு பார்த்தால் அருணகிரியின் திருப்புகழ் படிப்போரைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துவதற்குப் பதில் பெண் இன்பம் தேடி அலைய வழி வகுத்துச் செல்லும் முறையைக் காணலாம். திருப்புகழ் பக்தி நூல் என்ற எண்ணம் மறைந்து, இன்ப விளக்க நூல் என்றே தோன்றும். பக்தியில் நிலைத்த சைவர்கள், "முருகப் பெருமானது சிறந்த புகழாகிய திருப்புகழை முறையாகப் பாராயணம்செய்யும்பக்தர்கள் இம்மையில் எல்லாப் பேறும் பெற்று, மறுமையில் நிச்சயம் முக்தி பெறுவார்கள். நரகம் அவர்களின் கண்ணில்கூடத் தட்டுப்படாது" என்கின்றனர்.

ஆனுல் ஒன்றுமட்டும் உண்மை; உறுதி. அருணகிரியின் திருப்புகழ், அதிவீரராம பாண்டியரின், உடல்கூறு சாத்திர விளக்கத்தைக்காட்டிலும்ஒருபடி உயர்ந்து நிற்கிறது. இளம் காமுகருக்குப் பெண்களின் மனநிலை அறிந்து, முன்னேக்கிச் செல்ல வழி சொல்லிக் கொடுக்கிறது. முழு இன்பம் பெறுவது எப்படி என்று சிறந்த முறைகளைக் கற்றுக் கொடுக்கிறது. அருணகிரியின் உள நூல் முறைகளையும், இன்பத்துக்கு அவர் தரும் விளக்கத்தையும் கவனிப்போம்:

அருக்கு மங்கையர்
மலரடி வருடியே
கருத்தறிந்து பின்
அறைதனில் உடைதனை
அவிழ்த்தும் அங்குள்ள
அரசிலை தடவியும் இரு
தோளுற்
றணைத்து மங்கையின்
அடி தொறு நகமெழ
உதட்டை மென்று பல்
இடு குறிகளுமிட
அடிக்களம் தனில் மயில்
குயில் புறவென மிகவாய்
விட்
டுருக்கு மங்கியின்
மெழுகென உருகிய
சிரத்தை மிஞ்சிடும்
அநுபவம் உறுபல
முறக்கையின் கனி நிகரென
இளைகிய முலைமேல்
வீழ்ந்து
உருக் கலங்கி மெய்
உருகிட அமுதுகு
பெருத்த உந்தியின் முழுகி
மெய் உணர்வற
உழைத்திடும் கன கலவியை
மகிழ்வது தவிர்வேனோ...''

இப்படித்தொடங்குகிரூர், அருண கிரியார் தம் பக்தி நூலில். மீண்டும் ஒரு முறை நிறுத்திப் பதம் பிரித்துப் படித்துப் பார்ப்போம். அப்போதுதான் அருணகிரியின் அமிர்தவாரியின் சிறப்பை உணர முடியும்!

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாக இருக்கும் ஆண்டவனின் பாதத்திலே ஆரம்பித்துப் பரலோகம் காட்ட வழி வகுப்பதற்குப் பதில், அவருக்கு மங்கையரின் மலர் அடி வருடுவதிலே ஆரம்பிக்கிருர் திருப்புகழார். திருப்புகழ் அமிர்தக் கடலுக்கு ஊற்று அங்கேதான் இருக்கிறது போலும்! இறைவனின் கருத்தை அறிந்து 'இது நல்ல சமயம் அருள் செய'' என்று பாட வேண்டிய பக்திமான், மங்கையின் கருத்தை அறிந்துபின் அறைதனில் உடைதனை அவிழ்க்க வேண்டுமென்று, மிகவும் கீழ்த்தரமான கருத்தைக் கவிநயத்தோடு வெளியிடுகிருர்!! அப்பனைப் பாடவேண்டிய நாக்கு அழகிய மங்கையைப் பாடுகிறது. பக்தனுக்குப் பக்திப் பாதை காட்டும் நாக்கு, இன்பப் பாதைக்கு வழி செய்கிறது. அதனேடு நிறுத்தவில்லை அருணகிரி. கம்பர் ''தேர்த்தட்டு'', ''பாம்பின் படம்'' என்று உவமை தந்ததையும் மீறித் திருப்புகழார் அரசிலை என்று அழகிய உறுப்புவமை கூறிப் பின்பு, அதிவீரராம பாண்டியன் தந்த முறைகளைப் பின் பற்றுகிருர், நகக்குறி பதித்தல்; இதழ் சுவைத்தல் இன்ன பிற - அகவாழ்வு முறையை அணு, அணுவாக; அங்குலம், அங்குலமாக எடுத்துரைத்துக் கடைசியில் ''அமுது உகு பெருத்த உந்தியின் முழுகி, மெய் உணர்வு அற உழைத்திடும் கனகலவி''யோடு முடிக்கிருர், பக்தியை! இந்தப் பாடலைப் படிக்கும் போது, எந்த விதமான உணர்ச்சி எழும் என்பதை, வாழுமிடம், கொண்டிருக்கும் சமயச் சார்பு, இவைகளை மறந்து, உண்மையிலேயே சிந்திக்கும் மனிதன் என்ற மனிதாபிமானத்தோடு, சீர்தூக்கிப் பார்த்தால் நம் கண்முன் தோன்றுவது அருணகிரியின் உறுப்புவமைகளும், செயல்முறைகளுமே ஆகும்.

## சுந்தரர் கதை

திருவாசகம் இயற்றிய சுந்தரர் கைலாசத்திலேயே தனது காதல் லீலைகளைத் தொடர்ந்திருந்தாலும், அவர் இயற்றிய திருவாசகத்தில், திருப்புகழைப் போல் உடற்கூறு பற்றிய உவமைகள் இவ்வளவு தாழ்வான நிலையில்

இல்லை. கைலாசத்தில் சிவனுடைய பிரதிபிம்பத்திலே இருந்து தோன்றி, அப்பெருமானுடைய திருத்தொண்டில் ஈடுபட்டு வந்த ஆலால சுந்தரர்தான் மறுபிறப்பில் சுந்தரராகத் தோன்றினர்; கைலாசத்தில் அருச்சனைக்காக மலர் கொய்துவர நந்தவனம் சென்றார். அங்கே பார்வதியின் திருத்தொண்டில் ஈடுபட்ட அநிந்திகை, கமலினி எனும் இரு பெண்கள் பூப்பறித்துக் கொண்டிருந்தனர்; அவர்களைக் கண்டதும், ஆலால சுந்தரருக்குக் காதல் அரும்பியது. அந்த இரு பெண்களும், ஆலால சுந்தரர் நிலையில்தான் இருந்தார்கள்; கைலாசத்திலே காதல் தளிர்விட சிவபிரான் அவர்களை நோக்கி, "உங்கள் அன்பு கனிவதற்குப் பூவுலகில் மக்களாகப் பிறப்பதே தகுதி. ஆதலின் நீங்கள் மூவரும் தமிழ் நாட்டில் தோன்றி. ஒன்றுபட்டுக் காதல் புரிந்து நம் தொண்டு செய்துவிட்டு வாருங்கள்," என்று சொல்லி அனுப்பினர். பின்பு பார்ப்பனராகச் சுந்தரர் பிறந்து, மணத்தின்போது, இறைவன் தடுத்தாட் கொள்ள, திருக்கைலையில் பரத்தையர் குலத்தில் தோன்றிய பாவையாரைக் கோயிலில் கண்டு சுந்தரர் கழல் கொள்ள, இறைவன் திருவருள்படி காதல் நடந்தது; பின்புதிருவொற்றியூர் வந்து சுந்தரர், வேளாளர் குலப் பெண் சங்கிலியாரைக் கடவுள் செயலால் கலப்பு மணம் செய்து வாழ்ந்து வந்தார். சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி அவளை விட்டுப் பிரிந்ததால் குருடாகிப் பின் கண் பெற்றார்.

சங்கிலியாரை மணம் செய்ததை அறிந்த பாவையார் அவரை ஏற்றுக் கொள்ளாமல் ஊடி இருந்தார். வன் தொண்டர் வேண்ட ஆரூர் இறைவன் இரண்டு தடவை பாவையாரிடம் தூது சென்று, ஊடலை நீக்கி மீண்டும் இருவரும் இணைந்து வாழ அருள் புரிந்தார்—என்ற குறிப்புக்களை நாம் புராண வாயிலாக அறிந்திருக்கிறோம். சுந்தரர் இருதரம் மணந்தாலும், சீர்திருத்த மணம் அந்த நாளிலே செய்திருந்தாலும், மதத்திலே பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். மத நம்பிக்கை காரணமாக ஆண்டவனை வேண்டும் தன்மையிலே, பெண்களை ஈனப் பிறவி என்றோ இழிந்தவர் என்றோ கூறவில்லை. "ஊன் மிசை உதிரக் குப்பை, ஒரு பொருள் இலாத மாயம் மான் மறித்தனைய நோக்கி மடந்தை மார்." இது அவர் பெண்களுக்குத் தந்த அடைமொழிகள். அவர் இறைவனை வேண்டும் முறையிலும் மிகுந்த வேறுபாடுள்ளது.

"அழுக்கு மெய் கொடுன்
திருவடி அடைந்தேன்
அதுவும் நான் பட்ட
பாலதொனருஞய்
மழுக்கை வாரியும் பால்
கொள்வார் அடி கேள்
பிழைப்பன் ஆகினும்
திருவடிப் பிழையேன்
வழுக்கி விழினும்
திருப்பெயர் அல்லால்
மற்று நான் அறியேன்
மறு மாற்றம்
ஒழுக்கம் என் கணுக் கொரு
அருந்துறையாய்
ஒற்றியூர் எனும் ஊர்
உறைவோனே"

என்று மிகவும் நயம் பட இறைவனை வேண்டும் தன்மையைக் காண்கிறோம்.

## வசைப் பாடல்

ஆனல் திருப்புகழார் தமது தகாத செயலால் "பண்புலாவக் கொடி விரல் நுகதியில் புண்படும் சஞ்சலன்" ஆனபின்பு — தொழு நோய் பெற்ற பின்பு-மிகவும் இழி

வான முறையிலே பெண்களைத் தூற்றுகிறார். சண்டை வந்த போது சந்தையிலே கேட்கப் படும் வார்த்தைகள், "திருப் புகழ்" என்ற பெயர் பெற்ற நிலை கண்டால் வருந்த வேண்டியிருக் கிறது.

"வஞ்சனை மிஞ்சிய
  மாய வம்பிகள்
வந்தவர் தங்களை
  வாதை கண்டவர்
வங்கணமும் தெரியாமல்
  அன்புகள் பல பேசி
மஞ்ச மிருந்த நூராக
  விந்தைகள்
தந்த கடம்பிகள்
  ஊறலுண்டிடு
மண்டைகள் கண்டிதமாய்
  மொழிந்திடும் உரையாலே
சஞ்சலமும் தரு
  மோக லண்டிகள்
இன் சொல் புரிந்துருகாத
  தொண்டிகள்
சங்கம மென்பதையே
  புரிந்த வனயராதே
தங்களில் நெஞ்சமே
  மகிழ்த்தவர்
தொஞ்சி நடம் பயில்
  வேசை முண்டைகள்"

என்று மிகவும் இழிந்த நிலையிலே பேசுகிறார். எய்தவன் இருக்க அம்பை நோகும் நிலை தான், தன் மனதைக் கட்டுப் படுத்தத் திறன் அற்று, வலிமை இன்றி, மனம் போன போக்கில் போய் கெட் டொழிந்ததால், - தொழு நோய் விரலை அரித்துத் தின்னும் நிலை பெற்று அழுகியதால் - மனம் நொந்து, புலம்பும் புலம்பல் இது. இதைப் போன்று மிகவும் மோச மான தன்மையிலே பேசும் நிலை யைத் தான் திருப்புகழில் காண முடிகிறது. இது தான் அமிர்த மாகச் சிலருக்குத் தோன்று கிறதோ என்று ஐயுற வேண்டி யுள்ளது!

சுந்தரர் தனக்குத் தாசி குலப் பெண் பாவையைப் பரமன் அளித்ததையும்; சங்கிலி எனும பெண்ணோடு இணைத்து வைத்த தையும் பெருமையாக எண்ணிப் புகழ்ந்து பாடுகிறார். அவர் நோக் கமும் துன்பமான இவ்வுலக வாழ்வை விட்டு, வீடு பெற வேண்டும் என்பதுதான். பெண் கள் தொடர்பால் தனக்கு வீடு பெறும்போது தடைப் பட்டதே என்று வருந்தும் நிலையோ பெண் இனத்தைக் குறைகூறும் தன் மையோ அவரிடம் இல்லை.

"ஏழிசையால், இசைப் பயனாய்
  இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செயும்
  துரிசுகளுக்குடனாகி
மாழை ஒண்கண் பரவையைத்
  தந் தாண்டானை மதியில்லா
ஏழை யேன் பிரிந்திருக்கேன்
  என் ஆரூர் இறைவனையே.

வங்கமலி கடல் நஞ்சை
  வானவர்கள் தாம் உய்ய
நுங்கி அமுதவர்க்கருளி
நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலி யோ டெனைப் புணர்த்த
  தத்துவனைச் சழக்க னேன்
எங்குவக்கப் பிரிந்திருக்கேன்
  என் ஆரூர் இறைவனையே"

என்று கலை உணர்வோடு, நன்றி அறிதலோடு; இசைப் பயனாக எடுத்துரைக்கும் தன்மையைச் சுந்தரரிடம் கேட்கிறோம். இந் தச் சிறந்த முறை அருணகிரி யின் திருப்புகழிலே காணக் கிடைக்காத ஒன்றாகவே இருக்கி றது.

தட்டும் இடம் எல்லாம் அகப் பொருள் உவமை; காணும் இடம் எல்லாம் உறுப்பு நலன் கூறல்; திரும்பும் திசை எல்லாம் பெண் ணினத்தைத் திட்டும் நிலைமை. இதுதான் திருப்புகழின் தன்மை! பொதுவாகப் புற உவமைகளைக் காட்டிலும், அகப் பொருள் உவ மைகளே மனதில் தங்குகின்றன.

முக்கியமான கருத்துக்கள் நிலை பெற வேண்டுமென விரும்புவோர், அக உவமைகளால் தான் விளக்குகின்றனர். பேச்சுத் திறமைக்கு நிச்சயம் கல்வி வேண்டும் என்பதை மக்கள் மனதிலே நிலை நாட்ட விரும்பிய வள்ளுவர்,

"கல்லாதான் சொற்காமுறுதல்
 முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்
 றற்று"

என்று கல்லாதான் சொல் காமுறுதலுக்கு அகப் பொருள் உவமை தருகிறார். வேறு உவமை அவருக்குத் தெரியாததால் இதைக் கூறவில்லை. அகப் பொருள் உவமை ஆணித்தரமாக மனதிலே பதியும் என்ற காரணத்தாலேயே வள்ளுவரும் இம் முறையைப் பின்பற்றுகிறார். புறப் பொருள் விளக்கத்தைக் காட்டிலும், அகப்பொருள் விளக்கம் மறக்காமல் நிலைத்து நிற்கும். திருப்புகழ் மட்டும் விதிவிலக்கல்ல இதற்கு.

பெரும்பாலும் மதச்சார்புடைய நூல், இறை வழிபாட்டுக்குரிய நூல், அகப்பொருள் கலப்பில்லாமல் இருக்க வேண்டும். அக்ப் பொருள் கலக்கும் போது இறைவனிடம் வழிகாட்டுவதற்குப் பதில், அது வேறு எத்திசைக்கோ திருப்பி விடுகிறது. அது சிறந்த முறையல்ல. திருப்புகழில் பெண் இன்பத்தைப் பற்றிக் குறிப்பிடப் படாத பகுதியே இல்லை எனலாம். ஒவ்வொரு பாடலில் இருந்தும் மேற்கோள் காட்டினால் இக் கட்டுரையே இன்பம் பற்றி எழுதிய சிறப்பு விளக்கமாகத் தோன்றும்.

## காமக் களஞ்சியம்

சிலர், "முற்பகுதியில் பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், கடைசியில் , அவர் அப் பெண் எனும் மாயையிலிருந்து விடுபட்டு. இறைவனின் அருளைத் தானே வேண்டி நிற்கிறார்?" அங்கு அவரது நோக்கம் விலைமாதர் வசப்பட்ட வலைமாளுக மனிதன் ஆகாமல், அதிலிருந்து தப்பி உய்யும வழி அல்லவா கூறுகிறார்? இது புரியவில்லையா?" என்று கேட்பார்கள். தவிர "விலைமகளிரைப் பற்றி மிகவும் இழிவாகக் குறிப்பிட்டிருப்பது மக்களை நல்வழிப் படுத்துவதற்காகத் தானே, இது விளங்கவில்லையா?" என்றும் கேட்கக் கூடும்.

"இருள் விரி குழலை
 விரித்துத் தூற்றவும்
இறுகிய துகிலை
 நெகிழ்த்துக் காட்டவும்
இரு கடை விழியும் உறுக்கிப்
 பார்க்கவும் – மைந்தரோடே
இலை பிளவதனை நடித்துக்
 கேட்கவும்
அறு மொழி பலவும்
 இசைத்துச் சாற்றவும்
இடையிடை சிறிது நகைத்துக்
 காட்டவும் - எங்கள் வீடே
வருகென ஒரு சொல்
 உரைத்துப் பூட்டவும்
விரிமலர் அமளி
 அணைத்துச் சேர்க்கவும்
வரு பொருள் அளவில் உருக்கித்
 தேற்றவும் நிந்தையாலே
வனைமனை புகுதில்
 அடித்துப் போக்கவும்
ஒருதலை மருவு புணர்ச்சித்
 தூர்த்தர்கள்..."

என்று அருணகிரியார் நிகழ்ச்சிகளை விரித்துரைக்கும் போது, ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு வித நிலையை நம் மனக் கண்முன் கொண்டு வருகிறது; கொண்டு வரவேண்டும். அப்படி இல்லையானால் நமது கருத்திலே பிழை இருக்கிறது என்று தான் பொருள். "இருள் விரி குழலை விரித்துத் தூற்றவும்" எனும்

போது நம் கண்முன் ஒரு பெண் தனது கரிய கூந்தலை உலர்த்தும் காட்சி நமக்குத் தோன்றுகிறது. இப்படியே ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு காட்சியை நம் கண் முன் இழுத்து வருகிறது. இப்படி அகப் பொருள் காட்சிகண்ட பக்தன், பின்பு பக்தியில் ஈடுபடுவானா? அவன் மனதில் இறைவனைப் பற்றிய எண்ணம் நிலைத்திருக்குமா? அவன் உள்ளத்தில் அருள் இருக்குமா?—என்பதை உள நூல் கற்றுணர்ந்த உண்மையான உள நூல் ஆசிரியரைத் தான் கேட்க வேண்டும். பெண் இன்பம் போதையிலே மூழ்கியவர்களைப் பேரின்ப நினைவுக்கு இழுத்து வருவது மிகக் கடினம். அதனால்தான் வள்ளுவர் கூட உண்டால் மயக்கும் கள்ளைக் காட்டிலும் நினைத்தாலே மயக்கும் காமம் கொடிது என்றார்.

''உள்ளக் களித்தலும்,
காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்குண்டு,''

என்ற குறள் மூலம். மனித மனம் மூடி இருக்கும். மறைந்திருக்கும் பொருளை உற்று நோக்குவதிலும் ஆராய்ச்சி நடத்துவதிலுமே முனைந்துள்ளது. பாடப் புத்தகங்களில் சில பகுதிகளை விட்டுவிட்டதைக் குறிப்பதற்காகப் புள்ளிகள் இட்டால், மாணவன் முதலாவது செய்யும் வேலை, மறைக்கப்பட்ட பகுதி என்ன என்பதை மூலத்திலிருந்து கண்டு குறித்து வைப்பதாகும்.

அருணகிரி நாதரைப் போல் நாடி தளர்ந்து, உடல் தளர்ந்து, விரலில் புண் ஏற்பட்டுப் பெண் மேல் வெறுப்பு ஏற்பட்டதால் தான் மூந்திய வரிகளை உதறி விட்டுப் பிந்திய வரிகளை மனதில் கொள்ள முடியும். நல்ல உடற்கட்டோடு இருக்கும் வாலிப உள்ளங்கள், பிணி, மூப்பு எய்தாதவர்கள், அருணகிரிநாதரின் திருப்புகழைக் கேட்கும்போது, பக்தியில் நிச்சயம் ஈடுபடமாட்டார்கள். அவர் சொன்ன உவமைகளில்; விரித்துரைத்த விளக்கங்களில்; நிகழ்ச்சிகளில் தான் மூழ்கி இருப்பார்கள். இது உள நூற் பண்பு.

இளமைப் பருவத்திலே உள்ளத்தை ஒழுங்கு படுத்தி, சிறந்த வழி செல்லப் பாதை அமைத்துத் தரும் நூலே சிறந்த நூல், உயர்ந்த நூல். வயதான பின்பு, நோயில் அடிபட்டு உடல் குலைந்த பின்பு; உடல் இன்பம் பெறவோ, திருநெறி செல்லவோ திறன் அற்ற நேரத்தில் நெறிப்படுத்தும் நூல் சிறந்ததாகாது.

"செல்லிடத்துக் காப்பான்
சினம் காப்பான் அல்லிடத்துக்
காக்கில் என் காவாக்கால் என்''

என்றாற்போல், துள்ளித் திரியும் வாலிப உள்ளங்களை, நல்ல வழிப் படுத்தி, சமுதாயத்திற்கு ஏற்றம் காண முறை காட்டும் கருத்தே சிறந்த கருத்து; போற்றப்பட வேண்டிய கருத்து; பின்பற்றப் பட வேண்டிய கோட்பாடு. நாடி தளர்ந்த பின்பு நேர்மைப்படுத்த உதவும் கருத்து சிறந்த கருத்து எனக் கருதப் படுவதற்கில்லை. இந்த முறையில் கண்டால் திருப்புகழ் வாலிப உள்ளங்களில் உணர்ச்சியை ஊட்டி, பெண் இன்பத்தைத் தேடி அலைய வழி செய்கிறது. பெண் இன்பம் என்ன என்று அறிய ஆவலைத் தூண்டுகிறது, உறுப்பு பற்றி வரும் உவமைகளால். முருகனின் திரு அருள் பாடித், திருப்புகழ் பாடும் சிறந்த நூலாக இருப்பதற்குப் பதில், பெண்ணின் எழிலையும். இழிந்த தன்மையையும் பறை சாற்றும் வரிகளாக இருக்கின்றன, அருணகிரி

யின் அருள் வாக்குகள். பக்தி ஊட்டும் அமிர்தம் என்ற தன்மை போய், காமரசம் கொட்டும் காவியமாகிறது. திருப்புகழ் பக்திச் சுவையோடு விளங்க வேண்டுமானுல் ஒவ்வொரு பாட்டிலும் உள்ள முதற்பகுதியை நீக்கிவிட வேண்டும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற இரண்டும் கெட்டான் நிலை மாற்றப்பட வேண்டும். அல்லது அதைப் பக்தி நூல் என்ற நிலையிலிருந்து நீக்கிவிட்டு, இன்ப நூல் என்ற தலைப்பிட்டோ வேறு தலைப்பிட்டோ வெளியே உலவச் செய்ய வேண்டும். அதில்லாமல் திருப்புகழ் பக்தி நூல் தான் என்று வரிந்து கட்டி உறுதுணையாக நிற்பது என்பது, இருள் போன்று கருப்பு நிறம் உடையவனை 'வெள்ளையன்' என்றழைப்பதுபோல்; கண் இல்லாதவனைக் 'கயல் விழி' என்றழைப்பது போல்; சொத்தைப்பல் உடையவனை 'முல்லை நகை' என்றழைப்பதுபோல், ஒவ்வாத கருத்து; முரண்பாடானது; எள்ளி நகையாடப் படுதற்குரிய ஒன்றுகும்.★

## சைவம் பரவியது எப்படி?

"தென் இந்தியாவில் சமண-புத்த மதங்களைச் சேர்ந்திருந்த பொது மக்களிடமிருந்து அந்தக் காலத்தில் ஒருவரையாவது சைவ மதத்துக்கு மாற்றியிருக்க முடியாது. சைவ மதத்துக்கு ஆள் சேர்க்க மிகப் பரந்த கொள்கை தேவைப்பட்டது; தேவைப்பட்ட தந்திரமும் கையாளப்பட்டது. சிவ தீட்சை பெறுவதைச் "சடங்கு" என்று சொல்வதை விட வெறும் வேடிக்கை யென்று சொல்வது அதிகமாகப் பொருந்தும். இன்றளவும் இது அவ்வாறே இருந்துவருகிறது. ஆட்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். இக்காலத்திலும் சாதியினின்றும் விலக்கப்பட்டவர்களையும் "இந்துக்கள்" எனச் சேர்த்து இந்துமதஸ்தர்களின் தொகையைக் கணக்கிடுகிருர்களல்லவா? இதில் தத்துவமோ, மத சம்பிரதாயமோ, எதுவுமில்லை.

இன்று கிருஸ்துவ மதப் பிரசாரகர்கள் எவ்வாறு தம் மதத்திற்குச் சுலபமாக ஆட்களைச் சேர்த்து வருகிருர்களோ அதே மாதிரி சைவ நாயன்மார்களும் அக்காலத்தில் ஆட்களைச் சேர்த்து வந்தார்கள். ஆட்கள் அதிகமாகச் சேரச் சேர அவர்களுடைய மகிழ்ச்சியும் அதிகப்பட்டது. இவ்விதமாகத்தான் ஒவ்வொரு சாதியிலிருந்தும், தொழில் வகுப்புக்களிலிருந்தும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் திரட்டப்பட்டார்கள். தென் இந்தியாவிலுள்ள சகல பொதுக்கோயில்களிலும் வைத்து வணங்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் நாடார் குலத்தைச் சேர்ந்த ஒருவரும், சக்கிலிய வகுப்பைச் சேர்ந்த ஒருவரும் இருக்கிருர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தந்திரத்தைக் கையாண்டார்கள்; சைவ சமயம் பலமுற்றது. சைவர்கள் தொகை அதிகரித்து, பவுத்த மதமும் சமண மதமும் மறைந்தன."

—நாகர்கோயில் P. சிதம்பரம்-பிள்ளை, B.A., B.L.
("*ஆலயப்பிரவேச உரிமை*" *பக்கம்* 80-81).

ப. நா. பாலசுப்பிரமணியன், B,SC., D.H.M.P.

# புற்று நோய்

*[புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை. இதன் காரணங்களோ, குறிகளோ, சிகிச்சைகளோ, இன்றும் சோதனைக் கட்டத்திலேயே இருக்கின்றன. பொதுவாக மற்ற நோய்களைப் போலவே இதுவும், நல்ல உடற்பயிற்சியும், சத்தான உணவும், உடலுழைப்பும், ஒழுங்கு முறையான வாழ்வும் உள்ளவர்களுக்கு வருவதில்லை. இன்றைய நிலையிலுள்ள கருத்துக்களே இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன.]*

நாகரிகம் வளர வளர விதவிதமானதும் விநோதமானதுமான நோய்கள் தோன்றுவது இயற்கையின் நியதிபோலும்! இல்லாவிடில் மருத்துவர்களின் மண்டையைக் குடையும் புதிய நோய்கள் பல தோன்றுவானேன்? எந்த விதமான துன்பமும் இல்லாவிட்டாலும் பணம் படைத்த சிலர் மருத்துவரிடம் சென்று தங்களுக்கு ஏன் நோய் தோன்றவில்லை என்று கேட்பதையும் நாம் காணலாம்! கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடாத்தும் மக்கள் மலிந்த சமூகத்தில் பெயர் தெரியாத பல நோய்கள் தோன்றுவதில் வியப்பில்லை. மற்றவர்களுக்கு வராததும் புதிதுமான ஒரு நோய் தமக்கு வந்திருப்பதாக மருத்துவர் மொழிவதால் அளவற்ற மகிழ்ச்சி அடையும் பணக்காரர் பலர் இருக்கின்றனர்! இதனல் பிறரினின்றும் தாம் எல்லா வகையிலும் உயர்ந்திருப்பது கண்டு எண்ணி மகிழ்வது பணம் படைத்த சிலரது இயல்பு! இத்தகையவர்களின் இயல்பறிந்து அவர்களுக்காகவே, உச்சரிக்கவும் கடினமான ஒரு பெயரை நோயின் பெயராகப் புனைந்துதர வேண்டியது மருத்துவர் சிலரின் பணிகளுள் ஒன்ருயுள்ளது! என்னே விந்தை உலகம் இது!

விந்தை நோய்களுள் 'புற்று நோய்' முதலிடம் பெறுகின்றது. இதனல்தான் இந்நோய் தோன்றுகின்றதென அறுதியிட்டுச் சொல்ல முடியாதபடி மருத்துவர்களின் மூளையைக் குழப்புவதில் புற்று நோய்க்குப் பேரின்பம் போலிருக்கிறது! இல்லாவிடில் இதன் போக்கை கட்டிப் பிடிக்க முடியாதபடி மருத்துவர்களுக்குப் போக்குக் காட்டுவானேன்? மருத்துவர்களும் விடுவதாயில்லை. 'உனக்காயிற்று, எங்களுக்காயிற்று' என்று முயற்சி செய்து இதனை ஒழித்துக்கட்ட வழிவகைகளைக் கண்டறிந்துள்ளனர். தோன்றும் காரணங்களையும் கண்டு பிடித்துள்ளனர். இத்தகைய புற்றுநோயின் குணுதிசயங்களை இங்கு காண்போம்.

## தோன்றக் காரணம்

நமது உடலில் பல திசுக்கள் உள்ளன. உடலுறுப்புக்கள்

நல்ல நிலைமையில் இருக்க இத் திசுக்கள் காரணமாக உள்ளன. திசுக்களில் உயிரணுக்கள் உள் ளன. உயிரணுக்கள், திசுவின் நன்மைக்காகவே பணியாற்று பவை. உடலின் எப்பகுதியி லேனும் பழுது ஏற்படுங்காலத்து அவ்விடத்திலுள்ள திசுவும் பாதிக்கப்படுகின்றது. அத்திசுவி லுள்ள உயிரணுக்கள் சிதை வைச் சரிசெய்யும் வகையில் பல் கிப் பெருகுகின்றன. இங்ஙனம் ஏற்படும் உயிரணுக்களின் பெருக்கம் சில சமயங்களில் தேவைக் கதிகமாக ஏற்படுவ துண்டு. அளவுக்கு அதிகமாகி உயிரணுக்கள் புற்றுப்போல் குவிந்துவிடும். இங்ஙனம் ஏற் படும் அபரிமிதமான உயிரணுக் களின் வளர்ச்சியே புற்று நோயா கப் பரிணமிக்கின்றது என்பது ஒரு சாரார் வாதம். இதற்கு எவ் விதமான கிருமியோ 'வைரசோ' (Virus) காரணமல்ல.

புற்றுநோய் தோன்றத் துணை புரிபவை எவை என்ற வினா எழு வது இயற்கை. இது பற்றியும் திட்டவட்டமான முடிவுகள் தெரி விக்கப்படவில்லை.

புலால் உணவு தொடர்ந்து புசிப்பதாலும் புற்று நோய் தோன்றும் என்பது ஒரு மருத் துவ அறிஞரின் ஆராய்ச்சி அறி விக்கும் உண்மை. (ஆதாரம்: Dr. Jomes Braithwaite, M. D. Pamphlet on the subject published in 1902) என்றாலும் புலால் உண்ணாதவர்களுக்கும் இந்நோய் வருவதுண்டு. புலால் உண்பவர்களிலும் பலருக்கு வரு வதில்லை.

எப்பொழுதும் வெற்றிலை, புகையிலை குதப்பிக் கொண்டிருப் பவர்களுக்கு வாயிலும், உதட்டி லும் புற்றுநோய் எளிதில் தோன்றலாம். எப்பொழுதும் 'சிகரெட்' பிடிப்பவர்களும் புற்று நோய் விரிக்கின்ற வலையில் எளி தில் சிக்கிக்கொள்வர்! புகை யிலையை எவ் உருவத்தில் பயன் படுத்தினாலும் நாளடைவில் புற்று நோயால் பீடிக்கப்படக் கூடும்.

புற்று நோய் பரம்பரை நோயா? அல்ல. பொதுவாகப் பார்க்குமிடத்து ஒரு சில வகைப் புற்றுநோய்களைத் தவிர, புற்று நோய், குடும்பங்களில் 'பரம் பரைச்' சொத்தாக 'பாத்யதை' கொண்டாடுவதில்லை! கண்ணில் தோன்றக் கூடிய சில வகைப் புற்று நோய்களே பரம்பரை யாகத் தோன்றக் கூடியவை.

## சிறப்பியல்புகள்

மருத்துவர்களுக்கே ஆட்டங் காட்டும் 'ஆற்றல்' கொண்ட புற்றுநோய் தனித்த சில சிறப் பியல்புகள் கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை. பெரிதும், வய தானவர்களிடமே குடியேறக் கூடியது புற்றுநோய். இள வய தினர் இந்நோய்க்கு அதிகம் இலக்காவதில்லை. மருத்துவ அறி ஞர்களது கூற்றுப்படி புற்று நோய், பொதுவாக, நாற்பது வயதைத் தாண்டியவர்களிடமே தோன்றுகின்றது.

எந்த நோயானாலும் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு சிகிச்சை யளிக்கப்பட்டாலன்றி நீங்குவது அரிது. புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தக்கமுறையில் குணப்படுத்தினா லன்றி நீக்குவது அரிதிலும் அரிது.

## வகைகள்:

புற்றுநோய் என்று பொது வாகக் கூறப்பட்டாலும், புற்று

நோயில் பல வகைகள் உண்டு. உடலில் புற்றுநோய் தோன்ருத இடமேயில்லை! கண், வாய், இரைப்பை என்று எல்லாவித மான உறுப்புக்களையும் தன் வயப்படுத்தும் தனித் திறமை புற்றுநோய்க்கு உண்டு!

பெண்களின் சூல் பைகளில் (Ovaries) தோன்றக்கூடிய புற்று நோய் பெரும் தீங்கு விளைக்கக் கூடியது; சூற்பை முழுவதும் பரவி அவைகளைப் பெருக்கச் செய்து பெருமளவில் தீங்கு விளைக்கும்.

வாயிலும், உதட்டிலும் தோன் றும் வகை முகத்தின் பொலி வைக் கெடுத்துவிடும்.

மார்பகப் புற்றுநோய் பெரும் பாலான பெண்களிடம் காணப் படுகின்றது. இவ்வகைப் புற்று நோயால் அவதியுறுபவர் எண் ணற்றவர்.

இரைப்பையில் தோன்றும் புற்று நோயும் பலரைப்பீடித் துள்ளது. இன்று புற்றுநோயால் அவதியுறுபவர்களில் பலர் இரைப்பைப் புற்று நோயால் பீடிக்கப்பட்டவர்களே.

## குறிகள் (SYMPTOMS)

புற்றுநோய் தோன்று முன் நன்கு உணரவல்ல சில குறிகள் உடலில் காணப்படுகின்றன.

அத்தகைய குறிகளாவன :–

1. உடம்பில் எந்த இடத்தி லேனும் கட்டி தோன்றுதல்.

2. விட்டு விட்டு (தொடர்ச்சி யில்லாமல்) இரத்தம் வடிதல்.

3. விடாத அசீரணம்.

4. மலப் போக்கில் காரணம் கூற முடியாத மாறுதல்கள்.

5. காரணம் கூற முடியாத வகையில் உடம்பின் எடை குறைதல்.

6. மரு இருந்தால் அதன் நிறமோ-அளவோ மாறுதல்.

7. விரைவில் ஆருத புண் தோன்றுதல்.

("கலைக்களஞ்சியம்")

மேற்காணும் குறிகளில் ஏதே னும் சில தோன்றினலும் உடனே தாமதமின்றி புற்று நோய் நிலையம் சென்று புற்று நோய்தான என்று உறுதி செய்துகொண்டு முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாம். காலங் கடத்தாது உறுதி செய்து கொண்டு உடனே சிகிச்சை யைத் தொடங்குவது நலம் பயக் கும். ஆண்டுக்கு ஒருமுறை யேனும் மருத்துவரிடம் புற்று நோய் தோன்ருதிருக்காவெனப் பரிசோதித்துக் கொள்வது நன்று.

## சிகிச்சை :

நோயின் இயல்பு, நோயாளி யின் உடல் நிலை என்பனவற் றின் அடிப்படையில் புற்று நோயைப் போக்க வெவ்வேறு விதமான முறைகள் கையாளப் படுகின்றன. இன்று புற்றுநோய் சிகிச்சையில் கீழ்க்காணும் முறை கள் பயன் படுத்தப்படுகின்றன :

1. அறுவைச் சிகிச்சை (Surgery)

2. எக்ஸ்-ரே சிகிச்சை (X-Ray Therapy)

3. இரசாயன சிகிச்சை (Chemotherapy)

4. கதிரியக்கச் சிகிச்சை (Radio-therapeutic Treatment)

ஆரம்ப நிலையிலுள்ள புற்று நோயைப் போக்க அறுவை

சிகிச்சையே பயன்படுத்தப்படுகின்றது. பக்கத்திலுள்ள பிற உடல் உறுப்புகளுக்கும் பரவாதபடி புற்றினை ஆயுதங்கொண்டு அறுத்தெறிவதே சுலபமான செயலாயுள்ளது.

சிலவகைப் புற்றுநோய்களை அவற்றின் தன்மைக்கேற்ப எக்ஸ்-ரே சிகிச்சையின் மூலம் குணப்படுத்தலாம்.

இரசாயன சிகிச்சை, (Chemo-therapy) இந்நாட்களில் பெரிதும் பயனாகின்றது. வளர்ந்து வரும் இச்சிகிச்சைமுறை சிறந்த பலனையே அளித்து வருகின்றது. உள்ளுக்குச் சில இரசாயனப் பொருட்களை உட்கொள்வதனால், அப்பொருட்கள் புற்றுநோயுடன் போராடி அவற்றை அழித்து விடுகின்றன.

மேற்கூறிய மூன்று சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அதிக அளவில் பயனாவது, செயற்கை முறையில் தயாரிக்கப்படும் கதிரியக்க ஐசடோப்புகளைக் கொண்டு செய்யப்படும் கதிரியக்கச் சிகிச்சையே ஆகும். இச்சிகிச்சை முறையை சற்று விரிவாகக் காண்போம்.

ரேடியம் பற்றிய ஆய்விற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த க்யூரி தம்பதியர் 1934-ம் ஆண்டில் செயற்கைக் கதிரியக்கத்தைக் கண்டறிந்தனர். அன்னார்களது ஆய்வின் முடிவுப்படி இலகுத்தனிமங்கள் மீது நியூட்ரான்கள் (Neutrons) மோதுவதால் அவை கதிரியக்க ஐசடோப்புகளாக மாறுகின்றன என்று தெரிந்தது. இங்ஙனம் செயற்கை முறையில் தயாரிக்கப்படும் கதிரியக்க ஐசடோப்புகள் பலவிதங்களில் பயனாகின்றன.

தைராய்டு சுரப்பியில் உண்டாகும் புற்றுநோயைப் போக்க அயோடின் 131 (Radio-active Iodine 131) பயன்படுத்தப் படுகின்றது.

எலும்புச்சதைப் புற்றுநோயைப் (Cancer of Bone Marrow) போக்க, கதிரியக்க எரிகை $P^{32}$ (Radio-Active Phosphorous-$P^{32}$) உபயோகப்படுகின்றது.

கதிரியக்கத் தங்கமும் சில வகைப் புற்றுநோய்களில் பயன்படுத்தப்படுகின்றது.

Co-60 என்ற கதிரியக்க கோபால்ட்டே அதிக அளவில் பயனாகும் ஐசடோப்பாகும். Co-60, 1·17, 1·32 மில்லியன் எலெக்ட்ரான் வோல்ட் (1·17 and 1·32 Mev) சக்தி வாய்ந்த காமாக்கதிர்களை உற்பத்திசெய்ய வல்லது.

கதிரியக்க சிகிச்சையில் 'டெலி தெராபி யூனிட்' (Tele-Therapy Unit) என்ற கருவி பயன்படுத்தப்படுகின்றது. நோயின் இயல்பைப் பொறுத்து கதிரியக்க ஐசடோப்பு தேவையான அளவு கருவியினுள் வைக்கப்பட்டிருக்கும். நோயாளி கருவியின் முன் படுத்த நிலையில் கிடத்தப்படுவார். நோயாளியின் உடலில் புற்றுநோயுள்ள இடத்தைக் குறிவைத்து கருவியின் முனை திருப்பப்படும். கருவியை இயக்க, கதிரியக்கக்கதிர்கள் வெளியாகி புற்றுள்ள இடத்தைத்தாக்கி அதனை அழித்துவிடும். நோயாளியின் உடலில் கதிரியக்க விளைவை அறிய கெய்கர் எண்ணி (Geiger Counter) என்ற கருவியைப் பயன்படுத்துகின்றனர். இதன் அடிப்படையில் தக்க பிற ஏற்பாடுகள்—நோயை முற்றிலும் குணப்படுத்த செய்யப்படுகின்றன. ★

தமிழ் இலக்கியம் :
இன்றைய நிலை

# கதையும் காதலும்

ச. செந்தில்நாதன்

*[கதையிலும் காதல்! படத்திலும் காதல்! பாட்டிலும் காதல்! இது காதல் காலம் (Era of Love) என்றே கூறலாம்! புதிய எழுத்தாளர்களின் காதல் பற்றி நகைச் சுவையுடன் எழுதுகிறார், கட்டுரையாளர். புராணங்கள், இதிகாசங்கள், பண்டை இலக்கியங்கள்—இவற்றிலும் இதைத்தானே காண்கிறோம்? கண்ணன் கதைகளில் கொலையும் காதலும் தவிர வேறென்ன இருக்கிறது?]*

தமிழ் நாட்டில் எத்தனை காதல் திருமணங்கள் நடக்கின்றனவோ, நமக்குத் தெரியாது; ஊருக்கு ஊர் எத்தனை "காதல் சந்தைகள்" இருக்கின்றனவோ, நாம் அறியோம். ஆனால், தமிழ் நாட்டில் "சின்ன" ஏடுகள் முதல் "பெரிய"(?) ஏடுகள் வரை வெளியிடும் கதைகளை யெல்லாம் படிக்கின்ற போது, காதலைத் தவிர இந் நாட்டில் வேறு பிரச்சினைகள் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. எந்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு எழுதினாலும் அதைக் காதலில் முடிக்கும் திறமை, தமிழ் எழுத்தாளர்களின் "சமுதாய அறிவு"க்குத் தக்க சான்றாகும்; தமிழ்த் திரைப் படங்களைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. "காதலிக்க நேரமில்லாமல்" வெள்ளி விழா கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்!

சமுதாயத்தைச் சீர்திருத்தி எல்லாப் பிரச்னைகளையும் முடித்துக் கொண்டு, இலக்கிய உலகில் வளர்க்க வேண்டிய எல்லாத் துறைகளையும் வளர்த்து முடித்துக் கொண்டு, காதல் பற்றித் திறனாய்வு செய்து கொண்டிருக்கின்றனர் நமது எழுத்தாளர்கள்! தமிழ் எழுத்துக்களின் தரத்தை உயர்த்தி, நோபல் பரிசு பெற வேண்டாமா? அதனால்தான் முழு மூச்சுடன் காதலில் புகுந்துள்ளனர்! தமிழ் அன்னை இவர்களை எண்ணி எண்ணிப் பெருமைப் படுவாளாக!

நமது எழுத்தாளர்களின் ஆழ்ந்த அறிவிலும், ஆற்றலிலும் உருவாகும் தலைவனும் தலைவியும் சாதாரணமானவர்கள் அல்லர். மிகப் பெரியவர்கள்; வல்லவர்கள். நோபல் பரிசுப் பெறப் போகின்றவர்களாயிற்றே!

அதோ, நெய்தல் நிலத் தலைவன் – சங்க காலத் தமிழனின் பேரன், கடற்கரையில் மெல்ல நடந்து வருகிறான். முள்ளம் பன்றி போல் (அது அன்னம் போல் அழகானது) தலை முடியை

அழகு செய்து, அமெரிக்க மாட்டுக்காரனின் (அடேயப்பா!) குழாய் அணிந்து, வெள்ளை பீடி (சிகரெட்) புகை கக்க, இயற்கையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான்.

சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டிருக்கிறாளே, அவள் தான் தலைவி; மற்றவர்கள் தோழிகள். தலைவியின் அழகே அழகு. குரங்கிலிருந்து அல்ல, மனிதன் குதிரையிலிருந்து வந்தவன் என்று புதிய அறிவியல் ஆராய்ச்சி செய்ய சான்று தரும் குதிரைவால் கொண்டை; முன் பக்கம் பிடரி முடி. தமிழர் தம் சிக்கன வாழ்வை எடுத்துக்காட்டுவது போல் உடை. இந்தக் கோலத்துடன் தலைவி உரையாடிக் கொண்டிருக்கிறாள், தோழிகளுடன்.

தலைவனின் நண்பன் – பாங்கன், சுண்டல் கொண்டு வருகிறான்; தலைவி வாங்குகிறாள். சில வினாடிகள் கழித்து, "ஐயோ பணப் பையைக் காணோமே" என்று கலங்குகின்றாள். "உன்னை நம்பி நாங்களும் ஒன்றும் கொண்டு வரவில்லையே," என்று (தோழிகள்) பரிதாபமாய்ப் பார்க்கின்றனர்.

அருகே இருக்கும் தலைவன் இந்த அவலக் குரல் கேட்டு எழுகின்றான். தடந்தோள் துடித்தெழ பணம் கொடுத்து உதவுகின்றான். தலைவி, விழியாலே மாலை போடுகிறாள்! காதல் கனிகிறது; திருமணம் முடிகிறது. இது "சுண்டல் தரு புணர்ச்சி." இன்னும் திரைப்பட அரங்குகளிலும், வண்டிகளிலும் இதே போன்ற காதல் உண்டு!

## தடை ஏது?

சங்க காலத்தை விட இக்காலச் சமுதாயம் மிகவும் பண்பட்டிருக்கின்றது போலும்! சங்க காலத்திலாவது திருமணத்திற்குப் பெற்றோர் தடை செய்தால் "உடன் போக்கு" என்ற நிலை ஏற்படும். நமது எழுத்தாளர்கள் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கியவர்களாதலால், தலைவனையும் தலைவியையும் மாலையில் சந்திக்க வைத்து, மறுநாள் காலையில் மணமுடித்து வைத்து விடுவார்கள்! அதற்கு ஏற்றாற்போல நமது சமுதாயமும் இருக்கின்றது. இங்கே சாதிப் பிரிவுகள் இல்லை; ஏற்றத் தாழ்வுகள் இல்லை. இதனால் சமுதாய அமைப்பில் காதலுக்குத் தடை ஏதும் இல்லை.

இந்தக் காதல் கதைகளை எழுத எழுத்தாளர்கள் படும் வேதனையும், செய்யும் சோதனையும், எளியன அல்ல. ஒவ்வொரு நாளும் துணிக் கடைக்கும், தையற் கடைக்கும் போக வேண்டும்.

சேலைகளின் புதுப் பெயர்களையும், புது முறைக் கத்தரி வெட்டுகளையும் அறிந்து கொள்ள வேண்டும். அப்போது தானே, தலைவியை நாகரிக மங்கையாகக் காட்ட முடியும்? "நைலக்ஸ்" சேலை வழக்கிற்கு வந்த காலத்தில், நைலான் சேலை கட்டிக் கொண்டு தலைவி வந்தாள், என்று எழுதி விட்டால், படிப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? அதனால்தான் நமது எழுத்தாளர்கள் துணிக் கடையிலும் தையற் கடையிலும் "குடி"யிருக்கிறார்கள்!

மேலும், பல எழுத்தாளர்களுக்குச் செய்தித்தாள்கள் படிக்க வேண்டிய "அவசியமும்" ஏற்பட்டு விடுகின்றது. எந்தெந்த திரைப்படங்கள் எங்கெங்கு நடக்கின்றன என்பதைக் காட்ட விளம்பரம் வருகின்றதல்லவா?

(தொடர்ச்சி 80-ம் பக்கத்தில்)

# கடிதங்கள்

## அய்க்கிய முன்னணி

"குத்தூசி" ஆகஸ்ட் இதழில் 'சரிதா' கடிதமும் இடம் பெற்றுள்ளது.வ, ரா; சோம. லெ., டி. கே. சி., கல்கி ஆகியவர்களை ஒன்ருகச் சேர்த்து ஒரு புதிய "இலக்கிய ஐக்கிய முன்னணி" அமைத்திருக்கிறீர்கள். வேறுபாடுகளிடையே ஒரு கொள்கை-நூலிழை போல் செல்வதைக் காணமுடிகிறது.

வ. ரா. வின் தலைமையில் நாங்கள் "பாரதி மன்றம்" நடத்தியது; பாரதி நூலைப்படித்துவிட்டு, பூணூல் அணிய மறுத்தது, பழைய கல்கி இதழ்கள், சோம. லெ. எழுதிய கட்டுரையும் அவரோடு அதே பத்திரிகையில் அன்று எழுதிய கட்டுரைகளும், இவைபோன்ற எத்தனையோ நிகழ்ச்சிகள் நினைவிற்கு வருகின்றன.

ஜி. சீனுவாசன்
(பெங்களூர்)

## மொழி ஆராய்ச்சி

'குத்தூசி'யில் தொடர்ந்து வெளிவந்த 'பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள்' என்ற கட்டுரைத் தொடர் ஓர் அற்புதப் படைப்பு என்றே கூறுவேன்.. ஆழ்ந்த ஆய்வின் அடிப்படையில் அமைந்துள்ள இக்கட்டுரைகள் ஓர் ஆராய்ச்சிக் கருவூலமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு துறையிலும் இம்மாதிரி ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ப. நா. பாலசுப்பிரமணியன்
(சைதை-சென்னை)

## கோல்ட்ஸ்மித்

ஆகஸ்ட் மாதத்திய 'குத்தூசி' இதழில் வேலூர் நண்பர் ஆர். கிருட்டினமூர்த்தி அவர்கள் எழுதியிருந்த கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள். அதில் நான் எழுதிய 'கோல்ட்ஸ்மித்' தைப்பற்றிய கட்டுரையில் சில நம்பத்தகாத கூற்றுக்கள் இருந்ததாக, நண்பர் குறைகூறியிருந்தார். அவர் கூறிய செய்திகள் தவருனவையே யாகும்; தாமஸ் பாபிங்டன் மெக்காலே எழுதிய ஒரே ஒரு கட்டுரையைப் படித்துவிட்டு, நண்பர் என் கருத்தைக் கண்டித்துள்ளார். ஆனால் மெக்காலேயின் காலத்துக்குப் பின்னர் வெளியான கோல்ட்ஸ்மித்தின் பன்னிரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களை ஆராய்ந்த பின்னரே என் கட்டுரையை எழுதினேன். அவை:—

ஆஸ்டின் டாப்ஸன்; ஜே. பிரையர்; வாஷிங்டன் இர்விங்; ஜான் பார்ஸ்டர்; வில்லியம் பிளாக்; எஸ். எல். க்வின்; வில்லியம் ஃபிரீமன்; டி. ஸ்காட்; ஜே. ரேய்னல்ட்ஸ்; ஆர். ஏ. கிங்; எப். எப். மூர்; கே. ஸி. பால்டர்ஸ்டன்.

தாமஸ் மெக்காலேயின் நூல்களிலேயே பற்பல குறைபாடுகளைக் கண்டு எட்மண்ட் வில்ஸன், டெஸ்மாண் மக்கார்த்து, எட்மண்ட் கோசி, வி. எஸ் பிரிட்செப் போன்ற பேரறிஞர்கள் இலக்கியத் திறனய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். ஏறக்குறைய எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு கட்

டுரையை ஆதாரமாகக்கொண்டு நண்பர் என்னிடம் குறைபாடு காண்பதை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை.

காதம்பரி
(சிதம்பரம்)

## பழைய நாணயங்கள்

தங்கள் ஆகஸ்டு மாத இதழில் "பண்டைத் தமிழக நாணயங்கள்" என்ற தலைப்பினைக் கொண்ட கட்டுரையை கண்ணுற்றேன். கட்டுரையாளர் பண்டைய மூவேந்தர்களின் சீரும் சிறப்பு மிக்க அரசினைப்பற்றியும் அவர் காலத்து வழக்கிலிருந்த நாணயங்களையும் அவர்களது நாட்டெல்லையையும் சரித்திர பூர்வமான சான்றுகளுடன் ஆராய்ச்சிமூலம் வாசகர்களுக்கு எடுத்து மிக அழகாக வழங்கியுள்ளார். இது போன்று பண்டைய பல்லவ மன்னர்களின் அரசினைப் பற்றியும் அக்காலத்து வழக்கிலிருந்த நாணயங்களையும் அதையொட்டிய வரலாற்றையும் ஆராய்ந்து வாசகர்களுக்கு தொடர்ந்து வழங்கினல் மிக்க நலமாயிருக்கும.

தி. சுப்பிரமணியம்
(உறந்தை, திருச்சி).

## இன்றையத் தேவை

ஆகஸ்டு மாத இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தும் அறிவுக்கு விருந்தாக அமைந்திருந்தன. குறிப்பாக, இன்றைய நிலையில் கடவுளின் பெயரால் நடக்கின்ற அக்கிரமங்களும், அவற்றின் பெயரால் உழைக்காது உடலை வளர்க்தும் சோம்பேறிகள் கூட்டத்தையும் வன்மையாகக் கண்டித்து "கோயில்கள் எதற்காக?" "நான் கோயிலை வெறுப்பதேன்?" என்று இரு கட்டுரைகள் பகுத்தறிவுக்கு மிகவும் விருந்தாக அமைந்திருந்தன. இவை போன்ற கட்டுரைகள் தங்களது இதழில் அதிக அளவு இடம் பெற வேண்டும். அதனல் சமுதாயம் திருந்த வழியுண்டு என்று கருதுகின்றேன்.

கே. வி ஸ்டாலின்
சென்னை–15.

[78–ம் பக்கத் தொடர்ச்சி]

அதையெல்லாம் படிக்க வேண்டும். புதுப்படம் வெளியாகி, கூட்டம் இருக்கும் நாளில் தானே காதலர்களைச் சந்திக்க வைக்க வேண்டும்? அதற்காக அது பற்றிய செய்திகளை யெல்லாம் சேகரிக்க வேண்டும். இப்படி யெல்லாம் வேதனைப் பட்டு எழுதும் எழுத்தாளர்கள் நிலை இன்னும் உயரவில்லையே என்பதை எண்ணும் போது வருத்தமாகவும் இருக்கின்றது! என்ன செய்வது? தவறி இவர்கள் இந்த நாட்டில் பிறந்து விட்டார்கள். இவர்கள் இங்கிலாந்தில் பிறந்திருந்தால், ஆங்கில இலக்கிய உலகம் எவ்வளவு "மரியாதை" அளித்திருக்கும்!

என்ருலும், இந்த எழுத்தாளர்களின் விடாமுயற்சியைப் பார்க்கின்ற போது எப்படியும் நோபல் பரிசு பெற்று விடுவார்கள் என்றே தோன்றுகிறது. ஏனெனில், காதல் கதையில் யாரும் செய்யாத ஆராய்ச்சியை அல்லவா இவர்கள் செய்கிருர்கள்? நோபல் பரிசு பெறவேண்டும் என்ற ஒரே இலட்சியத்திற்காக வேறு எழுதுகின்ருர்களே! உண்மையில் இவர்களைக் கண்டு, தமிழ்த்தாய் மனம் "குளிர்கிருள்" (நடுங்குகிருள்)!

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனய் நகர், சென்னை-30

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

# திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பார்வை
12. செஞ்சிலுவை தந்தவர்
13. ரேடியம் கண்டவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன் படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

## "எண்ண அலைகள்"

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிட்டுள்ளோம். 240 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 2-40. நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

**விற்பனைக்குத் தயார்!**

## முருகன் & கம்பெனி

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

யும்? கேட்க நாதியில்லையே! ஒவ்வொரு வோட்டரும் செய்யச்சொன்னால் நடக்கும். 1967 தேர்தல் வர இருக்கிறது. சரியான பிரசாரம் தேவை. தமிழனுக்கு இருக்கிற கட்சிகள் எல்லாம் அவனுடையதே. ஆனால் பலன் பூஜ்யம்! இன்னும் "பி ரா ம ண ர் கள்" போர்வை எடுக்க முடியவில்லையே! காரணம், நமது கொள்கைக்கு மக்கள் ஆதரவு, ஓட்டு குறைவு! அதனால்தான் மக்களுக்கு தெரிவிக்கச் செய்ய வேண்டும். அன்று திரு எஸ். குருசாமி அவர்கள் அந்தப் போடு போட்டு எழுதியிருக்காவிட்டால், இன்று இந்த அளவாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்குமா? மீண்டும் தொண்டு செய்ய அவரை அழைக்கிறது தமிழகம்.

"பிரசாரத்திற்கு நாடு அடிமை" என்பதுபோல, தங்களின் சாதி ஒழிப்புத்திட்டம் மிக மிக உயர்ந்தது. இன்று வரை யாரும் சொல்லத் துணியாதது. யாரும் தங்களின் திட்டத்தை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், ஒவ்வொருவரின் மனதில் ஏறவேண்டாமா? தெரிய வேண்டாமா? மாதம் ஒரு முறை வெளியிட்டால் போதுமா? புறப்படுங்கள், பட்டி தொட்டிக் கெல்லாம்! வெளியிடச்செய்யுங்கள் (காசு கொடுத்து) எல்லாத்தினசரிகளிலும்! கண்ட உண்மையை எல்லோருக்கும் படைக்க வேண்டுகிறேன்.

**எல். ஜி. கணேசன்**
**(லால்குடி)**

## விழிப்புணர்ச்சி

"குத்தூசி" இதழ் தமிழகத்திலே ஒரு புத்தம் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தரமான கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி வெளிவரும் ஒரே திங்களிதழ் "குத்தூசி" ஒன்றுதான். சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் மூட நம்பிக்கைகளை அஞ்சாமல் எடுத்துக்கூறி பகுத்தறிவை மக்களிடம் பரப்பிவரும் 'குத்தூசி' இதழ் திங்களிரு முறை வெளிவந்து நாட்டுக்கும் மக்களுக்கும் நற்தொண்டு புரிய வேண்டுகிறேன். தொடர்ந்து வெளிவர என் நல் வாழ்த்துக்கள்!

**தங்க சங்கரபாண்டியன்**
(சுவரல்பேட்டை)

*"சிந்திக்க வேண்டிய நிலையில் உணர்வுக்கு இடந் தருவதும், உணர்வுக்கு இடந்தர வேண்டிய நிலையில் சிந்தனைக்கு இடந்தருவதும்தான், நம் வாழ்க்கையில் நிகழும் பாதித் தவறுகளுக்குக் காரணமாயிருக்கிறது."*

**—ஜே. சி. காலின்ஸ்**

# குத்தூசி

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;
ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5    கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

**ஹிக்கின்பாதம்**
ரயில்வே புக் ஸ்டால்களில் கிடைக்கும்.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனய் நகர் சென்னை-30.

உங்கள்

# எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதங்களை

துரிதமாக அனுப்ப

விசேஷமாக தயாரிக்கப்பட்ட இளஞ்சிவப்பு நிறத்திலுள்ள புதிய கவரை உபயோகியுங்கள். எல்லா தபால் நிலையங்களிலும் கிடைக்கும். விலை 28 பைசா ...



இக் கவரை பயன்படுத்துவதால்

**துரிதமாக**

கடிதங்களை பிரிப்பதில்
அனுப்பி வைப்பதில்
பட்டுவாடா செய்வதில்
உதவியாக உள்ளது

இந்திய தபால்-தந்தி இலாகா

DA-65/171

Regd. No. M. 7629 KUTHOOSI September - 1965

# ஞாபகமிருக்கட்டும்

## அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம்



- குழந்தைகளுக்கு சிறந்த கல்வி, நல்ல ஆகாரம், ஆரோக்கியமான வாழ்க்கை நிலைகள் இவைகளை அளிக்க வேண்டும். புத்திசாலியான பெற்றோர்கள், தங்களால் எவ்வளவு குழந்தைகளை வசதியாக வளர்க்க முடியுமோ அவ்வளவு குழந்தைகளை மட்டுமே அடைகிறார்கள்.

கர்ப்பத்தடைககு பல முறைகள் உள்ளன. இவைகளுள் சமீபத்தில் கண்டுபிடிககப்பட்ட சிறந்த முறை 'லூப்' இது வசதியானது. மிகவும் நம்பிக்கையளிக்கக கூடியது. இலவசமாக சப்ளை செய்யப் படுகிறது.

லூப்பைப் பற்றிய விவரங்களையும், ஆலோசனையையும், பயிற்சி பெற்ற டாகடரை கேடக அருகிலுள்ள

**குடும்ப க்ஷேம நல திட்ட நிலையத்திற்கு வாருங்கள்**

DA-65/218